
# கோபுரம்





நுவரெலியா ஸ்ரீலங்காதீஸ்வரர் ஆலயத்தில் அருள்மிகு சிவபாலயோகி மகராஜ் அவர்கள் இலிங்காபிடேகம் செய்து வைக்கும் காட்சி. அருகில் நிற்பவர் மாண்புமிகு அமைச்சர் செ. இராசதுரை அவர்கள்.



காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் மாண்புமிகு அமைச்சர்

# கோபுரம்

இந்து சமய ஆக்கங் கருதிய திங்கள் இதழ்

[பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சு வெளியீடு]

— ஆசிரியர் —

தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

மலர் : 1 | துர்மதி ஆண்டு, கார்த்திகை மாதம் நவம்பர் 1981 | இதழ் : 2


## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| * உலக இந்து மாநாடு | ... | ... | 4 |
| * பகவான் கூறும் அருள்மொழிகள் | ... | ... | 5 |
| * மாநகர் மதுரை | ... | அமைச்சர் செ. இராசதுரை | 7 |
| * சைவ சித்தாந்தம் | ... | கே. வச்சிரவேல் முதலியார் | 9 |
| * சித்தர்களின் பாடல் | ... | மீ. ப. சோமசுந்தரம் (சோமு) | 13 |
| * அறம், அன்பு, அருள் | ... | இ. இரத்தினம் | 16 |
| * பரிபாடற் செவ்வேள் | ... | கலாநிதி ஆ. கந்தையா | 20 |
| * ஆனந்த நடனம் | ... | வை. அநவரதவிநாயகமூர்த்தி | 27 |
| * சுவாமி யோகேஸ்வராநந்தர் | ... | வே. சதாசிவம் | 30 |
| * பாராட்டுரைகள் | ... | ''புலவர் ஏறு'' ந. ரா. முருகவேள் | 31 |
| * மதிப்புரை — ''கோபுரம்'' | ... | ''இந்து சாதனம்'' | 33 |
| * இராசகோபுர நிதி திரட்டல் | ... | ... | 35 |
| * கொழும்பு மாநகரில் ''கோபுரம்'' இதழ் வெளியிட்டு விழா | ... | ... | 36 |

உ
சிவமயம்

# கோபுரம்

இந்து சமய ஆக்கங் கருதிய திங்கள் இதழ்

இலக்கியம், இசை, கூத்து, சமயம், தத்துவம், ஒழுக்க நெறி, நீதி. வரலாறு, கல்வெட்டு, புதைபொருள் ஆராய்ச்சி முதலான துறைகளைச் சார்ந்த கட்டுரைகளைக் கொண்டதாய்க் 'கோபுரம்' வெளிவரும்.

கட்டுரைகள், பெரும்பாலும் தெய்வ மணமும் இறையுணர்ச்சியும், சமயச் சார்பும், ஒழுக்க நெறியும் போற்றுவனவாகவே அமைந்திருக்கும். திருக்கோயில்கள், திருவிழாக்கள், விரதங்கள், குருபூசைகள் பற்றிய வரலாறுகளும், விளக்கங்களும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுவனவாம். இறையடியார்கள் ஞானிகள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளும், அருளுரைகளும், மரபுமொழி விளக்கங்களும் என்றென்றும் இடம் பெறும். திருக்கோயில்கள், கோபுரங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒளிப்படங்களும் வண்ணப் படங்களும் தொடர்ந்து இடம் பெறுவனவாகும்.

உலகத்தின் பல பாகங்களிலும் பரவி வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து சமய மக்கள் எல்லோரும் எளிதிலே விளங்கிக்கொள்ளத்தக்கனவாக - தூய இலக்கியச் செந்தமிழில் கலவையும் கொச்சையும் மணவாசனையும் சாராத வகையிலே தெளிவுபெற எழுதப்படும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

''கோபுரம்'' அலுவலகம்,
பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சு,
244 - காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4.

# அகில உலக இந்து மாநாடு

இந்துசமய ஏற்றத்தைப் போற்றவும,

எழுச்சியை ஊட்டவும்,

ஆத்மீக வளர்ச்சியை உலகெங்கும் பரப்பவும

இலங்கையிலே கூடுகின்றது

## அகில உலக இந்து மாநாடு - 1982

நாள்கள் :— 1982 சனவரி 22ஆம் தேதி முதல்
1982 சனவரி 26ஆம் தேதி வரை
ஐந்து நாட்கள் நடைபெறும்.

இடம் :— கொழும்பு.

- பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம்
- இராமகிருஷ்ண மிஷன் சருவதேச மாநாட்டு மண்டபம்
- கதிரேசன் மண்டபம்
- சரசுவதி மண்டபம்
- டவர் மண்டபம்.

**நிகழ்ச்சிகள் :-**

△ இந்து சமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு.
△ சமய நூல்கள், சிற்ப ஓவியக் கண்காட்சி.
△ கலை நிகழ்ச்சிகள்
△ கலாசாரச் சுற்றுலா

முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**கலந்துகொள்வோர் :-**

அகில உலக இந்து சமயச் சாதுக்கள், துறவிகள், சமயப் பெரியார்கள், யோகிகள், குருமகாசந்நிதானங்கள், அறிஞர்கள், கவிஞர்கள் யாவரும் ஒன்று கூடுகின்றார்கள். ஆத்மீக அறிவூட்டும் கருத்துக்களை இந்து சமய மக்களுக்கு இம் மாநாட்டின் வாயிலாக வழங்க இருக்கின்றார்கள்.

தபாற் பெட்டி இலக்கம்: 1700,
244, காலி வீதி, கொழும்பு-4.

# உலக இந்து மாநாடு

இலங்கையின் நீண்ட வரலாற்றிலே பொன்னெழுத்தாற் பொறித்து வைக்கப் பெற வேண்டியது, "உலக இந்து மாநாடு" நடாத்தப்படும் நிகழ்ச்சி. இலங்கையின் தலை நகராகிய கொழும்பு மாநகரிலே உலக இந்து மாநாடு நிகழவிருக்கிறது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சர், மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் உள்ளத்திலே என்றோ அரும்பி முகையாகி, படிப்படியாகப் பகலிரவாய்ப் போதாகி, மெல்லென மலர்ந்து இன்று நறுமணம் பரப்பவிருக்கும் உலகளாவிய தெய்வப் பணி அது. உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் பல்லின மக்களும் ஒருங்கே திரண்டு, கலந்து உரையாடியும் கருத்துப் பரிமாறியும் தத்தம் பண்பாட்டுச் சிறப்புகள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை எடுத்தோதியும் ஓதக்கேட்டும், உய்தி பெறுவதற்கு வழிகோலுகின்ற திருத்தொண்டு அது எனல் வேண்டும். போற்றப்பட வேண்டியதொரு நற்பணி. வாழ்த்துகின்றேம்.

இலங்கை பழம்பெருமை வாய்ந்த நாடு. இதிகாசங்களிலும், புராணங்களிலும், இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் புகழ் வாய்ந்த நாடு. இந்த நாட்டிலே இந்து சமயமும், பௌத்த சமயமும் கிறித்துவுக்கு முற்பட்ட காலந் தொடங்கியே வழங்கி வருகின்றன. பௌத்தர்களையே பெரும்பான்மையினராகக் கொண்ட இந்த நாட்டிலே இந்து சமயத்துக்கும் இந்து கலாச்சாரத்துக்குமெனத் தனியானதோர் அமைச்சினை இப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் உருவாக்கியுள்ளமை பாராட்டப்படவேண்டியது. அத்துடன், இந்த அமைச்சினுக்குப் பொறுப்பானவராக, அரசியலிற் பல்லாண்டு அநுபவமும் கூர்த்த மதியும் செயல்வன்மையும் இளமைத் துடிப்பும் மிக்க "சொல்லின் செல்வர்" இராசதுரை அவர்களை நியமித்த சனாதிபதியவர்களையும் யாம் பாராட்டாமலிருக்க முடியாது. இந்தப் பாராட்டுக்கு இலக்கான அரசாங்கமே இந்த மாநாட்டினையும் சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் யாவற்றையும் மேற்கொண்டு செய்து வருகின்றமையால், மாநாடு சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

மாநாட்டிலே உலக நாடுகளெல்லாம் ஆர்வத்துடன் பங்குகொள்ளவிருக்கின்றன. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்சு, செருமனி, பின்னிலாந்து முதலான நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பலர் வந்து பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள். கருத்தரங்கிலே படிக்கப் பெறுவதற்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

மாநாட்டின் போது புத்தகக் கண்காட்சி, சிற்ப சித்திரக் கண்காட்சி ஆகியவற்றுடன் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன. மாநாட்டிலே கலந்துகொள்ள வருகின்ற பிரதிநிதிகளுக்கான கலாசாரச் சுற்றுலா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு செய்யப்பட்டு வருகிறது. மாநாட்டுக்கு வந்து பங்குகொள்ளும் பிரதிநிதிகள் எல்லோருக்கும் தங்க வசதிகளும், விடுதிகளும், இல்லங்களும் ஏற்ற வகையிலே ஒங்குசெய்யப்பட்டு வருகின்றன.

எனவே, இந்து சமய வளர்ச்சியில் ஈடுபாடுடைய நன்மக்கள் எல்லோரையும் "வருக, வருக" என்று வாழ்த்துக்கூறி வரவேற்க வழிபார்த்திருக்கின்றேம். "நல்ல சமயமப்பா, இதை நழுவ விடுவாயோ?" என்று ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும் கேட்டுக்கொள்ளுகின்றேம். — ஆசிரியர்.

# பகவான் கூறும் அருள் மொழிகள்

> **''இளம் இதயத்தில் மறைந்து கிடக்கும் நற்சக்தியினை, கடந்த காலத்தில் வாழ்ந்த பெரியோர்களின் கதைகளையும், சாதுக்களின் கதைகளையும் சொல்லி, விழித்தெழச் செய்தல் வேண்டும்.''**
>
> **— பகவான்.**

மேலே காட்டிய அறிவுரைக் கமையப் பகவான் தமது பேருரைகளிலே தத்துவம் நிறைந்த அரிய கதைகளை எடுத்துக் கூறுவார்கள். அக் கதைகள், சிறுவர்களுக்கு மட்டுமன்றி வளர்ந்தோர்க்கும் பயன்படுவனவாகும். அப்படியான கதைகளுள் ஒன்றினை இங்கே காணலாம்.

''ஒரு நாள் விஷ்ணு பகவான் முன்னிலையில் நாரதர், எந்தப் பக்தனும் தன்னை வெல்ல முடியாது என்று தற்பெருமை கொண்டார். ஆனால், இந்தத் தற்பெருமையானது, அகங்காரத்திலிருந்து விடுதலையடையும் ஒரு பக்தனுடைய தகுதிகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். ஆதலால், விஷ்ணு பகவான், சிறிய நிலத்தை உழுது பண்படுத்தும் ஓர் உழவன் மிகச்சிறந்த பக்தனாக இருப்பதாகவும், நாரதர் அவனைச் சந்தித்து அவனிடமிருந்து பக்தியின் கலையைக் கற்றுக் கொள்ளும் படியும் கூறினார். நாரதர் மிக்க அவமானமடைந்து, பெருத்த ஏமாற்றத்துடன் குறிப்பிட்ட கிராமத்திற்குச் சென்றார். அங்கு அந்த உழவன் தன் வயலிலும், மாட்டுக் கொட்டகையிலும், வீட்டிலும் உள்ள வேலைகளில் முழுமனத்துடன் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். மிக நெருங்கிக் கவனித்த பிறகுகூட அந்த உழவன் ஒரு நாளைக்கு அவனுடைய படுக்கையிலிருந்து எழுந்தபொழுது ஒரு முறையும், பகலுணவு உண்ணும் பொழுது ஒரு முறையும், இரவு படுக்கைக்குச் செல்லும் பொழுது ஒரு முறையும் ஆகிய மூன்று முறைக்குமேல் கடவுளின் நாமத்தை உச்சரிப்பதைக் காண அவரால் இயலவில்லை. அதைக் கண்ட நாரதர் இந்த எளிய பக்தியைவிடத் தான் இயற்கையாகவே மிகவும் தாழ்ந்து இருப்பதாகச் சொல்லப்பட்டதாக எண்ணினார் அவர் எப்பொழுதும் கடவுளின் லீலைகளைப் பற்றி இனிமையாகப் பாடிக் கொண்டும், நாம சங்கீர்த்தனத்தை எங்கும் பரப்பிக் கொண்டும் இருந்தார். இங்கே மண்ணின் முரடனான ஒரு மனிதன் நாள் ஒன்றுக்கு மூன்று முறை மட்டும் கடவுளின் நாமத்தை நினைத்துக் கொண்டிருந்தான். விஷ்ணு பகவான் இந்த உழவனைவிடத் தாழ்ந்தவனாக நாரதரைத் தீர்மானித்து இருந்தார். நாரதர் சொர்க்கத்திற்கு விரைந்து சென்றார். அவருடைய முகம் கோபத்தாலும் அவமானத்தாலும் சிவந்திருந்தது. ஆனால், விஷ்ணு பகவான் அவருடைய தோற்றத்தைக் கண்டு நகைத்தார். அவர் நாரதரிடம் ஒரு பானை நிறைய நீரைக் கொடுத்து அதைத் தலையிலே சுமந்து கொண்டு, ஒரு துளி நீரும் கீழே சிந்தாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி வரும்படி கேட்டுக் கொண்டார். நாரதரும் அப்படியே செய்தார். ஆனால், அம்மாதிரிச் செய்யும்பொழுது கடவுளின் நாமத்தை எத்தனை முறை நினைத்துக் கொண்டார் என்று கேட்ட பொழுது, நாரதர் தன் தலையிலுள்ள பானையை அசைக்காமலும், ஒரு துளி நீரும் கீழே விழாமல் இருக்க வேண்டும் என்ற ஆவலினாலும் கடவுளின் நாமத்தை முழுவதும் மறந்துவிட்டதாக ஒப்புக்கொண்டார். அப்

பொழுது விஷ்ணு பகவான், ''இந்த ஒரு பானை நீரைவிட, அதிக மதிப்புள்ளதும் கனமானதுமான, பாரங்களை அவன் தன் தலையில் நாளெல்லாம் சுமக்கிறான். அவைகளுக்கு எந்த விதமான கெடுதலும் நேரக்கூடாது என்று கவனத்துடன் இருக்கிறான். அப்படியிருக்க நாளொன்றுக்கு மூன்று முறையாவது கடவுளின் நாமத்தை உச்சரிக்கும் அந்த மனிதன் போற்றப்பட வேண்டியவன்.'! என்று கூறினார்.

### இவ்வளவும் கதை, இனி வருவது அருள்மொழி

''ஆதலால், குறைந்த பட்சம் நாளொன்றுக்கு மும்முறை அல்லது இரு முறையாவது நன்றியுடன் கடவுளின் நாமத்தை நினைவுபடுத்திக் கொண்டால் அது உங்களுக்கு மிக்க அமைதியை அளிக்கும். உங்கள் உலகக் கடமைகளை விடவேண்டியதில்லை. ஆனால், அவைகளை உங்கள் உதட்டிலே கடவுளின் பேரால் கடவுளின் அருளை உங்கள் தலையில் வரவழைத்துச் செய்யுங்கள். பக்கத்திலுள்ளவர்கள் அல்லது மற்றவர்களின் கடமைகளில் உங்களைத் துன்பப்படுத்திக்கொண்டு அவைகளிலிருந்து மீள முடியாத அளவுக்கு உங்களை நீங்கள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டாம். நிலத்திலும் ஆகாயத்திலும் உங்கள் முன் பரந்து கிடக்கும் இயற்கையின் அழகுகளைப் பற்றியும், நீங்கள் வளர்த்த பசுமையான பயிர்களைப்பற்றியும், திருப்தியும் மகிழ்ச்சியும் மேகத்தின் பரந்த காட்சியைப்பற்றியும், பறவைகளின் கீதங்களைப்பற்றியும் சிந்தனை செய்வதில் உங்கள் காலத்தைச் செலவு செய்யுங்கள். வயல்களின் வரப்பிலே செல்லும் பொழுதும், வாய்க்கால்களின் கரையிற் செல்லும் பொழுதும் கடவுளின் புகழைப் பாடுங்கள். அன்பின் நிரூபணமான இவைகளின் நடுவே வெறுப்பாகப் பேசாதீர்கள். இந்த அமைதியான சூழ்நிலையின் நடுவே கோபமடைந்து உங்கள் கூச்சல்களினாலும், சிந்தனைகளினாலும் இந்தச் சூழ்நிலையைக் கெடுக்காதீர்கள், உங்களுடைய கொடுமையான தற்பெருமையினால் இந்தக் காற்றைக் கறைப்படுத்தாதீர்கள்.''

பகவான் தமது பேருரைகளிலே கண்டிப்பான ''எச்சரிக்கை''செய்வதும் உண்டு. அப்படியான எச்சரிக்கை ஒன்றினையும் பார்ப்போம்.

''எல்லாவற்றையும்விட உங்கள் பழக்கங்களைச் சரிசெய்து கொள்ளுங்கள். ஒழுக்கத்தைத் தூய்மையாக்குங்கள். இந்த வட்டாரத்தில், சுருட்டுப் பிடிக்கும் ஒரு கெட்ட பழக்கம் மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறது. இந்தக் கெட்ட பழக்கம் பிரபஞ்சம் முழுமைக்கும் மிக விரைவாகப் பரவி வருகிறது. அது ஆரோக்கியம், ஆனந்தம், உற்சாகம், அமுதம் - அதாவது உடல்நலம், மகிழ்ச்சி, செய்கை, சாரம் ஆகியவைகளை அழிக்கிறது. புகை பிடிப்பது உங்கள் தாகத்தைத் தீர்க்காது. பசியுள்ள வயிற்றை நிரப்பாது. உங்கள் முகத்தை விகாரமாக்குகிறது. நுரையீரலை ஓட்டையாக்குகிறது. உங்கள் சக்தியை அழித்து உங்களையே அடிமையாக்குகிறது. உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். சமூகக் கூட்டங்கள் என்று தவறாக அழைக்கப்படும் நண்பர்களின் வலையிற் சிக்காதீர்கள். இவைகளையும், மற்ற கெட்ட பழக்கங்களையும் உறுதியாகக் கண்டிப்பாக விட்டுவிடுங்கள்.''

### கில்டா வியார்தோ

செருமனி நாட்டினரான கில்டா வியார்தோ சைவ சித்தாந்தத்தை 444 பக்கங்களில் செருமன் மொழியில் மொழிபெயர்த்ததோடு மாணிக்கவாசகர், சேக்கிழார், காரைக்காலம்மையார் பாடல்களையும் வழங்கியுள்ளார். விநாயக புராணம், பாகவத புராணம், சிவஞான சித்தியார் ஆகியவை செருமானிய மொழியில் மிளிர்வதற்கும் இவரே மூல காரணர்.

### கிரேக்கத்திலே கணபதி!

இந்துக்களுக்குக் கணபதி அறிவுக்கும் செயலுக்கும் முதற் கடவுள் ஆவார். அவரது யானை முகம் நுண்ணறிவுக்கும் சர்வ சக்திக்கும் சின்னமாகும். கிரேக்கர், கணபதியை நினைந்தே வியாபாரத்தையும் வீடு கட்டலையும் புத்தகம் எழுதுதலையும் யாத்திரை செய்தலையும் திருமணம் செய்தலையும் ஆரம்பிப்பார். அங்கே கணபதி ஆலயம் சண்டைக் காலத்திலும் சமாதான காலத்திலும் திறந்தே இருக்கும்.

### இந்தோனேசியாவில்.....

ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருவீழிமிழலை சேர்ந்தனாரது ''திருப்பல்லாண்டு'' இந்தோனேசியாவில் தொல்குடிச்செல்வர் இல்லங்களில் திருமணக்காலத்தில் ஓதப்பெறுகிறது.



# மாநகர் மதுரை



மாண்புமிகு அமைச்சர்
செ இராசதுரை

பாண்டியர் நாடு பழம் பெருநாடு. பாண்டியர் குடி பழங் குடி. மூ நாட்டு வேந்தர்களுள்ளே முந்தியவர் பாண்டியர். பழம் பாண்டிய நாடுதான் தமிழன் பிறந்தகம் என இன்றைய ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி" என ஐயனாரிதனார் பெருமிதத்தோடு குறித்தது, தென்னாட்டினை மிகப் பழைய காலத்திலே ஆட்சி புரிந்து கொண்டிருந்த பாண்டியர் குடியினையே சிறப்பாகக் கருதுவது எனக் கொள்ளலாம். மாணிக்கவாசக சுவாமிகளே "பாண்டி நாடே பழம் பதி" என அருளியுள்ளார்கள்.

பாண்டியர் ஆண்ட நிலப்பகுதி தென்கோடியில் அமைந்திருந்தமையால் அதை ஆண்ட பாண்டியர் "தென்னவர்" எனப்பட்டார்கள். "தென்றிசையாண்ட தென்னவன்" எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. "வாடாச் சீர்த் தென்னவன்" எனக் கலித்தொகை குறித்துக் காட்டுகின்றது. இந்த வழக்குகளுடன், தேவார ஆசிரியர்களும் பிறரும் இலங்கை மன்னனாகிய இராவணனைத் "தென்னவன்" எனவும் "தென்கையான்" எனவும் எடுத்தோதுவதை வைத்து நோக்கும் போது, இராவணனுக்கும் பாண்டியர்களுக்கும் யாம் இதுவரை கண்டுகொள்ளாத தொடர்பு ஏதாவது இருந்திருக்குமோ என்ற ஐயப்பாடு எழுகின்றது. இதனை இன்றைய ஆராய்ச்சியாளர் கூர்ந்து நோக்குவார்கள் என்று நம்புகின்றேன்.

பாண்டியர்களின் தலைநகர் மதுரை. முதன்முதலாக "மதுரை" என்று பெயர் பெற்றது பஃறுளியாற்றங் கரையில் அமைந்திருந்த தலைக் கழக இருக்கையாகிய "மதுரை" ஆகும். அதுவும், இடைக் கழக இருக்கையாகிய கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்ட பின்பே, இப்போதுள்ள வைகைக்கரை மதுரை அமைவதாயிற்று.

பாண்டியர் ஆட்சி புரிந்த தென்னாடு, தென்றிசையிலே நெடும் பரப்பளவைத் தன்னகத்தே கொண்டு திகழ்ந்தது என்றும், பின்னதாகக் கடல்கோள்களால் மெல்ல மெல்ல எல்லை சுருங்கியது என்றும், வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

*"அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி*
*வடிவே லெறிந்த வான்பகை பொறாது*
*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள*
*வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு*
*தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."*

*(சிலப்பதி, 11-17-22)*

என வருகின்ற சிலப்பதிகாரப் பகுதி, குமரி நாட்டின் தென்கரையில் அமைந்திருந்த பஃறுளியாற்றுடன் குமரி மலையும் கடல் கொள்ளப்பட்டமைபற்றித் தெளிவாக எடுத்தோதுவதைக் காண்கின்றோம்.

இந்த நிகழ்ச்சி கலித்தொகையிலும் கூறப்படுகின்றது.

*"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்*
*மெலிவின்றி மேற்சென்று மேவார்நா*
*டிடம்படப்*
*புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த*
*கிளர்கெண்டை*
*வலியினான் வணக்கிய வாடாச்சீர்த்*
*தென்னவன்"*

*(கலி. முல்லை. 104-7.)*

என்பதுதான் கலித்தொகையிற் கூறப்படுவது.

இவையிரண்டிலும் பாண்டியனைக் குறிக்கின்றதான "தென்னவன்" என்ற சொல் வருகின்றது. இந்தக் கடல்கோள்தான் தென்னாட்டினை அழித்த முதலாவது கடல்கோள் ஆகும்.

"இராசாவளி" என்னும் நூல் இலங்கையின் பழைய வரலாற்றினைக் கூறுவதாகும். அந்த நூலிலே "துவாபர யுகத்திலே இராவணனது துட்டத்தனத்தின் காரணமாக அவனுடைய கோட்டையையும் 25 மாளிகைகளையும் மன்னாருக்கும் தூத்துக்குடிக்கும் இடைப்பட்ட 400,000 வீதிகளையும் கடல் கொண்டது." எனக் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை வரலாற்றாசிரியர்கள், இராவணன் ஆட்சிக்காலத்தையடுத்து நிகழ்ந்த இக் கடல்கோள் கி.மு. 2387-ம் ஆண்டளவில்

கள். அப்படியானால், இக் காலத்துக்கு முன்னதாகவே "தென்மதுரை" பாண்டியர் தலைநகராய் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சௌந்திர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி தோங்கு
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

என்னும் பழந்தமிழ்ப் பாடல், பாண்டிய நாட்டையே செந்தமிழ் நாடு எனப் போற்றுகின்றமை காண்கின்றோம்.

ஔவைப் பிராட்டிமார்,

"நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து - நல்லரவர்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டிய [நின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்."

என, பாண்டிய நாட்டுத் தமிழினையே "நல்ல தமிழ்" ஆகப் பாராட்டுகின்றார்கள்.

செந்தமிழ்தான் நல்ல தமிழ். அந்தத் தமிழினைத் தான் பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்து வளர்த்தார்கள்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக் காலத்துக்கு மேலாக இடையீடில்லாத பழம் பெருமை வாய்ந்ததாய் விளங்கிக்கொண்டிருப்பது மதுரை மாநகரம்: இன்று யாம் காணுகின்ற மதுரை மாநகரம், மேலைநாட்டு வரலாற்றிலும் நாகரிகத்திலும் ஏதென்சு நகரும் கொன்ஸ்தாந்திநோபிள் நகரும் கொண்டிருக்கும் பெருமையையொத்த பெருமை வாய்ந்தது மாநகர் மதுரை. தமிழர் நாகரிகத்தின் தாயகம் என இன்று போற்றப்படும் பெருநகர்.

புகழ் மிக்க இப் பெருநகர், தமிழுடன் தொடர்பு படுத்தியே எப்பொழுதும் போற்றப்பட்டு வருகின்றது.

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

(சிறுபாணை. 66-67.)

என வருவது சிறுபாணாற்றுப்படை.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள், பொதியமலையிலே பிறந்து மதுரையிலே வளர்ந்து புலவர்களின் நாவிலே பொருந்திய தென்றலாகத் தமிழினை வருணிக்கின்றார்.

"மலயத் தோங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்"

(சிலம்பு. 13. 25-26.)

என்பது அவரது வாய்மொழி.

மதுரை மாநகரின் சிறப்பை எல்லோரும் அறியச் செய்யும் பெருமை தென்றற் காற்றுக்கு உண்டு என்பது அவரது கருத்து.

பரிபாடல் என்ற பழந்தமிழ் நூல், மதுரை மாநகரின் பண்டைத் தோற்றம் ஒரு தாமரை மலரைப் போன்றிருந்தது என்று எடுத்துக் காட்டுகின்றது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்
தரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம வின்றுயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே."

(பரிபாடல். 7.)

தாமரை மலரின் அகவிதழ்களைப் போன்று வீதிகள் அமைந்திருக்கின்றன. அந்த இதழ்களின் நடுவிலே உள்ள பொகுட்டினைப் போன்று மதுரைக்கு நடுவணாக ஆலவாய் அண்ணல் கோயில் விளங்குகின்றது. மலரின் கண்ணுள்ள மகரந்தத் தாதினைப்போலத் தண்டமிழ்க் குடிகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தத் தாதினை உண்ணவரும் வண்டுக் கூட்டத்தைப்போல இரவலர் கூட்டம் நாடி வருகின்றது. சேரர்களது தலைநகரான வஞ்சியில் வாழ்வோரும், சோழர்களது தலைநகரான உறந்தையில் வாழ்வோரும், நாள்தோறும் காலையிலே கோழியின் கூவல் ஒலி கேட்டே துயிலிலிருந்து எழுவார்கள். ஆனால், பாண்டியர் தலைநகரான மதுரையில் வாழ்பவரோ எந் நாளேனும் கோழி கூவி எழுந்திருப்பதில்லை. நாள்தோறும் அதிகாலையிலே அறவோர் மறைகளை முழக்கிக்கொண்டிருப்பார்கள். அந்த இனிய ஓசையைக் கேட்டுத்தான் மதுரை மக்கள் துயில் நீத்து எழுவார்கள். இப்படிப்பட்ட எழில்கொண்ட நகரம் மதுரை எனப் புலவர்கள் பலர் பெருமிதத்துடன் எடுத்துக் கூறுகின்றார்கள். அதுதான் "மாநகர் மதுரை".

அந்த மதுரை மாநகரிலே தமிழுடன் சைவமும் தழைத்தோங்கிக் கொண்டிருந்தது. சமண சமயத்தோடு நடைபெற்ற பற்பல போட்டிகளிலும் பூசல்களிலும் வெற்றிபெற்று, தமிழ்நாடு முழுவதிலும் சைவம் மறுமலர்ச்சி பெறுவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளெல்லாம் இந்த மாநகரிலேயே நடைபெற்றன.

மதுரை மாவட்டத்துத் திருவாதவூரிலே தோன்றிய மாணிக்க வாசக சுவாமிகள், சிவபெருமானைப் பிட்டுக்கு மண் சுமக்க வைத்ததும், குதிரைகளை நரிகளாக்க வைத்ததும் இந்த நகரிலேதான்.

"ஊரிலான் குணங் குறியிலான்" ஆகிய சிவபெருமானை, "தென்னாடுடைய சிவனே" எனப் போற்றி எக்களித்ததும் இந்தப் புண்ணிய நகரிலேதான். இந்த மதுரையம்பதிலேதான் சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்தார் என்று புராணங்கள் முழக்கமிடுகின்றன. மதுரை!— பெயரே எவ்வளவு மதுரமாக இருக்கின்றது.

மதுரை மாநகரின் அமைப்பு இன்று நோக்கினாலும் கவர்ச்சியுடையதாகவே விளங்கிக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். கோயில் நடுநாயகமாக அமைந்திருக்க நான்கு,நான்கு வீதிகளாக முறையே ஆடி வீதி, சித்திரை வீதி, ஆவணிமூல வீதி, மாசி வீதி, வெளிவீதி போல்வன சதுரப்பட அமைந்து விளங்குகின்றன.

மதுரைக்குச் செல்கின்றவர்கள் எல்லோரையும் "வருக, வருக" அன்று அழைக்கின்ற பெருமை மீனாட்சியம்மன் கோயிற் கோபுரங்களுக்கே உண்டு. இப்போது மதுரைக் கோயிலிலே பதினான்கு கோபுரங்கள் இருக்கின்றன. அவற்றிலே மிக உயரமானவை நான்கு கோபுரங்கள் ஆகும். அந்தக் கோபுரங்களை யார் மறப்பார்! இந்து சமய மக்களின் உள்ளம் எத்துணை உயர்ந்தது என அவை காட்டிக்கொண்டிருக்கின்றனவோ!

மக்கள் மனத்திலே மங்காதிருக்கும் தமிழ்ச் சங்கத்தையும், சங்கப் பலகையையும், நக்கீரரையும், திருவள்ளுவரையும் இன்றும் நினைவூட்டிக்கொண்டிருக்கும் "பொற்றாமரைக் குளம்", மதுரைக் கோபுரத்துடன் சேர்ந்திருக்கும் தோற்றத்தினையே இவ் விதழின் அட்டைப் படம் காட்டுகின்றது.


# சைவ சித்தாந்தம்

(உயர்திரு. கே. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., அவர்கள்)
(சைவ சித்தாந்த தத்துவத்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்)

''சைவ சித்தாந்தம்'' என்பது உலக வாழ்வின் உண்மையை ஒப்புக் கொள்ளும் தெய்வநெறிக்கொள்கை. அஃது உலக வாழ்வின் உண்மையை ஒப்புக் கொள்ளுவதோடு நடை முறைக்கு ஏற்ற ஒழுக்க நெறியினையும் மிக உயர்ந்த தத்துவக் கொள்கையினையும் உடையது. அஃது இக் காலத்துத் தமிழகத்திலும் ஈழநாட்டிலும் உள்ள பெரும்பான்மைத் தமிழ் மக்களால் பின்பற்றப்படுவதாய் உள்ளது. அதனியல்பை எண்ணுவோமாக.

அதில் வழிபடப்படும் பரம் பொருள் ''சிவம்'' எனப்படும். எல்லோராலும் வழிபடப்படும் பரமன் ஒருவனே. ஆயினும் அவனைப் பற்றி அவரவர்கள் கொண்டிருக்கும் கருத்தில் வேறுபாடு உண்டு, ஆதலினால் அவரவர் அவனை வேறு வேறு பெயர்களால் வழங்குவர். அவன் உலகத்தைப் படைப்பவன் என்றும், பிறவாதவனென்றும் கருதுகின்றவர் அவனை ''அயன்'' என வழங்குவர். காக்கும் கடவுள் எனவும், எங்கும் நிறைந்தவன் எனவும் கருதுகின்றவர்கள் விட்டுணு என வழங்குவர். மிகப் பெரியதாய் உயிர்களால் அறியப்படாதது எனக் கருதுகின்றவர் ''பிரம்மம்'' என்பர். சைவர்கள் பரமனை மாறுபடாத பேரின்ப வடிவினன் எனவும், அவனைத் தலைப்பட்டு உணர்ந்தவர்கள் பலர் எனவும், இன்றும் அவனை யாரும் தலைப்பட்டுணர்ந்து பேரின்பம் எய்தக் கூடும் எனவும் கருதுகின்றனர். ஆதலால் முதல்வனைச் ''சிவன்'' என அழைக்கின்றனர்.

'சிவன்' என்னும் சொல் பேரின்ப வடிவினன் எனவும், தூய இயற்கை உணர்வினன் எனவும், எத்தகைய மாறுதலும் இன்றிச் செம்பொருளாய் நிற்பவன் எனவும் பொருள் படும். அம் முதல்வன் பெண், ஆண், அலி என்னும் பகுப்பைக் கடந்து நிற்போனாயினும், அன்பர்கள் விரும்புமாறு ஆணாகவும், பெண்ணாகவும், அல்லதாகவும் இருந்து அருள்புரிவான் எனவும் சைவ நூல்கள் கூறுகின்றன. ஆதலினால் சைவர்கள் முதற்பொருளைச் ''சிவன்'' எனவும், ''சிவை'' எனவும், ''சிவம்'' எனவும் முப்பாலினும் வழங்குவர். ''உண்டோர் ஒண்பொருள் என்றுணர்வார்க்கெல்லாம் — பெண்டிர் ஆண் அலி என்றறிய வொண்கிலை'' ''பெண், ஆண், அலி எனும் பெற்றியன் காண்க'' என்பவை மணிவாசகம்.



உயர்திரு. கே. வச்சிரவேல் முதலியார்

''சைவம்'' என்ற சொல் சிவ சம்பந்தம் உடையது எனப் பொருள் படும். சிவ சம்பந்தம் எல்லா உயிர்களுக்கும் உண்டு. சிவபிரான் உயிர்கள் தோறும் தங்கி நின்று அவற்றின் அறியாமையைச் சிறிது சிறிதாக நீக்கி, அறிவைப் படிமுறையால் வளர்த்து வருகின்றான். இக் கருத்தை மாணிக்கவாசகர், ''பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே'' என்னும் திருவாசகத்தால் குறிக்கின்றார். பாரித்தல் - வளர்த்தல். உயிர்களின் அறிவைப் படிமுறையால் விளக்கி வளர்த்தல் பற்றியே சிவபிரான், ''அம்மையப்பர்'' எனப்படுகின்றார்.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் அவர் வேற்றுச் சமயவாதிகள் சிலர்க்கு உண்மை உணர்த்திய ஒரு நிகழ்ச்சி வருகின்றது. அதில் அவர், ''சைவம் அல்லாது மற்றொன்றும் இல்லை'', ''நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம்'' எனத் தம்மை வணங்கி நின்ற அம் மதவாதிகளுக்கு உபதேசித்தருளுகின்றார்.

சைவத்திற் கொள்ளப்படும் ஒழுக்கநெறியின் அடிப்படையைச் சைவ சமய நெறி என்னும் நூல் ஒரு குறள் வெண்பாவால் எடுத்துரைக்கின்றது. அஃது ''எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு'' என்பதாகும். இன்னும், உலகில் உள்ள சமயங்கள் எல்லாம் அவரவர் பக்குவத்திற்கு ஏற்றபடி முதல்வனால் பலர் மூலம் விளக்கப்பட்டவை என்பதே சைவ சமயத்தின் பொது நோக்கின் அடிப்படையாகும். இத்தகைய தெய்வ நெறியின் கருத்தொழுங்கே சைவ சித்தாந்தம் எனப்படும்.

சித்தாந்தம் என்னும் சொல்லின் பொருள் 'பெற்ற முடிபு' என்பதாகும். அஃதாவது தலையாய பிரமாண நூல்களையும் உண்மை அனு

பவம் வாய்க்கப்பெற்ற பெரியோர்களின் அனுபவங்களையும் ஆராய்வதன் பயனாகக் கிடைத்த முடிந்த முடியே சைவ சித்தாந்தம் எனப்படும். இதன்கண் கூறப்படும் சமய உண்மைகளும் கொள்கைகளும் இந்தியாவில் தோன்றிப் பரவியுள்ள மெய்யுணர்வின் உயர்ந்த படிநிலையாகும் என மேல்நாட்டுப் பெரியோர் கருதுகின்றனர். சைவ சித்தாந்தத்திற்கு ஆதாரமாகக் கொள்ளப்படும் நூல்கள் தமிழ், வடமொழி இரண்டிலும் உள்ளன. இவ் வனுபவ மரபு வடமொழி, தமிழ்மொழி என்னும் இரு மொழிகளின் பயனை நிலவுவது. இக் கருத்துப் பற்றியே திருஞானசம்பந்தர், ''தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழல் சேர அம்மலர்க் கொன்றை அணிந்த எம் அடிகள்'' எனச் சிவபிரானைப் போற்றுவாராயினர்.

இனி, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளைப் பற்றிச் சிறிது எண்ணுவோம். என்றும் உள்ள பொருள்களாக இந்த நெறியில் கொள்ளப்படுபவை இறை, உயிர், தளை என்னும் மூன்றாகும். இவற்றுள் ''இறை'' என்பது கடவுள். அது ஞானானந்த வடிவாய் எப்பொருள்களினும் நிறைந்ததாய் எப்பொருள்களுக்கும் பரம ஆதாரமாய் நிற்பது. தானே உணர்ந்து உயிர்களை அறிவிப்பது. அஃது ஒன்றே ஆகும்.

''உயிர்'' என்பது அறிவிக்க அறிவதாயும், உடம்பு தோறும் வேறு வேறாய் உள்ளது. இரு வினைகளைச் செய்து அவற்றின் பயனை நுகர்ந்து வருவதாய்ப் பிறப்பு இறப்புகளுக்குட்பட்டுச் சுழல்வதாய் உள்ளது.

''தளை'' என்பது இவ் வுயிர்களைக் கட்டுப்படுத்தி நிற்பது. அஃது ஆணவம், மாயை, கன்மம் என மூன்று வகைப்படும். அவற்றுள் ஆணவம் என்பது உயிர்களின் அறிவையும் முயற்சியையும் நிகழவொட்டாமல் தடுத்து நிற்பது. மாயை என்பது உயிர்களுக்கு உடம்பு, மெய், வாய், மனம் முதலிய கருவிகள், உலகம், உலகத்திலுள்ள பொருள்கள் என்னும் நான்கு வகையாகக் காரியப்பட்டு நின்று, உயிர்களின் அறிவை விளக்குவது. இதனால் இஃது ஆணவத்திற்கு எதிராக நின்று உயிர்களுக்கு உதவி செய்வதென்றே கொள்ளப்படும். இக் கொள்கையில் சித்தாந்த சைவத்திற்கும் ஏனைய சமயங்களுக்கும் அடிப்படையில் உள்ள கருத்து வேறுபாடு நன்கு சிந்தித்தற்குரியது. சைவர்கள் அல்லாத பிற சமயத்தவர் மாயை உயிரின் அறிவை மறைக்கின்றது எனவே கொள்ளுவர். ஆணவம் என்ற ஒன்றை மாயைக்கு வேறாக உள்ளதெனக் கொள்வதில்லை. ஆனால், நமக்குள்ள நடைமுறை அனுபவத்தை எண்ணினால் உடம்பு முதலிய மாயையின் காரியங்கள் நம் அறிவு வளர்ச்சிக்கு உதவியாகவிருத்தல் எளிதில் விளங்கும். ஒரு குழவி தான் பிறக்கும்போது பெரும்பாலும் அறியாமையில் அழுந்தி உள்ளதென்றே கொள்ளலாம். பின் அது வளர வளர உலகத்தோடு தொடர்பு கொள்வதனால் அதன் அறிவு பெருகி வருதலைத் தெளிவாகக் காண்கின்றோம். நாம் உடம்போடு தொடர்பு கொண்டு நிற்கும் நனவு நிலையில் உலகத்தை நன்கு அறிகின்றோம். கனவு, உறக்கம் என்னும் நிலையில் நம் அறிவு, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளோடு தொடர்பு கொள்வதில்லை. அதனால் நம் அறிவு கனவு உறக்கங்களில் நன்கு விளங்குவதில்லை. உறக்கத்தில் நம் மனமும் தொழிற்படுவதில்லை. அப்பொழுது நமக்குள்ள அனுபவம் அறியாமையாகவே இருக்கிறது. அவ் வறியாமையை நமது இயற்கை

## விருத்தாசலம்

''அசலம்'' என்னும் வட சொல்லுக்கு ''மலை'' என்று பொருள். அசலம் என்னும் சொல் ஊர்ப் பெயர்களிலும் சேர்ந்து வருவதுண்டு. விருத்தாசலம், வேதாசலம், வேங்கடாசலம், தணிகாசலம் என்னும் பெயர்களை நோக்கலாம்.

''விருத்தாசலம்'' என்பதன் பழம் பெயர் ''முது குன்றம்'' என்பதாகும். தென் ஆர்க்காட்டிலுள்ள சிறந்த சிவத்தலங்களுள் இதுவும் ஒன்று. ''முது குன்றம்'' எனவும் 'பழமலை'' எனவும் வழங்கி வந்ததை வடமொழியில் ''விருத்தாசலம்'' என்று மொழிபெயர்த்து வழங்கினார்கள். பழைய பெயர்கள் மறைந்து புதிய பெயரே இன்று வழங்கி வருகின்றது. இந்த முதுகுன்றப் பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவனை, சைவ நன்மக்கள் ''பழமலை நாதர்'', என்றே போற்றி வருவதைக் காண்கின்றோம். ''முத்தாறு வலஞ் செய்யும் முது குன்றம்'' எனத் திருஞான சம்பந்தப் பெருமான் பாடியது அந்தத் திருத்தலம்.

## தாசர்

ஆரியர்கள் வருமுன்பு சப்த சிந்துப் பிரதேசத்தில் (சிந்து, பஞ்சாப் மாகாணங்களில்), தாசர்களின் அரசு நிலவியது. இப்போது ''தாசன்'' என்ற சொல்லுக்கு, ''அடிமை'' என்ற பொருள் ஏற்பட்டுள்ளது. ஆனால், வேதத்தில் ''தாஸ், தாச்'' என்ற இரண்டு வினைப் பகுதிகளையும் ''கொடுத்தல்'' என்ற பொருளில் வழங்கியிருக்கிறார்கள். அண்மையில் வெளிவந்த அகராதிகளிலும் இப் பொருளைத்தான் தந்திருக்கிறார்கள். எனவே, ''தாஸன்'' என்ற சொல்லுக்கு முதலில் உண்டான பொருள் - ''கொடை வள்ளல்'', ''உயர்குடித் தோன்றல்'' என்பதேயாகும். ஆவெஸ்தாவில் பார்வதீன் யஸ்த் என்ற பகுதியில், இந்தத் தாச நாட்டுப் பிதிரர்களின் வழிபாடுபற்றிய செய்தி வருகிறது. அங்கே அவர்களை, ''தாஹி'' என்று குறித்துள்ளார்கள்.

பழமையான பார்சிய மொழியில் சமஸ்கிருத ''ஸ''வை ''ஹ'' என்று உச்சரிப்பது வழக்கம். உதாரணமாக, ''ஸப்தஸிந்து''வை ''ஹப்தஹிந்து'' என்று ஆவெஸ்தா சொல்லுகிறது. அது போலவே, ''தாஸி'' அல்லது ''தாஸ'' என்பது ''தாஹி'' என்று மாறியிருக்கிறது. இவ்வாறு ஆவெஸ்தாவிலிருந்து தாசர்களின் உயர்வை அறிகிறோம்.

— தர்மானந்த கோஸம்பி

(பகவான் புத்தர் - பக்கம். 7, 8.)

யான குணம் என்று நாம் ஒப்புக்கொள்ள இசையோம். ஒருவனைப் பார்த்து உனக்கு அறிவில்லை என்று சொன்னால் அவனுக்குக் கோபந்தானே வரும்! ஆதலால், நமது இயற்கைக் குணம் அறிவுதான் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அறியாமை செயற்கையால் வந்தது. அவ்வறியாமையை விளைப்பது ஆணவம் என்னும் தளை.

ஒரு செப்புப் பாத்திரத்தின் இயல்பான தன்மை ஒளி உடைமை தான். ஆயினும் அதில் களிம்பு மேன்மேலும் சேர்தலினால் அவ்வொளி விளங்குவதில்லை. புளியும் சாம்பலும் தண்ணீரும் கொண்டு அப் பாத்திரத்தைத் துலக்கினால் அதன் இயற்கை ஒளி நன்றாகப் புலப்படும். அதுபோல நம்முடைய இயற்கையான அறிவை மறைப்பதாக ஆணவம் அல்லது மூலமலம் எனப்படும் ஒரு பொருள் இருக்கிறது. அதுதான் நாம் எதையேனும் ஒன்றைக் கற்றுணர்ந்தாலும் அவ்வுணர்வைப் பின் இழந்து மறக்கும்படி செய்கின்றது. அப் பகைப்பொருளை இருள் போன்றது என்று சைவம் கூறுகின்றது. அது செம்பில் உள்ள களிம்பு போன்றது. புளியும் சாம்பலும் போல அவ்வறியாமையை நீக்கி அறிவை விளக்குபவை உடம்பு முதலியவை. உடம்பு முதலியவற்றைத் தனு, கரணம், புவனம், போகம் எனக் கூறுவர். தனு என்பது நம் உடம்பு. கரணம் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் முதலிய கருவிகள். புவனம் என்பது உலகம். போகம் என்பது நுகர்ச்சிப்பொருள். இந்த நான்கிற்கும் காரணமாக உள்ள அருவப் பொருள் மாயை எனப்படும். மாயையை உள்பொருள் என்றும் உலகங்களின் காரணமான சத்தி சமூகம் (cosmic energy) என்றும் பல்லாண்டுகளுக்கும் முன் சைவம் உணர்ந்து கூறிவருகின்றது. இம் மாயை ஆணவத்தின் வலியைக் கெடுப்பதாய் உள்ளது. இருளுக்கு மாறான ஒளி போன்றது.

உயிரின் இயல்பு நம் கண்ணின் இயல்பு போன்றது. மூலமலம் கண்ணின் படலம் அல்லது புற இருள் போன்றது. தனு, கரண, புவன, போகங்கள் விளக்குப்போல உள்ளவை.

அக இருளுக்கும் புற இருளுக்கும் உள்ள ஒரு வேறுபாட்டைச் சைவ நூல்கள் கூறுகின்றன. புற இருள் எல்லாப் பொருள்களையும் மறைக்கும். ஆனால் தன்னை மறைக்காது. இருள் உள்ளபோது அதன் இருப்பு எல்லோராலும் உணரப்படும். ஆனால் அகவிருள் எந்தப் பொருளையும் காட்டாது. இருள் உள்ளபோது அதனைப் போக்கிப் பொருள்களைக் காண்பதற்கு விளக்கை நாடி நிற்கின்றோம். அது போல நமக்குள்ள அறியாமையை நீக்கிக்கொள்ள வேண்டும் என்னும் எழுச்சி நமக்கு இயல்பாக உண்டாவதில்லை அல்லவா? ''ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்; இரு பொருளும் காட்டாது இது'' என்று உமாபதிசிவம் என்னும் ஓர் ஆசிரியர் கூறுகிறார். இங்கு இஃது என்றது அக இருளாகிய மலத்தை. நாம் பிறவியில் இருக்கும் வரையும் இந்த அக இருள் நம்மறிவை விளக்கவொட்டாமல் தடுக்கிறது. அதனால் நாம் நம்மையே இன்னாரென்று உணராமலிருக்கிறோம். சிலர் ஆன்மாவே இல்லை என்றும், வேறு சிலர் அஃது உண்டென்றும், இன்றென்றும் சொல்லொணாதது என்றும் கூறுகிறார்கள் அல்லவா? அப்படியே கடவுள் இருப்பையும், மறுபிறப்பின் உண்மையையும், இருவினையின் உண்மையையும் நம்மால் எளிதில் உணரமுடியவில்லை. ஆனால், இவையெல்லாம் உள்ளன என்று மெய்யுணர்ந்த பெரியோர்கள் அறிந்து கூறுகின்றார்கள். நாமும் சிறிது சிந்தித்தால் அவை உள்ளன என்று உணரலாம்.

இரவில் விளக்கு உதவுவதுபோல இப் பிறப்பு நிலையில் தனு, கரண, புவன போகங்கள் நமக்கு அறிவை விளக்குவதற்கு உதவுகின்றன. அத் தனு, கரண, புவன போகங்கள் நாம் செய்த வினைக்கீடாக வருகின்றன. ''விடிவாம் அளவும் விளக்கனைய மாயை - வடிவாதி கன்மத்து

---

## என்று நீ அன்று நான்

''ஆண்டவன் என்றுண்டோ அன்று முதலே மக்கள் உண்டு'' என்பது, ஆண்டவன் ஒருவன் உண்டு என்ற தமிழருடைய கொள்கை. ''என்று நீ அன்று நான்,'' என்று ஆண்டவனை முன்னிலையில் வைத்துப் பாடுகிறார், இக் கொள்கையை உடைய முன்னோர் வழி வழியே வந்த தாயுமானவர். ஆனால், அவர் அதனோடு நிற்காமல், ''என்று நீ அன்று நான் - உன் அடிமை அல்லவோ?'' என்கிறார். எனவே ஆண்டவன் என்று உண்டோ, அன்று முதலே மக்கள் உண்டு என்றாலும், ஆண்டவன் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் ஆவன். மக்களோ, தம் அறியாமை காரணமாக வினையில் தளைப்பட்டு, முற்றும் விளங்கிக்கொள்ளுதலாற்றாத சிற்றறிவு உடையவராய், வினைக்கீடாம் ஐம்பூதக் கலப்பாலான உடலில் தோன்றுவதும் அதிலிருந்து நீங்குவதும் தம் தொழிலாகக் கொண்டு, களைப்பாறுவதற்காக ஒரு சமயம் ஆண்டவன்பால் ஒடுங்கியிருந்து, பின்பு வினைக்கீடாக அவன் ஏவலால் மீண்டும் உடலோடு தோன்றும் கடப்பாடு உடையவராதலால், அவன் வழியே தோன்றும் அவன் அடிமைகள் ஆவர்.

டாக்டர், மொ. அ. துரை அரங்கசாமி

---

## குமரன்

''குமரன்'' என்பது தமிழ்ச் சொல்லே; ''குமரி'' பெண்பால். குமரி முனையும், குமரி நாடும், குமரி மலையும், குமரி யாறும், குமரிக் கண்டமும் ஆரியர் வருகைக்கு முன்னே தமிழ் பெற்றிருந்தவைகளாம். குமரியைத் தமிழ்ச் சொல் அன்று என்று எவரும் கூறார். அதன் ஆண்பாற் சொல்லே ''குமரன்'' என்பதாம். இவையிரண்டும் பின்னர் வடமொழிக்கண் சென்று ''குமாரி'' என்றும் ''குமாரன்'' என்றும் உருப் பெற்றன.

— சி. இலக்குவனார்
(பழந்தமிழ். பக்கம். 311.

வந்து'' என்கிறார் உமாபதி சிவனார். மாயா காரியங்கள் உடம்பு முதலியனவாகக் கன்மத்துக்கு ஈடாக வந்து அறிவை விளக்குகின்றன. அவை இரவில் இருளைத் துரந்து உதவுகின்ற விளக்குப் போன்றவை என்பது இப் பாட்டின் பொருள். இதுவரையில் மூன்று தளைகளுள் ஆணவம், மாயை என்பனவற்றின் இயல்புகள் விளக்கப்பட்டன.

மூன்றாவது தளை கன்மம் எனப்படும். அது நாம் மன மொழி மெய்களால் செய்கின்ற செயல்களால் தோன்றுவது. நம் புத்தியைப் பற்றி நின்று நம் இன்ப துன்ப மயக்கங்களுக்குக் காரணமாயுள்ளது. நாம் செய்கின்ற செயல்கள் நல்லனவும், தீயனவுமாக இருத்தலினால், இக் கன்மம் நல்வினை, தீவினை எனவும், இருவினை எனவும் சுட்டப்படும். நல்வினை தீவினை என்னும் இரண்டுமே பிறவிக்குக் காரணமாகவுள்ளவை. ஆதலினால் இரு வினையும் தீர்த்தற்குரிய வழியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றார் திருவள்ளுவர். இரு வினைகளும் மூலமலம் காரணமாகத்தான் உண்டாகின்றன என்றும் கூறுகின்றார். அவை தீர்த்தற்குரிய வழி இறைவனுடைய மெய்ம்மையான புகழை எப்பொழுதும் விரும்பிச் சொல்லுதல் என்றும் உரைக்கின்றார்.

''இருள்சேர் இருவினையும் சேரா [இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் [மாட்டு''

என்பது திருவள்ளுவர் வாய்மொழி. இதில் இறைவன் பொருள்சேர் புகழ் என்பது தேவாரம், திருவாசகம் போன்ற திருவருட் செம்பாடல்களையே என்பது நுணுகி உணர்ந்து கொள்ளத்தக்கது. மலமாகிய நோயால் துன்புறும் உயிர்களுக்கு மருந்து போல மாயை கன்மங்களை இறைவன் கொடுத்துள்ளான். உலகம் ஒரு மருத்துவ விடுதி. நோய் தீர்ந்த உயிர்கள் முதல் வினைத் தலைப்பட்டுணர்ந்து பேரின்பம் எய்தும்.

இதுவரையில் நாம் கண்ட அடிப்படை உண்மைகளைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ள ஒரு பாட்டின் முதலிரண்டு அடிகளால் நினைவு கூரலாம். அவ் வடிகள், ''வினையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்'' என்பவை. இவற்றில் கடவுளைத் தலைவன் என்று சம்பந்தர் குறிக்கின்றார். உயிரைப் பசு என்று கூறுகின்றார். பசு என்னும் சொல் கட்டுற்றது என்று பொருள்படும். உயிர்களைக் கட்டி நிற்கும் தளைகளைப் பாச வேதனை, ஒண்தளையாயின என்று குறிக்கின்றார். பாசம் என்றது உயிர்க்கு நேர் பகைப்பொருளாய் அதன் அறிவைத் தடுத்து நிற்கும் மூலமலத்தை. வேதனை என்றது. இன்பதுன்ப மயக்கங்களை இங்கு அச் சொல் இன்ப துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகிய கன்மத்தைக் குறிக்கின்றது. ஒண்தளை என்றது உயிர்களுக்கு அறிவை விளக்கி நிற்கும் மாயையை. பசுவும் பாசவேதனை ஒண்தளைகளும் தலைவனும் அநாதி நித்தியப்பொருள்கள். அவை ஒரு காலத்தில் தோன்றியவையல்ல. ஆதலால் அதை, ''வினையாததொர் பரிசில்வரு'' எனும் அடையைக் கூட்டிக் கூறுகின்றார். பசுஎனப்படும் உயிர், பாசம், வேதனை, ஒண்தளை என்னும் மூன்று மலங்களால் மாசுற்றுப் பிறந்து இறந்து வருகின்றன. அம் மாசு நீங்கித் தன்னுடைய திருவடியை உணர்ந்து பேரின்பம் நுகரும்படி உதவுகின்ற தலைவன் சிவபிரான் என்பது அந்த அடிகளின் பொருள்.

பாசத்தை பசுக்கள் விட்டுப் பதியினைச் சார்தலே விடுபேறாம். உயிர்கள் பாசத்தின் நீங்கும்போது வியாபகவுணர்வு உடையனவாய் முதற்பொருளைச் சார்ந்து அதன் தன்மையைப் பற்றிநின்று பேரின்ப அனுபவத்தைப் பெறும். அந் நிலையை அடைந்த உயிர் தனக்குள்ள சிவசம்பந்தத்தை யுணர்ந்து சிவமாய் அமரும். இக் கருத்தைத் திருஞானசம்பந்தர், ''சேர்வார் தாமே தான் ஆகச் செயுமவன்'' என்கிறார். ''சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தருநோய்'' எனும் திருவள்ளுவர் கருத்தும் இதுவே ஆகும்.

சிவ தன்மம் சிவயோகம் என்னும் சாதனங்களை மேற்கொண்டு ஒழுகின் முதற்பொருளின் உண்மையியல்பை உணர்ந்து அதன் அருட்குணங்கள் நம்மாட்டு மேற்பட்டு நிகழும்படி நிற்கும் மோனநிலை கிட்டும்; பாசப்பற்று அறும். அந் நிலையே பேரா இயற்கை எனப்படும் பரமுத்திநிலை ஆகும். X

## ஓம்

''ஓம்'' என்னும் ஒலியில் இனிய மெல்லோசையே நிறைந்திருத்தலும் வல்லோசை இல்லாமையும் சிறு மகாரும் உணர்வர். உலகம் யாங்கணும் உள்ள மொழிகளின் ஓசை முறைகளை ஒரு சிறிது ஆராய்ந்து காண்பார்க்கும் தமிழல்லாத மற்ற மொழிகளெல்லாம் உரத்த ஓசைகளும் கனைக்கும் ஒலிகளும் நிரம்பி இன்னிசையிற் பழகிய செவியுடையார்க்கு வெறுப்பினைத் தோற்றுவித்தலும் தமிழ்மொழி அத்தகைய உரத்த ஓசைகளும் கனைக்கும் ஒலிகளும் சிறிதும் இன்றி எல்லாம் இனிய மெல்லிய இயற்கை ஒலிகளே நிறைந்து எல்லார்க்கும் இன்பம் பயக்கும் நீரதாய் ஓங்கார உருவினதாய் இருத்தலும் தெற்றென விளங்கும். அல்லதூஉம், ''ஓங்காரம்'' தமிழிற்குரிய ''ஓ''வடிவினதாக ஏனைய மொழிகளில் எழுதப்படுதலானும் ஓசையைக் குறிக்கும் ஓசை, ஒலி என்னும் தமிழ்ச் சொற்களின் முதலில் ஓகாரம் நிற்றல்போல ஏனை மொழிகளில் ஓசையைக் குறிக்கும் சொற்களில் அங்ஙனம் ஓகாரம் நிற்பக் காணாமையானும், ஓசையைக் கவரும் மக்களின் செவியின் வடிவை உற்று நோக்கிப் பண்டைத் தமிழர் ஓங்காரத்திற்கு வடிவு கண்டறிந்தாற்போல ஏனை மக்கள் கண்டறிந்தார் என்பது புலப்படாமையானும் காத்தல் என்னும் பொருள் ''ஓம்'' என்பதற்கு உண்டு என்பது வடமொழியிற் கூறப்படினும் காத்தலெனப் பொருள்படும் ''ஓம்பு'' என்னும் முதனிலை தமிழின்கண் காணப்படுதல்போல வடமொழியிற் காணப்படாமையானும் ஓங்காரம் தமிழிற்கே பண்புதொட்ட உரிமையுடையதென்பது பெற்றாம்.

— மறைமலையடிகள்
(திருவாசக விரிவுரை. பக். 60-61.)

# சித்தர்களின் பாடல்

திரு. மீ. ப. சோமசுந்தரம் ('சோமு') அவர்கள்

"சித்தர் பாடல்" என்னும் இலக்கியம் தமிழ் நாட்டில் பல நூறு ஆண்டுகளாக மிகுந்த பக்திபோடு ஆராதிக்கப்பட்டு வந்திருக்கிறது. படித்த மக்களைப்போலவே பாமர மக்களும் இந்தப் பாடல்களை மெய்யுருகி அநுபவித்து வந்திருக்கிறார்கள். நாட்டுப் பாடல்கள் என்று வழங்குகிற நாடோடி இலக்கியத்திலுமே இந்தச் சித்தர் பாடல் ஒரு தனியான தெய்வ மணத்தோடு கமழ்கிறது.

"வினைக்கு ஈடாய் மெய்" என்னும் திருமந்திர வாக்குப்படி, உயிரின் வினைக்குத் தக்கவாறு உடம்பு அமைகிறதல்லவா? அது போலவே ஒரு கவிதையின் வடிவமும், மெய்யும் அமைகின்றன. சித்தர்கள் கூறுகிற தத்துவத்திற்கு ஏற்ப அவர்களின் பாடலும் உருவ அமைப்பு எடுக்கிறது. கருத்துக்கு இயைந்த வடிவம் கொள்கிறது. மற்ற இலக்கியப் பாடல்களின் போக்கு, நடை, அமைப்பு ஆகிய வற்றிலிருந்து சித்தர்களின் பாடல் மாறுபட்டிருப்பதற்கு இந் நுட்பமே காரணமாகும்.

சித்தர் பாடல்கள் எல்லாம் ஒரே யாப்பு முறையில் அமைந்திரா விட்டாலும், இவற்றின் அமைப்பு முறையில் ஓர் ஒருமைப்பாடு இருக்கும். அந்தந்தச் சித்தரின் முதிர்ச்சிக்கும்,மொழியாற்றலுக்கும் ஏற்ப யாப்புமுறை மாறினாலும், இந்தப் பாடல்கள் அனைத்திலுமே ஓர் எளிமை துலங்கும். சித்தர்களுடைய தோற்றத்தில், முகத்தில், காண்கிறோமே ஒரு குழந்தையின் பசலைத் தன்மை, ஓர் இங்கித எளிமை, அந்தப் பண்பை அவர்களுடைய பாடலின் சொற்களிலும் காணலாம். ஆனால், ஒரு முக்கியமான உண்மையை மறந்துவிடக் கூடாது. அதாவது, எளிமை என்பது சொற்களின் எளிமைதான். கருத்து வேறு. குழந்தையைப் போன்றதோர் எளிமை. ஒளி வீசினாலும், குழந்தைகளா சித்தர்கள்? இல்லையே! எளிமை என்பது சொற்



திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள்

களிலே உள்ள எளிமைதான். கருத்து மிகமிக ஆழமாக இருக்கும். ஆழமான சுனை அல்லது ஏரியின் தண்ணீர் பரிசுத்தமாக இருந்தால், அடிமணல் தெரியும். அப்படிப்பட்ட சுத்தமான சுனை இந்தப் பாடல்கள். ஆனால், கருத்தாழமோ என்றால், தண்ணிருக்குள் முங்கி மணல் எடுக்கப் போனால் உள்ளே உள்ளே போய்க் கொண்டே இருக்கும். நம்முடைய ஆணவமே அதில் கரைந்து அழிந்து விடும்படியாக இருக்கும். அஃது அந்த எளிய சொற்கள் தாங்கிக் கொண்டிருக்கிற தத்துவத்தின் ஆழம்; ஆன்ம ஆழம் அது!

எளிமையைப் போலவே இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்தப் பாடல்களிலே அங்கங்கே உள்ள அலை வீச்சாகும். ஏரி நீர் காற்றிலே அலை மோதிக்கொண்டிருக்கும் அல்லவா? அந்த அலைகள் சிரிப்பது ஒரு சித்தனுடைய சிரிப்பாகும். அந்த அலைகள் வீசிவீசிக் கரையிலே வந்து தட்டுவது ஒரு சித்தனுடைய உல்லாச விளையாட்டாகும். சில சமயங்களில் சில பாடல்கள் சலனமே இல்லாமல் மோன அமைதியைப் பிரதிபலித்து நிற்கும். காற்று இல்லாத போது நடுநிசியிலே தடாகத்தின் தண்ணீர் உறங்குவது போலே, ஆழமும், மோனமும் பயபக்தி கொள்ளும்படியாகத் தோற்றம் தரும். இது சித்தர்களின் நடையிலே உள்ள சித்தியாகும்.

இனி, மூன்றாவது சிறப்பு, மிகப் பெருஞ் சிறப்பு என்னவென்றால், இந்தப் பாடல்களில் உள்ள மெய்யான உருவகம், மெய்யான உள்ளுறை. சொல்லுகிற சொற்களின் வெளியீடு ஒன்றாக இருக்கும்; சொல்லப்படுகிற கருத்து மற்றொன்றாக இருக்கும். சரீரத்துக்குள் சரீரமாக ஆன்ம சரீரம் இருப்பது போல, இந்தப் பாடல்களுக்குள்ளே உருவகத் தத்துவம் ஒன்று ஒப்பற்ற விலாசத்தோடு இயங்குகிறது.

— 2 —

நமது பாரத நாட்டின் புண்ணியத்தையும், சிறப்பையும், ஆனந்தக் களிப்போடு பாடுகிற பாரதியார்,

''யாகத்திலே தவ வேகத்திலே-தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண் [டார்தம்
அருளினிலே உயர்நாடு-இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு!''

என்று விம்முகிறார்.

'ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வபக்தி கொண்டார் யார்? அவர்தம் அருள் எது?' என்ற கேள்விகளுக்கு விடையே சித்தரும், சித்தர்களின் பாடல்களும்.

### தெய்வத்தின் வெளிப்பாடு

யாண்டும் நீக்கமற நிறைந் திலங்கும் கடவுளை ஒராற்றல் தம் கண்ணாரக் கண்டு தம் அறிவாற் றல்களினும் மிக்கிருத்தலாகிய அதன் இயல்பை உணராத விடத்து, அஃது உண்டு என்ற நம்பிக்கை கொள்ளுதல் அருமையில் அருமையாகும். எல்லா ஆற்றலும் உடைய அஃது, உருவாக வந்துகாட்சி கொடுத்தல் இயலாது என்று கூறுதல், அஃது எல்லா ஆற்றலும் உடைய தென் பதை உணராத மடமையே யாகும். ஏதாவது ஒன்றனைப் பற்றுக்கோடாகக் கொண்டு வழிபட, அதில் அஃது எழுந்து உருவமாகக் காட்சி கொடுத்த செய்தி சங்க இலக்கியத்தால் அறியப்படுகின்றது.

''அழிவில முயலும் ஆர்வ மாக் கள் வழிபடு தெய்வம் கட்கண் டாங்கு.'' என்பது நற்றிணை. ''சுறவுக்கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்'' என்று நச்சினார்க்கினியர், வழக்கில் நிகழ்ந்த நிகழ்ச்சியையே எடுத்தி யம்புகின்றார். முருகனுக்குக் கொடியான கோழிக் கொடியை நட்டு, அதன் பக்கத்தில் அவன் இருப்பதாகக் கருத்திற் கொண்டு, ஈர அன்பினர் வாழ்த்தி வணங்கு தலால் சேயோனாகிய முருகன் வானுயர் நிவப்பின் தன் தோற் றத்தைக் காட்டிப் பின் மணங் கமழ் தெய்வத்தின் இளநலக் கோலத்துடன் காட்சி தந்து அவ் வன்பர்களுக்கு அருள் புரிவான் என்ற திருமுருகாற்றுப்படையால் அறியப்படுகின்றது.

— டாக்டர். மொ. அ. துரை அரங்கசாமி.

ஆகமாகிய இந்த மனித உடம் பிலே தெய்வ பக்திகொண்டு, இதனுள் அருட்சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங் களாகவும் உலவி அருள் வாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகிற பெரியோர்களே, மகான்களே சித்தர் கள்.

பாரத நாட்டில் ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக வனங்களிலே தவம் செய்து, ஆன்ம நேயம் கூடி, அரிய சமாதி நிலையிலே இருந்து, எல்லையற்ற பரம்பொருளின் பேரின்ப அமுதை உண்டு அமரர்களாக வெளிவந்து, மக்களையெல்லாம் தெய்வ நெறியிலே வழிப்படுத்தி ஆண்டு அருளியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இமயமலையிலும் பொதிகை மலையிலும் இன்றைக்கும் அந்த மரபு ஒளி வீசிக்கொண்டிருக் கிறது! அஃது அணையாத தீபம், நந்தா விளக்கு, புயலும், மழையும், வெயிலும், பனியும் அந்த ஒளியைத் தொடுவதில்லை. அது காலனைக் காலால் உதைத்த கடவுள் தன்மை யோடு நிலையாகி ஒளிவீசி நமது சமுதாயத்தைப் பாதுகாத்து வரு கிறது. அந்த ஒளிவிளக்கே சித்தர் களின் இலக்கியமாகும். அதனுடைய சுடரே இருள் சூழ்ந்த உலகில் என்றென்றும் ஒளிபரப்பி வருகிறது.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கைகூடினவர்கள் என்று பொருள். இந்தச் சித்தி அவர்களுக்கு எப்படிக் கிட்டியது? திருமூலர் கூறுகிறார்:

''யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே!''

யோக சமாதியை உகந்தவர் யாரோ, அவரே சித்தர் என்று வரை யறை செய்கிறார் திருமூலர். இதுவே ''ஆகத்திலே தெய்வபக்தி கொண் டார்'' என்ற பாடலின் பொருளு மாகும்.

சித்தர்களுடைய அடிப்படை இதுதான். திருமூலர் சொல்லுகிற யோக சமாதி இந்த உடம்பிலே தெய்வ சக்தியைக் கூடுகிற தவயோகம் இருக்கிறதே அந்த யோகமே சித்தர்களுடைய தவநெறி யாகும்!

— 3 —

மனித உடம்பு நிலையற்றது. மனித வாழ்வு பயனற்றது என்றெல் லாம் கூறுகிற வெறுப்புநிலை ஒரு புறம் இருக்க,

''மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே'' என்கிற நிலையே வேறு!

இந்த மனித உடம்பும் இந்த மனித வாழ்வுமே தெய்வத்தைக் காணுதற்குரிய ஒப்பற்ற சாதனங்கள் என்று தெளிகிற நிலை இருக்கிறதே, அதுவே சித்திகளுக்கெல்லாம் அடிப் படையான சித்தி. திருமந்திர மாமுனி வரான திருமூலர் பாடுகிறார்:

''உடம்பினை முன்னம்
இழுக்கென்(று) இருந்தேன்
உடம்பினுக் குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்
கொண்டான் என்(று)
உடம்பினை யானிருந்(து)
ஓம்புகின் றேனே!''

### வேதாசலம்

மலையினைக் குறிக்கின்ற வட மொழிச் சொற்கள் சில, ஊர்ப் பெயர்களிலே சேர்ந்திருப்பதைக் காண்கிறோம். பழந்தமிழ்ப் பெயர்கள் கொண்டு விளங்கிய திருக்கோயில்களுக்கு வடமொழி யாளர் மொழிபெயர்த்து - வட மொழிப் பெயர்களையே இட்டு வழங்கி வந்தார்கள். தமிழ்ப் பெயர்கள் மறைய, வடமொழிப் பெயர்களே இன்று வழங்கி வருகின்றன. திருக்கழுக்குன் றத்தின் பழம்பெயர் 'மறைமலை'. அதுதான் இன்று ''வேதாசலம்'' என வழங்கி வருகின்றது. ''வேதாசலம்'' எனப் பெயர் கொண்டிருந்தவர் தமதுபெயரினை ''மறைமலையடிகள்'' எனத் தனித் தமிழில் மாற்றி வழங்கி வந்தமை யாம் அறிந்ததல்லவா? வேதம் - மறை. அசலம் - மலை.

இந்த உடம்பு மிகப் பெரிய சாதனம், இதனுள் புருடோத்தமனாகிய பரமாத்மா, இறைவன், கோயில் கொண்டிருக்கிறான் என்று கண்ணாரக் கண்டு, இந்த உடற் கோயிலைப் பக்குவமாகப் பாதுகாத்து, இறைவனுக்குரிய இடமாகப் பரிசுத்த நிலையிலே பேணி, யோக சமாதி உகந்தவர் யாரோ அவரே மெய்யான சித்தர்கள். அவர்கள் பெற்ற தெய்வ ஆற்றல்கள் வெறும் செப்பிடு வித்தைகள் அல்ல. அந்தத் தெய்வ ஆற்றல்கள் உலகையே உய்விக்கிற பேரின்ப ஆற்றல்கள் ஆம்.

''உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே'' என்று பாடுகிறார் அல்லவா? இந்தக் காரணத்தினாலே தான், உடம்பின் நுட்பங்களையும், இயல்புகளையும், மனத்தின் தன்மைகளையும், ஆதாரங்களையும், ஆராய்கிற காய சித்தி உபாயங்களும், வைத்திய முறைகளும், மனத் தத்துவ இயலாகிய பெரிய விஞ்ஞான அறிவும், சித்தர் இலக்கியத்தின் உப அங்கமாக எழுந்தன. உடல் தத்துவத்தோடு இணைந்து, மனத் தத்துவமும், விஞ்ஞான தத்துவமும் மெய்ஞ்ஞான தத்துவமும் பாதுகாக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது சரீர யோக சித்தி.

இந்த உடம்புளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை இந்த உடம்புளே வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோள்.

''யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்பதே சித்தர் இலக்கியத்தின் ஆதார சுருதி.

உடம்பின் மூலம் இறைவனை வழிபடுகிற ஞானநெறிக்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு ஆரம்பப் பயிற்சி தருவதற்காகவே நம்முடைய முன்னோர்கள், நம் நாட்டு ஞானிகள், நாடெங்கும் கோயில்களை நிறுவி அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பத் தெய்வத்தை வழிபடும் முறைகளையும் வகுத்துத் தந்தார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் எழுந்துள்ள பெரிய பெரிய கோவில்கள் எல்லாம் மகான்களும் சித்தர்களும் நமக்காக நிறுவித் தந்த ஆன்ம விடுதிகள், தெய்வ நிலையங்கள் விநோதக் காட்சிகளைப் பார்க்கச் செல்கிற கூடங்கள் அல்ல அவை. கலையழகும், தெய்வ சாந்நித்தியமும் இரண்டறக் கலந்த நிலையங்கள் அவை. கல் யானையிலே யானையைப் பார்த்தால், கல் மறைந்துவிடுகிறது; கல்லைப் பார்த்தால் யானை மறைந்துவிடுகிறது. உள்ளத்துக்குள்ளே இருக்கிற யானைதான் கல்லிலே யானையாகப் பிறப்பெடுக்கிறது. உள்ளத்திலே யானை இல்லை என்றால், கல்லிலும் இல்லைத்தானே! இது போலவே நம்முடைய கோவில்களின் அமைப்பிலும் நுட்பமான பக்தி தத்துவத்தைப் பொதிந்து வைத்துள்ளார்கள் நம் முன்னோர்களாகிய மகான்கள்!

வெளிச் சடங்குகளையும், வெளிச் செயல்களையும் உதறிப் பேசுகிற பேச்சானது, சித்தனுடைய ஆன்ம பக்குவத்திலிருந்து தெறித்து வருகிற ஞானப்பொறி. ஊருக்குப் போய்ச் சேர வேண்டியவன், கைகாட்டி மரத்தையே பார்த்துக்கொண்டு அந்த இடத்திலேயே நின்றுவிடக் கூடாதே என்ற பரிவிலும் கவலையிலும் எழுந்த எச்சரிக்கைப் பேச்சு அது. அவநம்பிக்கையினாலோ அல்லது அலட்சியத்தினாலோ, எழுந்த வார்த்தைகள் அல்ல அவை. போலித்தனத்தைச் சீறுகிற சீற்றத்திற்கும், உண்மையை வெறுத்துப் பேசுகிற பேச்சுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியானால் தான் சித்தர்களுடைய பாடலின் உட்பொருள் நமக்குத் துலங்கும்.

ஆம்; நம்முடைய நாட்டுச் சித்தர்கள் எல்லாரும் ஆழ்ந்த தெய்வ பக்தி நிரம்பியவர்கள். தெய்வ வெறி நிரம்பிய தெய்வ மாக்காதவர்கள் அவர்கள். அவர்கள் பொது மக்களுக்காகத் தெய்வ சாந்நித்தியத்தைப் புறவடிவிலே காட்டி இயங்கச் செய்த வெளி அமைப்புக்களே. நம் நாட்டுக் கோயில்கள் அனைத்தும் சீராக ஓங்கித் தவறாது வளர்ந்தால்தான் சமுதாயத்தின் ஆன்மா செம்மைப்படும் என்ற இரகசியத்தை உணர்ந்த சித்தர்கள் கோயில்களில் தங்கள் சித்திகளையும் காப்பாக அமைத்து, இவற்றின் நெறி முறைகளையும் அருவத்திலே நின்று கண்காணித்து வருகிறார்கள். இவை தவறக் கூடாது என்பதற்குத் தங்கள் இலக்கியத்திலும் பலமான எச்சரிக்கைகளைப் பாடிவைத்திருக்கிறார்கள். கோவில்களில் பூசனை முறைகள் தவறாமல் நடத்த வேண்டும் என்பதில் திருமூலர் போன்ற மகான்களுக்கு அளவில்லாத கவலையும் ஆர்வமும் இருந்து வந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆம்; நமது உடம்புளே ஆன்ம லிங்கம் இருக்கிறது என்றால், மகாலிங்கம் கோயிலில் இருக்கிறது. நாதலிங்கமாகிய மகான்களினுடைய பாடல்களிலும் அதுவே காட்சி தருகிறது. இந்த வழிபாடு நம்மை என்றென்றும் வழி நடத்துமாக!

X

## உயிர்

தானும் இயங்கி, மெய்க்குள்ளே புகுந்து அதனையும் உய்க்கும் இயல்பினையறிந்த நம்முடைய முன்னோர்களாகிய தமிழர்கள், தாமும் தனித்து இயங்கி, மெய்யெழுத்துக்குட் புகுந்து அவற்றையும் இயக்கும் எழுத்துக்களை ''உயிர் எழுத்து'' என்னும்பெயரிட்டுக் கூறியது வியத்தற்குரியது. இன்னும் அந்த ஆன்மாவுக்கு ''உயிர்'' என்று பெயர் வைத்ததும், அதனைத் தாங்கி நிற்கும் மெய்க்கு ''உடல்'' என்று பெயர் வைத்ததும் நினைக்குந்தோறும் வியப்பைத் தருகின்றது. ''உயிர்ப்பை உடையதால் அதற்கு உயிர் என்று பெயர் வந்தது'' என மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான மாபாடியத்துள் கூறியருளினார்கள். ஆனால், தத்துவ ஞானம் கைவரப் பெற்ற பின்னரே எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்று பெயரிட்ட முன்னோர்கள், இறைவன் இந்த உயிரை உடலோடு சேர்த்து இயங்குமாறு செய்ததன் நோக்கம், அந்த ஆன்மாவானது உய்தி பெறுவதற்கு, அதாவது ஈடேறுவதற்குத் தான் என்றறிந்த அவர் ''உய்'' என்ற பகுதியின் அடியாக-அந்த உயிர் என்ற பகுதியின் அடியாக - அந்த உயிர் என்ற பெயர் கொடுத்திருக்க வேண்டுமென்று கருதினால், அது தவறாகாதன்றோ?

— அ. மு. சரவண முதலியார்
(கட்டுரைப்பொழில்.பக்கம்.133.)

# அறம், அன்பு, அருள்

## இ. இரத்தினம், பீ.ஏ.

ஓர் இனத்தவரின் பண்பாட்டு நலனையும் வீச்சையும் அளப்பதற்கு அவர்களிடை அமைந்த எண்ணக் கருக்கள் சிறந்த அளவு கோல்களாகும். தமிழரிடை பெருவழக்கிலுள்ள அறம், அன்பு, அருள் என்ற மூன்று எண்ணக் கருக்களைப் பற்றி இப்பொழுது சிந்தித்தல் பயனுடைத்து.

பண்பாடு கூர்ந்து சமூகத்தில் தலையிடம் கொள்ளும் போது, பண்பாட்டின் தனித்தனிக் கூறுகள் ஏற்கும் சொற்கள் பண்பாட்டு வரலாற்றினை நற்சான்றுடன் கூறும். தனியாய் நிற்கும் ஒரு சொல் நமக்குச் சான்று ஒன்றும் கூறுது. ஆயின், சொற்கள் இலக்கியங்களில், அறநூல்களில் ஆட்சிசெய்யும்பொழுது அவை பண்பாட்டின் இழிவு சிறப்பிற்குச் சான்று பகரும்.

சொற்கள் வலிந்து தோற்றப் பட்டவையாயிருக்கலாம். அல்லது மக்கள் இயக்கத்தால் திரைமறவிலிருந்து தெளிவாகிப் புலவர், நாவில் தவழலாம், எவ்வகையிலும் சொற்கள் பண்பாட்டின் விம்பங்களே.

அன்பு, அறம், அருள் எனும் இம் மூன்று சொற்களும் சங்க நூல்களிலேயே பயிலத் தொடங்கிவிட்டன. சங்க நூல்களிலும் தொல்காப்பியத்திலும் ஆங்காங்கு பல தறுவாய்கட்கு ஏற்பப் பயின்று வந்த இச் சொற்களுக்கு ஆற்றல் அளித்து அவற்றின் உட்கிடையை ஒருங்கே இணைத்துத் தமிழ்ப்பண்பைத் தெளிவுபடுத்திக் காட்டியவர் திருவள்ளுவர் பெருமானே.

தமிழன் வரலாறு, சோழர் காலத்தின்பின் மரபு ஒழிந்தது. அன்றியும் சிந்தனை வளமும் குன்றியது எனலாம். மிகப்பழைமையை விரும்பி இது கூறப்படவில்லை. இக் கூற்றுக்குக் காரணமுண்டு.



இ. இரத்தினம், பி. ஏ.

இலக்கியத்தை ஆய்ந்தவர்களும் நயந்தவர்களும், ஒன்றில் இலக்கியச் செழிப்பை ஆய்ந்தனர். இன்றேல் தம் உளம் கவர்ந்த சில சமய, சமூகக் கோட்பாடுகளை இலக்கியத்தில் கடைந்தெடுக்க முயன்றனர். ஆயின் தமிழரின் அடிப்படைச் சிந்தனை முறைமைகளைக் காய்தல் உவத்தலின்றிச் சமூக நிலைமைகள் சார்த்தி ஆய ஒருவரும் முற்படவில்லை.

சமூக ஒழுக்க முறைமைகள் ஒவ்வோர் இனத்திற்கும் அதனதன் சூழல், இயல்பு என்பவற்றின் தாக்கங்களால் உருப்பெறும். அவை தோன்றிய இயல்நிலை, உட்கருத்து வளர்ந்து சமூகத்தைப் பேணிய ஆற்றல், என்பவற்றை விஞ்ஞான முறையில் ஆய்ந்தால் தான் நாம் அவற்றின் தாக்கத்தை முழுமையும் உணரலாம்.

நாம் இப்பொழுது எடுத்துக் கொண்ட சொற்களை ஆராய்வோம். இச் சொற்களைப் பிரித்துப் பகுதி விகுதி கூறல் இலகுவன்று. அவ்வாறு ஆய்தல் முழுமையான வழியும் அன்று. ஆயினும் அதுவும் ஆராய்ச்சிக்குப் பயன்படும்.

'அறம்' என்ற சொல்லை நோக்குவோம். அறம் என்பது 'அறு' எனும் அடியும் 'அம்' எனும் விகுதியும் சேர்ந்தாய சொல் என்பது புலப்படும். 'அறு' என்பது வரையறுத்து விதிக்கப்பட்டது. அறம், இங்கு அறுவைத் தொழிலை நடாத்தியவர் உயர்ந்தோர், நூலோர் ஆவர். இவர் சமூகத்தின் பிரதிநிதிகளாகவே இதைச் செய்கின்றனர். இதனை மனதில் இருத்தியே பரிமேலழகர் அறம் என்பது 'மனு' முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம் என்றனர். பரிமேலழகர் தம் காலத்தும் பயின்ற நெறிகளைப் பின்பற்றி இவ்வாறு

கூறினரேனும், உண்மையில் 'அறம்' இது என விதிப்பது சமூகமே.

சமூகம் என்பது ஒரே நிறுவகங்கள், ஒரே பண்பாடு என்பவற்றுற் கட்டுப்பட்ட மக்கள் கூட்டமாகும். இதனால் ஒவ்வொரு சமூகத்திற்கும் அதற்கென வாய்த்த இலட்சிய முறைமைகள் ஒரு சீராய் அமைந்திருக்கும். சமூகத்தில் யாரை உயர் மனிதர் எனச் சமூகம் கருதுகிறதோ அவரிலிருந்து அச் சமூகத்தின் குண நலங்களை நாம்அறிந்துகொள்ளலாம்.

அன்பு அருள் என்ற பதங்கட்கும் பகுதி விகுதியாய்க் கருத்துக் கூற முயன்றாலும் அது அவ்வளவில் பொருத்தமாயிருக்கும் என்று சொல்ல முடியாது. இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது. இச் சொற்களும், அவை சுட்டும் சிந்தனை முறைமைகளும் மிக்க தொன்மையானவை என்பது. அது இம் மூன்று சொற்களுக்கும் ஒத்த சொற்கள் வடமொழியில் உள்ளன ஆயினும் இவை தம் கருத்துச்சுட்டில் முழுமை பெற ஒத்தனவல்ல. அறமும் தருமமும் சமமானவை. அன்பும் கருணையும்சமமானவை.அருளுக்கும் கருணையையே சொல்லவேண்டும். ஆயின் கருத்துச் சுட்டில் இவை முற்றொருமையுடையனவல்ல.

இனி, இற்சொற்களின் கருத்துகளை ஆய்ந்து, அவற்றினூடாகத் தமிழர் பண்பாட்டின் ஒரு காட்சியை நாம் குறித்துக் கொள்வோம். எவ்வளவில் அவை தமிழர் பண்பாட்டை ஒழுக்க மேன்மையை மெய்யியல் ஆற்றலை, சமூகவியல் நெறிப்படுத்தலைக் காட்டுகின்றன என்று துணிவோம்.

இம் மூன்று சொற்களும் திருக்குறளில் அறத்துப்பாலின் தலையாய கருத்துக்களாய் அதிகார இடம் பெற்றுள்ளன. பாயிரத்தின் நான்காம் இடம்பெற்று அறமும், அறத்துப்பாலில் எட்டாம் அதிகாரமாய் அன்பும், இருபத்தைந்தாம் அதிகாரமாக அருளும் தோன்றுகின்றன.

அறம் என்பது விதித்தது செய்தலும் கடிந்தது விலக்கலுமாம். எனவே, அறம் என்பது ஒருவன் செய்யவேண்டிய கருமம் என்பது புலப்படும். இதனை வள்ளுவர் இரு பாற்படுத்தி இல்லறம் துறவறம் என்றார். மெய்யுணர்வு எனும் மேன்மைப் பொருளை நாடுவார் எவ்வழி நின்று, எவற்றைக் கடைப் பிடித்து முயலவேண்டுமென்பதற்கு வள்ளுவர் நூல் போட்டு வழிகாட்டியுள்ளார்.

இல்லறத்தார் துறவறத்தார் இருவர்க்கும் பொதுவான அறத்தின் இயல்பினை அறன் வலியுறுத்தலில் அவர் கூறியுள்ளார். அறத்தினைக் கடவுள் வாழ்த்தோடு வைத்துப் பாயிரமாக்கியது அறத்திற்கு ஓர் இறைநிலை அளித்ததாகும்.

அறம் என்றால் என்ன? பொதுப் பட வரைவிலக்கணம் கண்டோம் எனினும் சுட்டியறிதல் நன்று. அறன் வலியுறுத்தலில் இரண்டு வகையான அறம் கூறப்பட்டுள்ளது. 'ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்' என்ற இடத்தும், 'செயற்பாலதோரும் அறனே, என்ற இடத்தும் கூறப்பட்ட அறம் ஒரு வகை. இது செயற்பாலதாய் இடைவிடாது இயன்ற வழி எலாம் செலவேண்டியஅறம். இது பிரகிருதி வயப்பட்டுஇயற்கையாய் நிகழ்கின்ற செயலன்று. வெறும் முக்குணத்தின் செயலென்றும் சொல்லிவிடமுடியாது. உளம்செலுத்திச் செய்ய வேண்டிய ஒன்று. இதுவே அறவினை. உண்மையான கருமயோகம்.

மற்றைய அறம் அருவமானது, அருவினையானது.

'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்' என்பதும் அதன் விளைவாக 'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்து அறம்' என்பதும் அவ்வறம். முற்கூறியது புறச்செயல், இதில் கூறப்பட்டது அகச்செயல்.

வள்ளுவர் பெருமான் அறம் என்பதற்கு என்ன உருவம் கொடுத்

## ஆரியர்

''ஆரியர்'' என்ற சொல் ''ரு'' என்ற வினைப்பகுதியிலிருந்து தோன்றியிருக்கின்றது. வடமொழியில் வெவ்வேறு கணங்களின் வரும் ''ரு'' என்ற தாதுவுக்குப் பெரும்பாலும் ''நடத்தல்'' என்பதே பொருள். அதாவது, ''ஆரியன்'' என்ற சொல்லுக்கு ''நாடோடி'' ''ஊரூராகத் திரிபவன்'' என்பது பொருள். ஆரியர்கள் வீடுவாசல் அமைத்துக்கொண்டு வாழ விரும்பியதில்லை என்று தெரிகிறது. மொகலாயர்கள் கூடாரங்களில் வாழ்ந்து வந்தது போலவே ஆரியர்களும் கூடாரமடித்தோ பந்தல் அமைத்துக்கொண்டோ வாழ்ந்திருப்பார்கள் என்று தோன்றுகிறது. ஒரு விஷயத்தில் அவர்களுடைய இந்தப் பரம்பரைப் பழக்கம் இன்னும் நிலைத்திருக்கிறது. பாபிலோனியாவில் யாக யக்ஞங்கள் நிகழ்ந்த இடங்களைப் பார்த்தால் அவை பெரிய கோயில்களின் பிரகாரங்களாக இருப்பது தோன்றும். ஹரப்பாவிலும் மொஹஞ்சதாரோவிலும் கண்டு பிடிக்கப்பெற்ற பழைய நகரங்களின் இடிபாடுகள் தாஹி மக்களின் கோயில்கள் இருந்த இடங்கள் என்றும், அவ் விடங்களில் வேள்வி நடத்திருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சி வல்லுநர் கருதுகிறார்கள். கோயில்களில் நிகழ்த்தும் இந்த வழக்கத்தை ஆரியர்கள் பின்பு நிறுத்திவிட்டார்கள். பந்தலிலேதான் வேள்வி நிகழ்த்தவேண்டும் என்ற முறையை அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஆரியரின் குலமுறையில் வந்தவர்கள் கூடார வாழ்க்கையை விட்டு நாளடைவில் வீடுகட்டிக் கொண்டு வாழலானார்கள். ஆனால், வேள்விக்குப் பந்தல்தான் வேண்டும் என்ற கொள்கை இன்னமும் நிலைத்திருக்கிறது.

— தர்மானந்த கோசம்பி
(பகவான் புத்தர் - பக்கம். 8-9.)

துளார் என்பதைச் சிறிது நோக்கு வோம். அகவினை இரண்டிலும் ஆற்றப்படும் செயல் மற்றைய வரைச் சார்ந்தது. ஆக அது சமூக சம்பந்தமாக இயல்கின்றது. அழுக் காறு அவா வெகுளியை விடுதல் என்பதும் சமூகத்தில் மற்றைய வரைச் சார்ந்து ஒழுகும் செயலாம். இனி வள்ளுவர் அறப்பாலின் கீழ் என்ன செயற்பாடுகளைத் தொகுத்துக் கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

பாயிரத்தை அறத்தோடு முடித்தபின் குறட்பொருளை இல்லறத்தோடு வள்ளுவர் தொடங்கு கின்றார். இல்வாழ்க்கையின் பயன் அன்பு என்பது போல் புதல்வரைப் பெறுதலின் பின் அன்புடைமை வைக்கப்பட்டுள்ளது. அன்பிற்கு இல்வாழ்வு ஒரு பயிற்சிக் களன். அன்பினால் காதலினால் இல்லறம் தோன்றும் எனினும், வேட்கையே மீதூர்ந்த ஒரு சமூக நிறுவகம், இல்லறம். சுயநலத்தாலெழுந்த வேட்கை இல்லறத்தால் பதங்கமாகி அன்பாகின்றது. வேட்கையைப் பொன்னாக்கும் வித்தையை நாம் காமத்துப்பாலிற் காணலாம். காதலொடு அரும்பிய அன்பு புதல்வரைப் பெறுதலோடு பற்றுகி அன்பாகிச் சமூக நோக்குத் திசையில் விரிவடை கின்றது. அவையத்து முந்தியிருக்கச் செய்தலும் சான்றோனாக்குதலும் தன்னலத்திற் பிறந்த பொதுநலம்.

அன்பை ஆதாரமாகக் கொண்டு இல்லறவியலின் எஞ்சிய அதிகாரங் களிலே தொண்டினையும் மன நலத்தினையும் ஒழுக்கத்தையும் வள்ளுவர் விரிக்கின்றார். இதில் இறுதியில் வரும் மூன்று அதிகாரங்களும் செயற்பாட்டை எடுத்து ஓதுவனவாகும். இதில் ஒப்புரவறிதல் 22ஆம் அதிகாரமாக வருகிறது. ஒப்புரவறிதல் என்பதற்கு பரிமேலழகர் கூறும் கருத்து நோக்கு தற்குரியது. ஒப்புரவு என்பது உலக நடையினை அறிந்து செய்தல் என்பர். அவர், உலக நடை என்பது நூல்கள் விதித்ததற்கு அப்பாலும் சென்று உலக இயல்பினை அறிந்து, அதனை ஒட்டி உபகாரஞ் செய்தல் என்ப தாகும். இது உண்மையில் கீதையிற் காணப்படும் ''லோக சங்கிரகமே''.

ஒப்புரவு எனும் அதிகாரத்தில் முதற்குறள் ''கைம்மாறு வேண்டா கடப்பாடு'' என்று தொடங்கு கின்றது. இது தமிழ் இலக்கண முறையில் ''கடப்பாடு, கைம்மாறு வேண்டா'' என்று நிற்கும். ஒப்புரவுகள், தொண்டுகள் என்பவை பிரதியுபகாரங்களை வேண்டி நிற்பன வல்ல என்பது இதன் கருத்து. ஆயின் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்று பிரித்தெடுத்துப் பார்க்கும் போது அது பற்றற்ற கர்மத்திற்குச் செந்தமிழ்ச் சொல்லாக்கம் போல் நிற்கும்.

இல்லற வாழ்வும் புதல்வரைப் பெறுதலும் ஒருவர் நெஞ்சத்தில் அன்பினை இயக்கும் என்பது ஒரு சமூக நியதியாகத் தமிழரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்பு என்பது ''தொடர்புடையார் கண் காதல் உடைமை'' என்பர் பரிமேலழகர். அன்பு என்பது உள்ள நெகிழ்ச்சி. நச்சினார்க்கினியரோ ''தன்னாற் புரக்

## விழுந்தது அடி!

வில்லிபுத்தூராழ்வார், பாரதத்தினைத் தமிழிலே பாடிய பெரும் புலவர். திருமால் காப்புச் சாத்தும் வைணவர். சமயப் பற்றின் காரண மாகவும், தமிழிலே பாரதத்தைப் பாடியமை காரணமாகவும் அவரை வைணவர்கள் ஆழ்வார் வரிசையிலே வைத்துப் போற்றுவார்கள். சமயக் காழ்ப்பு மிக்கிருந்த அக் காலத்திலே - மதவெறி காட்டாமல் - அவர் சிவபெருமானைப் போற்றியும் உள்ளார்.

அருச்சுனனுக்கு அருள் செய்வதற்காகச் சிவபெருமான் பன்றி வேட்டையாடும் வேட்டுவர் கோலத்துடன் எழுந்தருளி வருகிறார். அருச்சுனனுடன் வாக்குவாதம் நடைபெறுகிறது. அந்த வாக்கு வாதத்தின்போது அருச்சுனன் சிவபெருமானை வில்லால் அடிக்கிறான். அந்த அடி விழுந்தபோது பிரபஞ்சத்தில் நிகழ்ந்த செய்தியினை வில்லிபுத்தூராழ்வார் சிறப்பாக எடுத்துக் கூறிவிடுகிறார்:-

''விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்
விரிஞ்சன் அரியே முதலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடி படாதவர்
மனுக்கள் முத லோர்கள் அதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில் பல யோனியிலும் யாவடி படாதன
இருந்துழி யிருந்துழியரோ.''

''வேதமடியுண்டன விரிந்த பல ஆகம
விதங்களடி யுண்டன ஒரைம்
பூதமடியுண்டன விநாழிகை முதற் புகல்செய்
பொழுதொடு சலிப்பில் பொருளின்
பேதமடியுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலர சன்தன் மகளார்
நாதனமலன் சமர வேட வடிவங் கொடு
நரன் கையடி யுண்ட பொழுதே.''

அருச்சுனனது வில்லால் சிவபெருமான் அடியுண்டபோது சராசரங்கள் அனைத்தும் அடியுண்டன என்று கூறியது ''சிவனே பரம்பொருள்'' என, சிவபரத்துவம் நிலைநாட்டியதாகும் என்பர்.

கப்படுவார் மேலுளதாகிய காதல் அன்பு'' என்பர். (புறம். 5. மேற்கொள்)

இல்லறவியல் அதிகாரத்தின் பின்வரும் ஒவ்வோர் அதிகாரமும் அன்பினை வளர்த்து அறஞ் செய்வதற்குரிய பயிற்சிகள் என நாம் கொள்ள வேண்டும். இருவருடனும் சிலருடனும் நின்ற அன்பு, வளர்ந்து அருளாகி எல்லார் மாட்டும் பரவும் ஓர் இயற்கையாவதை நாம் திருக்குறளில் காணலாம். அன்பும் அறமும் அருளும் செறிந்த வழி மெய்யுணர்வு (ஞானம்) தோன்றும் வரலாற்றை நாம் இங்கு காண்கின்றோம்.

இவ்விடத்தில் 'கரும யோகம்' என்ற எண்ணக் கருவினைச் சிறிது சிந்தித்தல் நலம். எது கருமம் என்பது கேள்வி, அவரவர் தத்தம் நிலைக்குரிய கடமையைச் செய்தல் பொதுவாகக் கர்மம் என்று கொள்ளப்படும். ஆயின் கர்மம் எப்பொழுதும் அறமாவதில்லை. இன்னும் அது பிறவி, பதவி, குலம் ஆகியவற்றாலான கருமம், இக் கருமங்கள் செய்யப்படும் சிறப்புமுறையினால் கருமம் தருமமாகும். எவ்வகைக் கருமத்தையும் யோகமாக்குவதும் சிறப்பாக்குவதும் அக் கருமத்தோடியைந்த அறப்பண்பே. எல்லா அறங்கட்கும் அன்பு சார்பு என்பது வள்ளுவர் கருத்து(76). இக் கருத்தே 10-ஆம் திருமுறையில் திருமூலரை 'அன்பே சிவம்' என ஆணையிற்றிளைக்க வைத்தது.

அடுத்து நாம் கருத்திற்கொள்ள வேண்டிய சொல் 'அருள்', இதனைப் பகுதி விகுதியாகப் பிரித்து நாம் மனமாரக் கருத்துச் சொல்ல முடியாது. சிலர் கூறியுளரேனும் அவற்றை நாம் ஆராயவேண்டியதில்லை. இச் சொல் ஆய காலம் மிகத்தொன்மையானது.

திருக்குறளில் அறப்பாலில் துறவறப் பகுதியின் ஆரம்பத்தில் அருளுடைமையைக் காண்கின்றோம். பரிமேலழகர் இதற்கு இலக்கணம் கூறும்போது சொல்கிறார், ''அருளுடைமை - தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை'' என்று. இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில் அன்பின் விளைவு அருள் என்பதாகும். அன்பு என்பது தொடர்பு பற்றி வரும் உள்ள நெகிழ்வு என்றும், அருள் தொடர்பு வேண்டாது இயல்பாகச் செல்லும் அன்பு என்றும் நாம் கொள்ளலாம். இது 'அருள்' துறவறத்தில் முதலாவதாக வரும் அதிகாரம். எனவே துறவறம் என்பது இயல்பாக அன்பு கனிந்த உள்ளத்திலே கட்டப்படும் பரந்த நோக்கு. துறவறத்திற்கு அருள் ஆள்தலே உறுதிப் பொருள்.

இம் மூன்று சிந்தனை முறைமையையும் நாம் நோக்கும்பொழுது இவை மூன்றும் ஒன்றிற்கு ஒன்று ஆதாரமாய் ஒன்றின்றி மற்றையது விருத்தியடைய முடியாப் பெற்றியுடையவாய் இருப்பதை நாம் காண்கிறோம். அறத்தால் அன்புதோன்றும். அன்பினால் அறம் இன்னும் விருத்தியடையும். அன்பு வளர்ந்து அருள் ஆகும். சில இடங்களில் அருளே ஒருவரின் அன்பினைத் தூண்டும். இவ்வாறாக இம் மூன்று செயற்பாடுகளும் ஒருவனைப் பேரா இயற்கை நிலையை அடையச்செய்யும்.

உண்மையில் அறஞ்செய்தல் என்பது வள்ளுவர் கூறிய ஒழுக்க நெறிகளை ஒருவர் தம் சகல வாழ்துறைகளிலும் கடைப்பிடித்தலாகும்.

ஒருவன் செய்யும் எந்தக் கர்மத்திலும் அடிப்படையாய் அமைந்து செயற்படவேண்டிய பண்புகளே இங்கு வள்ளுவர் கூறிய அறங்கள். அன்போடும் அருளோடும் ஆற்றும் பணிகள் அறங்களாகி விடுகின்றன. கருமம் கருமயோகமாவது அருளின் பின்னணியிலேதான்.

சங்ககாலத்தில் எழுந்த அன்பே பிற்காலத்தில் பக்தியாகிச் சிவபரம்பொருளின் தனிப்பெருங் குணமாகியது. அன்பு உறவினரையும் தன்னையும் ஒன்றாகிக் காட்டும். அருள் மாற்றாரையும் தன்னையும் ஒன்றாக்கிக் காட்டும். அருள் என்பது பரிசோதனை வழியாக அத்துவித ஞானத்தைக் கட்டவிழ்க்கும் ஓர் திறவுகோல்.

இம் மூன்று எண்ணக் கருக்களும் தமிழர் பண்பாட்டின் அடிப்படைகள். மேலும் சிந்தித்துக் கருத்தூன்றி நம் நடைநெறியை அமைக்க வேண்டிய பற்றுக் கோடுகள் அவை. அரும்-அன்பு-அருள்.

## கந்த புராணம்

''கந்த புராணம் ஒரு பெருநூல். இதைப் பொதுவாக மற்றப் பெருநூல்களோடு ஒப்பிடுவது முறையாகாது. இது வந்த நோக்கம் வேறு முருகப் பெருமானுடைய கதையை விரித்துக் கூறுவதே இதன் நோக்கம். இந் நோக்கம் நன்கு கைகூடி மக்களிடையே இந் நூல் மிக்க பிரசாரம் பெற்றுவிட்டது, சென்ற தலைமுறை வரையிலும் சோழ நாட்டிலும் ஈழ நாட்டிலும் சைவ இல்லங்கள் அனைத்திலும் இந் நூல் பூசிக்கப்பட்டு வந்தது. வீடுகள்தோறும் நூலைப் படித்தார்கள். ஊர்கள் தோறும் கந்த புராணப் பிரசங்கங்கள் நடைபெற்றன. மக்கள் சமய உணர்வு நிரம்பப் பெற்றவர்களாக வாழ்ந்தார்கள். நூலின் சிறப்புக்கு இதனினும் வேறு சான்றுகள் வேண்டுவதில்லை.

மேலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்திருந்த கோடீசுவர ஐயர் என்பவர், ''கந்தபுராணக் கீர்த்தனை'' என்ற பெயரால் இந் நூல் முழுமையையும் இசைத் தமிழாகப் பாடி, பல இடங்களில் இப் பாடல்களைப் பாடிக் கச்சேரி செய்து வந்தார்.

இவை யாவும், இந்த நூலுக்கு நாட்டில் இருந்த செல்வாக்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ''கந்த புராணத்தில் சொல்லப்படாத பொருள் எதுவும் இல்லை'' என்று ஒரு பழமொழி நாட்டில் வழங்குகிறது. கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்தும் இல்லை.

சமயத் தத்துவம் கூறும் சைவப் புராணங்களுள் இதுவே முதலாவது. இதுவே சிறந்தது.''

— மு. அருணாசலம், எம். ஏ.
தமிழ் இலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு.

# பரிபாடற் செவ்வேள்

## கலாநிதி. ஆ. கந்தையா

எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக நின்று திகழும் தொகை நூல் பரிபாடல் ஆகும். தொகை நூல்கள் எட்டனையும் எடுத்துச் சொல்லும் வெண்பாவின்கண் ''ஓங்கு பரிபாடல்''* என்று இத் தொகை நூல் பாராட்டப்பட்டுள்ளது. இப் பாடல்கள் தொகுக்கப் பெற்ற காலத்தில் எழுபது பாடல்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றது. இதனைப் பாடியவர் பெயரும் பாடப்பட்ட காலமும் அறிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ள

''திருமாற் கிருநான்கு செவ்வேட்கு [முப்பத்
தொருபாட்டுக் காடுகட் கொன்று [— மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை [நான்கென்ப
செய்யபரி பாடல் திறம்''

என்ற வெண்பாவாலும், இறையனார் களவியலின் முதல் நூற்பா உரையினாலும்[1], தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர் உரையினாலும்[2] அறியக்கூடியதாக இருக்கின்றது.

எழுபது பாடல்களில் அழிந்தொழிந்தன போக எஞ்சியவையாக இப்போது எமக்குக் கிடைப்பவை இருபத்திரண்டாகும். இவ் விருபத்திரண்டு பாடல்களும் உ. வே. சாமிநாதையர் அவர்களின் முதன் முதல் வெளிவந்த பதிப்பில் 1 முதல் 22 வரை இலக்கமிடப்பட்டுப் பதிக்கப் பட்டுள்ளன. ஆனால், இத் தொடர் இலக்கங்களைக் கொண்டதாய் இவ் வொழுங்கில் இப் பாடல்கள் தொகுக்கப்பட்டிருந்தன என்று நிறுவுவதற்குச் சான்றுகள் எவையும் இல்லையென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[3] இவ் விருபத்திரண்டு



கலாநிதி ஆ. கந்தையா

பாடல்களை விடத் தொல்காப்பிய உரையாசிரியர்களின் மேற்கோட் செய்யுள்களிலிருந்து இரண்டு முழுப் பாடல்களும் சில உறுப்புக்களும் கிடைத்துள்ளன. இருபத்திரண்டு பாடல்களுள் ஆறு பாடல்கள் திருமாலைப் பற்றியன.[4] எட்டுப் பாடல்கள் செவ்வேள் மேற் பாடப் பெற்றவை;[5] ஏனையவை வையையைப் பாராட்டுவன. தொல்காப்பிய உரைகளில் மேற்கோளாகப் பயின்றுவந்த இரண்டு பாடல்களுள் ஒன்று திருமாலைப் பற்றியது; மற்றது வையையைப் பற்றியது.

திருமாலைப் பற்றிய ஆறு பாடல்களும் செவ்வேளைப் பற்றிய எட்டுப் பாடல்களும் கடவுள் வாழ்த்து என்னும் துறைபற்றியன.[6] பல பதிப்புகளிலே ''கடவுள் வாழ்த்து'' என்றே இப்பாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனல் இப்பதினான்கு பாடல்களும் ஏனைய நூல்களிலுள்ள கடவுள் வாழ்த்துகள் போன்று நூலின் முதலிலே 'கடவுள் வாழ்த்துப்' பாடல்களாக இடம் பெறவில்லை; வையையைப் பற்றிய பாடல்களுடன் விரவியே காணப்படுகின்றன. பரிபாடலிலுள்ள இருபத்திரண்டு பாடல்களில் முதல் நான்கு பாடல்கள் திருமாலைப் பற்றியன; ஐந்தாவது பாடல் செவ்வேளைப் பற்றியது. அடுத்த எட்டுப் பாடல்களுள் முதல் நான்கு பாடல்களில் இரண்டு வையையைப் பற்றியன; இரண்டு செவ்வேளைப் பற்றியன. அடுத்த நான்கு பாடல்களில் மூன்று வையையைப் பற்றியன; ஒன்று திருமாலைப் பற்றியது. இவற்றைத் தொடர்ந்து இடம்பெறுவன முறையே, செவ்வேள் மேலும், திருமால் மேலும், வையை மேலும் பாடப்பட்டவை, அடுத்து வரும் மூன்று பாடல்கள் செவ்வேளின் புகழ்பாடுவன. இறுதியான மூன்று பாட்டுகளும் வையை, செவ்வேள், வையை என்ற முறைப்படி காணப்படுகின்றன. எனவே, இவ்வாறு திருமால், செவ்வேள் ஆகிய கடவுளர்களைப் பற்றிய பாடல்கள்

---

* நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல் கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமெ ன்றித்திறத்த எட்டுத் தொகை.

தம்முள் விரவி வருவதோடு, வையை மேற் பாடப்பட்ட பாட்டுகளுடனும் விரவி வருவதால் அவற்றைப் பரிபாடலின் ''கடவுள் வாழ்த்து'' என்று கூறுவதிலும் ''கடவுள் வாழ்த்து என்னும் துறையைச்சார்ந்தன'' என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

மேலும், கடவுள் வாழ்த்து என்னும் துறை பற்றிய இப்பாடல்கள் நூலின் முன்னே இடம் பெறுவனவாயினும், திருமாலைப் பற்றிய பாடல்களா அல்லது செவ்வேளைப் பற்றிய பாடல்களா முதலில் இடம் பெறுதல் வேண்டும் என்ற வினாவிற்கும் இடமுண்டு. இப்போதுள்ள பதிப்புகளில் முன்னர் கூறியது போன்று திருமால் மேற் பாடப்பெற்ற நான்கு பாடல்கள் முதற்கண் இடம் பெறுகின்றன. அவற்றைத் தொடர்ந்தே ஏனைய பாடல்கள் விரவி இடம்பெறுகின்றன. இந்த முறையிற் பரிபாடற் பாட்டுகள் தொகுக்கப்பட்டனவா அல்லது செல்லரித்த ஏடுகளிற் சிதைந்திருந்த பாடல்களை நூல் வடிவிற் கொண்டு வந்தபோது, பதிப்பாசிரியரே இம்முறையைப் பின்பற்றினரா என்பது ஆய்வுக்குரியதாகும். இன்னும், பரிபாடற் பாட்டுக்களின் தொகையைக் குறிப்பிடும் வெண்பாவும் திருமால், செவ்வேள், கொற்றவை, வையை என்ற முறையிலேயே அவைகளின் தொகையைக் குறிப்பிடுவதும் நோக்கற்பாலது. எனினும், பரிபாடல் காலத்தில் சைவம், வைணவம் என்ற வேறுபாடின்றி மக்கள் சிவனையும் திருமாலையும் வழிபட்டனர் என்பதற்குச் சான்றுகள் பல உளவாதலால் அவை எவ்வாறு அமையினும் ஏற்புடைத்தே! இக்கட்டுரையிற் செவ்வேளைப் பற்றிய எட்டுப் பாடல்களை மட்டும் ''பரிபாடற் செவ்வேள்'' என்ற தலைப்பில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

செவ்வேளைப் பற்றிய இவ்வெட்டுப்பாடல்களின் தொடர் இலக்கம், பாடிய புலவர்கள், அப்பாடல்களுக்குப் பண் அமைத்தோர், அப்பண்களின் பெயர் ஆகியன பின்வருமாறு :

| பாடல் இல. | பாடியவர் | பண் அமைத்தவர் | பண்ணின் பெயர் |
|---|---|---|---|
| 5 | கடுவனிள வெயினனார் | கண்ணனாகனார் | பாலையாழ் |
| 8 | நல்லந்துவனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | பாலையாழ் |
| 9 | குன்றம்பூதனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | பாலையாழ் |
| 14 | கேசவனார் | பண்ணும் அவரே | நோதிறம் |
| 17 | நல்லழிசியார் | நல்லச்சுதனார் | நோதிறம் |
| 18 | குன்றம்பூதனார் | நல்லச்சுதனார் | காந்தாரம் |
| 10 | நப்பண்ணனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | காந்தாரம் |
| 21 | நல்லச்சுதனார் | கண்ணகனார் | காந்தாரம் |

மேலேயுள்ள அட்டவணையையும் ஏனைய பாடல்கள் பற்றிய விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது திருமாலையும் செவ்வேளையும் பாடிய புலவர்களைப் பற்றிச் சில விபரங்களைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. குன்றம்பூதனார் செவ்வேள் மேல் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்; ஏனைய புலவர்கள் ஒவ்வொரு பாடலைப் பாடியுள்ளனர். நல்லந்துவனார் செவ்வேள் மேற் பாடிய ஒரு பாடலோடு வேறு மூன்று பாடல்களை வையை மேற் பாடியுள்ளார்.[7] கடுவனிளவெயினனார் செவ்வேள்மேற் பாடிய ஒரு பாடலோடு வேறு இரண்டு பாடல்களைத் திருமால் மேற் பாடியுள்ளார்.[8] கேசவனார் செவ்வேள் மேல் ஒரு பாடலைப் பாடியதோடு, அப்பாட்டிற்கு இசையும் அமைத்துள்ளார். நல்லச்சுதனார் செவ்வேள் மேல் ஒரு பாடலைப் பாடியதோடு நல்லழிசியார் பாட்டு இரண்டுக்கும் குன்றம்பூதனார், நல்லந்துவனார் ஆகியோரின் பாட்டு ஒவ்வொன்றிற்குமாக நான்கு பாடல்களுக்கு இசையும் அமைத்துள்ளார்.[9]

மேலே எடுத்துக் காட்டப்பட்ட விபரங்கள் மூன்று உண்மைகளைத் தெளிவுபடுத்துகின்றன. செவ்வேளைப் பாடிய புலவர்கள் முருகப்பெருமான் மேல் நிறைந்த பக்தி உடையவர்கள் ஆவர். கடுவனிளவெயினனார் செவ்வேளையும் திருமாலையும் பாடிப் பரவியுள்ளமையால் முருக பக்தராகவும் திருமால் பக்தராகவும் காணப்படுகின்றார். இவர் சமயப் பூசல் சிறிதும் மருவாத தூய உள்ளம் படைத்தவர். இறையியல்பினை நுண்ணிதின் இயற்கையினின்றும் எடுத்துப் பற்பல இடங்களிலே விளக்கியுள்ளார். எனவே, பரிபாடற் காலத்திற் செவ்வேளையும் திருமாலையும் எவ்வகையான வேறுபாடுமின்றி வழிபட்டோர் வாழ்ந்துள்ளனர் என்பது இனிது தெளிவாகின்றது. இன்னும் சைவம், வைணவம் என்ற இரு வேறுபட்ட சமயக் கருத்துகள் இலக்

கியங்களிலே ஒன்றாக நிலவியுள்ளன என்பதற்குப் பரிபாடலிலுள்ள திருமால், செவ்வேள் ஆகிய கடவுளர் மேற் பாடப்பட்டுள்ள பாடல்களே சான்றாகும். இந்து சமய வரலாற்றிலே தமிழ்நாட்டிற் சைவம், வைணவம் என்ற இரு பெரும்பிரிவுகள் வலிபெற்று நிலவத் தொடங்கியதையே இச்சமயப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பரிபாடலிற் சிவனைப் பற்றிய பாடல்கள் எவையுமில்லை; அவ்வாறு பாடல்கள் இருந்ததாக மரபுமில்லை. எனினும், செவ்வேளைப் பாடிய புலவர்கள் உள்ளத்திற் சிவனைப் பற்றிய புராணக்கதைகள் நன்கு இடம் பெற்றிருந்தன என்பது வெள்ளிடை மலை.

இரண்டாவதாக, கேசவனாரும் நல்லச்சுதனாரும் பெரும் புலவர்களாகவும் சிறந்த இசை அமைப்பாளர்களாகவும் விளங்கினர் என்பது தெரிய வருகின்றது. இலக்கியப் புலமையும் இசைத் திறமையும் ஒருங்கே இணைந்த ஆற்றல் மிக்க புலவர்கள் சிலர் பரிபாடற் காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இவர்கள் இருவரையும் சான்றாகக் காட்டலாம். செவ்வேள் மேல் ஒரு பாடலை மட்டும் பாடிய நல்லச்சுதனார் நான்கு பாடல்களுக்கு இசையும் அமைத்துள்ளார் என்றால் அவரை ஆற்றல் மிக்க இசை அமைப்பாளராகவே குறிப்பிடுதல் சாலும். ஆகவே, இருவரும் இயலினும் இசையினும் புலமை வாய்ந்தவர் என்று தெரிகின்றது. இன்னும், இவர் செவ்வேள் மேற் பாடிய பாட்டால் கூத்தியற் கலையிலும் வல்லவர் என்பதும் இன்று புலனாகின்றது.

ஆசிரியர் நல்லந்துவனார் சமயப் புலவராகவும், அகத்துறைப் பாடல்களைப் பாடுவதில் ஆற்றலுள்ளவராயும் இயற்கையை வருணிப்பதில் உள்ள விழைவுள்ளவராகவும் காணப்படுகின்றார் என்பது மூன்றாவது உண்மையாகும். செவ்வேள் மேல் இவர் பாடிய எட்டாவது பாடலில் இவரின் பக்தியையும் இயற்கையை வருணிக்கும் திறனையும் காணலாம். வையை மேல் இவர் பாடியவற்றுள் ஆறு, பதினொன்று, இருபது ஆகிய மூன்று பாடல்களும் அகத்துறைப் பாடல்களாக அமைந்து விளங்குகின்றன. எனவே, ஆன்மீகச் சார்பானவையும், உலகியற் சார்பானவையுமான பாடல்களைப் பாடக்கூடிய புலவர்கள் பரிபாடற் காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதும் இனிது புலனாகின்றது.

பரிபாடல் தொகை நூலிலுள்ள கடுவனிளவெயினனார் பாடியருளிய ஐந்தாவது பாட்டிற் பெரும்பகுதி முருகப்பெருமானின் பிறப்பினையே விரித்துக் கூறுகின்றது. இப்பரிபாடற் பகுதி எடுத்துக்கூறும் புராணக் கதையை, ''அறுவேறு வகையின் அஞ்சுவரமண்டி''[10] எனத் திருமுருகாற்றுப்படையில் வரும் அடிக்கு விளக்கவுரையாகப் பின்வரும் குறிப்பினை நச்சினார்க்கினியர் தருகின்றார்.

> ''இறைவன் உமையை வதுவை செய்துகொண்ட நாளிலே இந்திரன் சென்று 'நீ புணர்ச்சி தவிர வேண்டும்' என்று வேண்டிக் கொள்ள, அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப, அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து, அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப, அருந்ததி ஒழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப் பாயலிலே பயந்தாராக, ஆறு கூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறு வடிவும் ஒன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்றதென்று புராணங் கூறிற்று.''

இதனைப் ''பாயிரும் பனிக்கடல்'' என்னும் பரிபாடற் பாட்டாலும் உணர்க என்றும், திருமுருகாற்றுப் படையில், ''அறுவர் பயந்த ஆறமர்செல்வ''[11] என்ற அடிக்கு விளக்கவுரை தரும்போது,

> ''அங்ஙனம் அக்கினியின் கண் இட்டுச் சக்தி குறைந்த கருப்பத்தை முனிவர் எழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக் கொடுப்ப அருந்ததி ஒழிந்தோர் விழுங்கிச் சூல் முதிர்ந்து, சரவணப் பொய்கையிற் பதுமப் பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று''

இதனைப் பரிபாடலில் ''பாயிரும் பனிக்கடல்'' என்ற பாட்டாலும் உணர்க என்றும் விளக்கியுள்ளார்.

செவ்வேளின் பிறப்பைப் பற்றிய இப் புராண வரலாறு முப்பத்தெட்டு அடிகளில் நீண்ட வருணனையாகப் பரிபாடலில் இடம்பெறுகின்றது. வேறு எந்தப் பாடல்களிலும்

---

## தாண்டவம்

தமிழிலுள்ள ''தாண்டவம்'' என்ற சொல் சமக்கிருதத்திலிருந்து வந்தது எனப் பலர் தவறுதலாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாவத புராணத்தில் ''தாண்டவா'' என்ற சொல் கூத்து என்ற பொருளில் வடமொழியில் வழங்கியுள்ளது உண்மையேயாகும். ''தாண்டு'' என்னும் திராவிட அடி வேரிலிருந்துதான் இச்சொல் உண்டாகியிருத்தல் வேண்டும். மலையாளம், கன்னடம் முதலியவற்றிலும் குதி என்ற பொருளில் தாண்டு என்ற சொல் வழங்குகிறது. தெலுங்கில் நாடு என்று இதே சொல் காணப்படுகிறது. இதைப் போன்ற அடிவேர்ப் பொருளைக் கூறுதலோ, இதனையொத்த வடிவம் பிற இந்திய - ஐரோப்பிய மொழிகளில் உண்டு என்று காட்டுதலோ வடமொழியினரால் மாட்டாமையின், இச்சொல் தமிழிலிருந்து வடமொழிக்குப் போன தொன்றேயாகும் என்பது புலப்படும்.

டாக்டர். அ. சிதம்பரநாதன்
தமிழோசை. பக்கம். 63.

இப்புராணக் கதை இவ்வளவு விரிவாக எடுத்துச் சொல்லப்படவில்லை. ஒரு சில அடிகளிலேயே திருமுருகாற்றுப்படையில் முருகனின் பிறப்பு எடுத்துக் கூறப்படுகின்றது. இவ்வாறன்றி, செவ்வேளின் பிறப்பின் வரலாற்றை வெவ்வேறு புராணங்களிற் சொல்லப்பட்டது போன்று வெவ்வேறு விதமாகவும் கூறுவாருமுளர்.

முருகப் பெருமானுடைய பிறப்பினைப் பற்றிய இப் புராணக் கதையும் திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் முருகனின் அவதாரம் பற்றிய வருணனைகளும் ஆரியக் கடவுளைக் குறிப்பிடுவனவாகும். பரிபாடலில் வருகின்ற, ''வென்றுயர்ந்த கொடி விறல் சான்றவை'' [12] ''பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ'' [13], ''செருவேற் றானைச் செய்வ'' [14], ''காஅய் கடவுள் சேஎய் செய்வேள்'' [15], ''மாறமர் அட்டவை மறவேல் பெயர்ப்பவை'' [16], ''உடையும் ஒலியலுஞ் செய்யை மற்றுங்கே படையும்'', ''பவழக் கொடி நிறங் கொள்ளும்'' [17] ஆகிய தொடர்கள் யாவும் திராவிடப் போர்த் தெய்வத்தைக் குறிப்பிடுவன என்று கூறலாம்.

பரிபாடலில் வரும் செவ்வேளைப் பற்றிய பாடல் ஒன்றில் ''கடிமரம்'' என்ற தொடர் வருகின்றது. கோல் விளக்கு, இசைக்கருவிகள், நறுமணப் பொருள்கள், கொடிகள் ஆகியவற்றை ஏந்திய பலர் ஒன்றாகக் கூடி வந்து சந்தனந் தெளித்து ஆட்டுக் கடாவினைக் கட்டிய திருப்பரங்குன்றத்தின் அடியின் கண் உள்ள ''வேலன் கடிமரம் பாடிப் பரவினர்'' என்று அப் பாடலிற் குறிப்பிடப்படுகின்றது.[18] சங்க காலத்தில் அரசர்களின் காவற் சின்னமாகக் கருதப்பட்ட ''கடிமரம்'' பரிபாடற் காலத்திற் சமயத்துடன் ஒட்டியதொன்றாகப் போற்றப்பட்டதனையே இது தெளிவுபடுத்தி நிற்கின்றது. எனவே, புறப்பாடல்களில் வரும் வீரமிக்க அம்சங்கள் பரிபாடற் காலத்திலேயே சமயப் பண்புக் கூறுகளாக எடுத்தாளப்பட்டுள்ளன என்பது தெரிய வருகின்றது. பரிபாடற் காலத்தில் அரசர்களுக்கு அரண்மனைகள் அமைந்தமை போன்று, ஆண்டவனுக்கு ஆலயங்கள் அமையத் தொடங்கின. அரசனை வணங்கிய மக்கள், கடவுளை வழிபடுபவர்களாக மாறினர். அரசனைப் பாடிப் புகழ்ந்த புலவர்கள், ஆண்டவனைப் பாடிப் பரவத் தொடங்கினர். அரசனின் கடிமரம் இறைவனின் புனிதக்காவல் மரமாக மாறியது. அரண்மனையில் நிகழ்ந்த ஆடலும் பாடலும், ஆலயத்திலும் நடைபெறத்தொடங்கின.

பரிபாடலிற் செவ்வேளைப் பற்றிய பாடல்களில் ஏழு இடங்களிலே முருகக் கடவுளோடு கடம்ப மரம் தொடர்பு படுத்தி வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றுள் நான்கு இடங்களில் கடம்ப மரத்தின் கீழ் முருகன் கோயில் கொண்டுள்ளான் என்று குறிப்பிடப்படுகின்றது.[19] கடம்புப் பூக்களாலான மாலையைச் செவ்வேள் அணிந்துள்ளான் என்று இரு இடங்களில் கூறப்படுகின்றது.[20] இன்னொரு பாடலிற் கடம்ப மரமான கடிமரத்தை அடியார்கள் வழிபடுவதாக எடுத்துச் சொல்லப்படுகின்றது.[21] எனவே, கடம்பமரம் முருகக் கடவுளின் இருப்பிடமாகவும் அப்பெருமானை வழிபடச் சென்ற அடியார்களின் வதி

## எல்லாம் சிவலிங்கம் !

திருக்குற்றால நகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய திரிகூட நாதரைத் தலைவராகக் கொண்டு திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பெற்றது. சொல்லழகும், பொருளழகும், கருத்தாழமும், ஓசையின்பமும் மிக்க ''திருக்குற்றாலக் குறவஞ்சி'', பாமரரும் பண்டிதர்களும் ஒருங்கே இன்பமடையத் தக்க விதத்தில், கற்பனை, யமகம், திரிபு, சிலேடை முதலாய அணிகள் அழகொழுக விரவி வரப் பாடப்பெற்றுள்ளது. இயற்கையழகிலே இறையழகைக் கண்ட திருஞானசம்பந்தப் பெருமானைப்போல இந் நூலாசிரியரும் இயற்கையழகிலே இறையழகைக் கண்டு காட்டுகின்றார். யாமும் காண்போம்.

முதலிலே, கடவுள் வணக்கத்தில் முறையே பிள்ளையாரையும் முருகனையும் பாடியபின், திரிகூடநாதரைச் ''சிவக்கொழுந்து'' எனக் கூறிப் போற்றுகின்றார். அவருடைய கண்களுக்கு – நெஞ்சத்துக்கு - யாவுமே சிவலிங்கமாகத் தோன்றுகின்றன!

''கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்க சொருபம் ஆக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டு வோமே.''

பலாமரம் ஒன்றிலே கிளைகளாகப் பிரித்திருக்கின்ற பல கொப்புகளெல்லாம் நான்கு மறைகள். அக் கிளைகளிலிருந்து தோன்றிய வனாரெல்லாம் சிவலிங்கம். அம் மரத்தின் பழங்களெல்லாம் சிவலிங்கம். அப் பழங்களிலுள்ள சுளையெல்லாம் சிவலிங்கம். அச் சுளைகளிலுள்ள விதைகளெல்லாம் சிவலிங்க வடிவமாக விளைந்துள்ள இக் குறும்பலாவிடத்தே தோன்றியெழுந்த சிவபெருமானை நலந்தர வேண்டிக் கொள்வோம் என்கிறார்!

நான்கு மறைகளும் ஒன்று சேர்ந்து ஒரு பலா மரமாகி, பிரணவம் வேராகவும், பாகை இரண்டு கவடாகவும், சுருதிகள் முழுதும் கிளைகளாகவும் இன்றும் நின்று தன் நிழலிலுள்ள சிவபெருமானைத் தொழுதுகொண்டிருப்பதாகப் புராணம் கூறும். இம் மரத்திற் பழுக்கும் பழங்களை எவரும் பறிப்பதில்லையாம். குரங்குகள் பிடுங்கித் தின்பதுண்டாம்.

இந்தச் சிவக்கொழுந்துதான் சிவலிங்கம். குறிக் கதைகள் யாவும் அபத்தம்.

விடமாகவும் இருந்தது என்று கூறுவதற்கு இவ் வருணனைகள் சான்றாக அமைகின்றன. இன்னும், கடம்ப மரமே செவ்வேளின் கடிமரமாகவும் இருந்துள்ளது என்பதும் தெளிவாகின்றது. முருகக் கடவுளுக்கும் கடம்ப மரத்துக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாகக் கடம்ப மரத்தையே மக்கள் புனித மரமாகக் கருதி வழிபட்டனர். அம் மரத்தின் பூக்களையும் இலைகளையும் முருகக்கடவுளை வழிபடுவதற்குப் பயன்படுத்தினர். சுருங்கக் கூறின், ஊர் நடுவே நின்ற கடம்ப மரத்தை மக்கள் கடவுளாகவே கருதி வழிபட்டனர் என்று கூறலாம். இவ்விடத்தில், ''தென் இந்தியத் தெய்வங்களுக்கு ஆரம்பத்திற் கோயில்கள் எவையும் இருக்கவில்லை. எல்லாக் கடவுளரையும் புனித மரங்களின் வடிவிலேயே மக்கள் வழிபட்டனர். ஆனால், இன்று மக்கள் தம் தெய்வங்களுக்கு பேரழகுள்ள ஆலயங்களைக் கட்டிக் கொள்வதற்குக் கற்றுக் கொண்டாலும், மரங்களையே வணங்கும் புராதன வழக்கம் இன்றும் நிலவுகின்றது''[22] என்று திரு. வெங்கடரமணய்யா கூறுவதைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாகும்.

செவ்வேளின் தோற்றத்தைப் பரிபாடல் எவ்வாறு வருணிக்கின்றது என்பதை இனி நோக்குவோம். ''தீக்கடவுள் தன் உடம்பினின்றும் ஒரு கூற்றைப் பிரித்தெடுத்து அதனைக் கோழிச் சேவலாக்கி நினக்குரிய கொடியாகக் கொடுத்தனன். இந்திரன் தன் உடம்பின் ஒரு கூற்றைப் பிரித்து அழகிய மயிலாக்கி அதனை உனக்கு ஊர்தியாக உதவினன். எமன் தன் உடம்பினின்றும் ஒரு கூற்றைப் பிரித்து வெள்ளாட்டுக் குட்டியாக்கி அதனை உனக்கு அளித்தனன்'' என்று செவ்வேளைக் கடுவனிளவெயினனார் வருணிக்கின்றார்:

''அல்லவில் அனலன் தன்மெய்யிற் [பிரித்துச்
செல்வ வாரணங் கொடுத்தோன் [வானத்து
வளங்கெழு செல்வன்றன் மெய் [யிற் பிரித்துத்
திகழ் பொறிப்பீலி அணிமயில் [கொடுத்தோன்
திருந்துகோன் ஞமன்றன் மெய் [யிற் பிரிவித்
திருங்கண் வெள்யாட் டெழினமறி [கொடுத்தோன்''[23]

மேலும், 'செவ்வேள்' என்ற பெயருக்கு ஏற்பப் புலவர்கள் பரிபாடலிற் பலவிடங்களில் 'சேய்' என்றும், 'செய்யோன்' என்றும், 'சேயோன்' என்றும் வருணிப்பதைக் காணலாம். நப்பண்ணனார் என்ற புலவர்,

'' உடையும் ஒலியலுஞ் செய்யைமற் [றாங்கே
படையும் பவழக் கொடி நிறங் [கொள்ளும்
உருவும் உருவுத்தீ ஒத்தி முகனும்
விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி''[24]

என்று முருகனை இளஞாயிற்றுக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார். நல்லச்சுதனார் என்னும் புலவர், ''வெள்ளிக் கொடியை உயர்த்திய வேலவனே! நீ ஊர்தியாகக் கொண்டு எழுந்தருள்வது தீப்போன்று விளங்கும் முகபடாத்தையும் போர் வென்றியாலுண்டாய புகழினையும் உடைய பிணிமுகம் என்னுங் களிற்று யானை ஆகும். தாமரை மலர் போன்ற திருவடிகளிலே அணிந்துள்ளவை தைத்தல் அமைந்த பீலிப் போழால் ஒப்பனை செய்யப்பட்ட அடையற் செருப்புகளாகும். சூரனைத் தடிந்து கிரௌஞ்ச மலையைத் துளைத்த வேற்படையை நீ கையில் ஏந்தியுள்ளாய். பெருமானே! நீ அணிந்த மாலை வள்ளிப்பூவை விரவித் தொடுத்த கடம்ப மலர் மாலை ஆகும்'' என்று சொல்லோவியமாகத் தருகின்றார். இவ் வருணனைகளிற் சில செவ்வேளைத் திராவிடத் தெய்வமாகக் காட்டுகின்றன; பல ஆரியக் கடவுளாகக் காண்பிக்கின்றன.

செவ்வேளைப் பற்றிய பரிபாடற் பாக்களிற் காணப்படும் இன்னொரு வகைச் சொல்லோவியம் முருகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேதராய்த் தோன்றும் காட்சியாகும். இவ் வகையானவற்றுள்

## குமரி முனை

வடக்கில் இமயமலை பாப்பா – தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா

— பாரதியார்

குமரிமுனைக்கு வாழும் என்ற அடை கொடுத்ததன் கருத்து என்ன? தமிழகத்தின் தென்னெல்லை கடல்கோளால் அழிந்து குறுகி வந்த நில வரலாற்றைப் பாரதியார் அறிவார். இப்போதுள்ள குமரி முனை இனியும் அழியாது வாழவேண்டும் என்பது அவர் ஆசை. அவ் வாசையை வாழும் என்ற சொல்லால் புலப்படுத்துவர். நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவஞ் செய் குமரி - ஓரத்திலே ஏன் நிற்கின்றாள்? தவம் ஏன் செய்கின்றாள்? இவ் வோரத்தோடு கடல் கிடக்க வேண்டும். முன்னேறி வரக்கூடாது என்பதுவே தவத்தின் நோக்கம் என இப் பாடலுக்கு விபுலானந்த அடிகள் நயங் கூறினாரெனச் சொல்ப.

— டாக்டர். வ. சுப. மாணிக்கம்
தொல்காப்பியப் புதுமை, பக்கம் 100.101

## பாவம்

இலக்கியச் சுவையைப் பரப்புவாருள் ஒரு சிலர் பாவம் என்ற சொல்லைச் சில காலமாகப் பெரிதும் கையாளுப. உள்ளக் குறிப்பு என்பது அதன் பொருள். தமிழில் முன்பே பாவம் எனப் பிறிதொரு சொல் உண்டு; தீவினை என்பது அதற்குப் பொருள். புதிய குறிப்புப் பாவத்தைப் பழைய தீவினைப் பாவத்தினும் வேறுபடுத்துவதற்குப் பாவத்தின் முதலெழுத்தைத் தடித்துக் காட்டுகிறார்கள். இப் பருவெழுத்து மொழிமுறையன்று. வலிந்து புகுத்தினாலும் கைவழக்கில் ஒட்டுவதன்று. தமிழ் வரம்பு அன்று. அதற்கு வளர்ச்சியும் அன்று. ஒரெழுத்தையே பட்டையாகவும் தட்டையாகவும் பருமனாகவும் சிறுமனாகவும் சாய்வாகவும் நேராகவும் கண்டவாறு யார் கையும் எழுதக் காண்கின்றோம். ஒழுங்கில்லா இந் நிலையில், பருமை சிறுமை என்றின்ன ஒரெழுத்தின் தோற்ற வேறுபாடுகட்கெல்லாம் பொருள் வேறு வேறு கூறப்புகின், எம்மொழியும் விளங்காது விரைவில் இடுகாடு அடையும்.

— டாக்டர். வ. சுப. மாணிக்கம்
தொல்காப்பியப் புதுமை, பக்கம் 69-70

இரண்டு சொல்லோவியங்கள் சிறப்பான கருத்துக்களைத் தம்மகத்துக் கொண்டு மிளிர்கின்றன. இவ் வருணனைகள் சமயப் பின்னணியிற் காதற் காட்சிகளாகவே காணப்படுகின்றன. முதலிற் குன்றம்பூதனார் என்ற புலவரின் வருணனையை நோக்குவோம். "பெருமானே! நீ வள்ளியைக்களவின்கண் மணந்தாய். அவ்வாறு வள்ளியை மணந்த அன்று முதுவேனிலானது கார்ப் பருவமாகும்படி முகில் மழையைப் பொழிந்தாற் போன்று திருப்பரங்குன்றிலே தேவசேனையின் கண்கள் கண்ணீர் மழை பொழிந்தன";

"மையிரு நூற்றிமை யுண்கண் மான்
மறிதோன் மணந்த ஞான்
றையிரு நூற்று மெய்ந்நயனத்
தவன்மகண் மலருண்கண்
மணிமழை தலைஇயென மாவேனில்
காரேற்றுத்
தணிமழை தலையின்று தண்பரங்
குன்று" 25

பாடலின் மிகுதியான பெரும்பகுதியிலே தெய்வயானையும் வள்ளியும் முருகனோடு எவ்வாறு ஊடலுவகையில் ஈடுபடுகின்றனர் என்பதைப் புலவர் வருணிக்கின்றார்; இன்னும் தெய்வயானையின் தோழி, வள்ளியின் தோழியுடன் சண்டையிடுதலையும் நகைச்சுவையுடன் புலப்படுத்துகின்றார். இவற்றோடு, தெய்வயானையின் மயிலும் கிளியும், வள்ளியின் மயிலுடனும் கிளியுடனும் மாறுபடுதலையும் விளக்குகின்றார்.

'காதற் காமம் காமத்துட் சிறந்தது' என்னும் உண்மையினையே விளக்குகின்றது இப் பாடல். வடபுல மரபையும் தென்புல மரபையும் சீர்தூக்கி ஆராய்ந்து, அவற்றுள்ளே தென்புல மரபே சிறந்தது என்பதைத் தெளிவாகவும் திட்பமாகவும் எடுத்துக் கூறுகின்றது. பொருளைத் தெரிந்து பண்ணோடு பன்முறை பாடிப்பாடி மனங்கொண்டு மகிழக் கூடியதாக இப் பாடல் அமைந்துள்ளது. வானுலக நங்கையும் மண்ணுலக மங்கையும் தங் காதலன் காரணமாக மாறுபடும் ஊடற் காட்சியைக் கண்முன் நிகழ்வது போன்று புலவன் வருணித்துள்ளான்.

குறவர் மகள் வள்ளிக்கும் தேவ மகள் தெய்வயானைக்கும் நடுவே முருகனை நிறுத்தி, மண்ணுலகையும் விண்ணுலகையும் இணைத்து மக்களின் கண் கண்ட தெய்வமாகவே முருகக் கடவுளை நப்பண்ணனார் வருணிக்கின்ற இடம் பக்திப் பரவசமளிப்பதாகும். முருகன் விண்ணுலகத் தெய்வமன்று; மண்ணுலகத் தெய்வமும் ஆவான் என்பதனை நப்பண்ணனார் நளினமாக நயம்பட நவின்றுள்ளார். மக்கள் ஆன்ம ஈடேற்றத்துக்குத் தேவ உலகத்தை நாடுவர்; ஆனால், முருகப்பெருமான் மக்களைத் தேடி மண்ணுலகத்துக்கே வந்து, வள்ளியை மணந்து மக்களின் தெய்வமாகவே காட்சி தந்து பேரின்பம் நல்குகின்றான் என்று புலவர் வருணித்துள்ள வகை புதுமையானது.

"பெருமானே! வானுலகத்தின்கண் உறைந்து வானவர்க்குக் காட்சியின்பம் நல்குவது போன்று, மண்ணவர்க்கும் பேரின்பம் நல்குதற் பொருட்டு மண்ணுலகத்திற்கே வந்து திருப்பரங்குன்றத்திலே எழுந்தருளியுள்ளாய். மேலும், வானவர் மகள் ஒருத்தியை மணந்து வானவர்க்கு மருகன் ஆனாற் போன்று, மண்ணவர் மகள் ஒருத்தியை மணந்து மண்ணவர்க்கும் மருகனானாய்! வானவர் மகள் ஒருத்தி பக்கலிலே இருந்து விழாக் கொள்ளுமாறு, மண்ணவர் மகள் ஒருத்தியும் பக்கலிலே இருந்து விழாக் கொள்க என்ற கருத்தோடு வள்ளியையும் மணம் புரிந்தருளினாய்."

"நிலவரை யழுவத்தான் வானுறை
புகறந்து
புலவரை யறியாத புகழ்பூத்த
கடம்பமர்ந்
தருமுனி மரபின் ஆன்றவர்
நுகர்ச்சிமன்
இரு நிலத்தோரும் இயைகென
ஈத்தநின்
தண்பரங் குன்றத் தியலணி
நின்மருங்கு
சாறுகொள் துறக்கத் தவளொடு
மாறுகொள் வதுபோல மயிற்
கொடி வதுவை" 26

மண்ணுலக மகளை விரும்பி மண்ணுலகத்தை முருகன் உறைவிடமாகக் கொண்டான் என்பதைக் கூறிய நப்பண்ணனார், மண்ணுலகத்தை விரும்பியதனால் அவன் மக்கள் தெய்வமானான் என்பதையும் மறைமுகமாகக் காட்டியுள்ளார்.

"பரம்பொருள் முத்தொழிலுடையதாய் என்றும் அநாதியாய் அழிவிலதாய் இருத்தல்போலத் தமிழ்த்தாயும் ஆக்கல் அளித்தல் அழித்தல் தொழிலுடையளாய்ப் பண்டுதொட்டு உள்ளவளாய்த் திகழ்ந்தருளுபவள் என்பதும், கன்னட முதலாய பல மொழிகளைத் தன்பால் தோற்றுவித்தவள் என்பதும், அப் பல மொழிகளில் ஒவ்வொன்றும் பலப்பலவாகப் பல்கியக்காலும், தான், பிற சில பழைய மொழிகள் வழக்கழிந்து சிதைந்து போனது போலன்றி என்றுஞ் சீரிளமை நலத்தோடு பிறங்குகின்றனள் என்பதும், இக் காரணங்களால் வாழ்த்தி வணங்கத் தக்கவள் என்பதும் உறுதியாதல் காண்க."

— டாக்டர். அ. சிதம்பரநாதன்
[தமிழோசை: பக்கம், 32-33]

## பரம்பொருள்

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே."

— பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
[தமிழோசை: பக்கம். 32-33.]

'நினையும் தேவர்க்கும் நமக்கும் ஒத்து' எனக் கம்ப நாடரும், 'நரகர்களுக்கும் சுரர்களுக்கும் நடு நின்ற நடுவே' என இராமலிங்க அடிகளாரும் கூறுவதற்கு நப்பண்ணனாரின் வருணனைகால்கோளாக அமைந்தது போலும்! வள்ளியை மணம் புரிந்தமையால் மண்ணவர் முருகனுடன் உறவு கொண்டாடுதலையும் அவனிடத்தில் உரிமையோடு வரங் கேட்டலையும் இளங்கோவடிகள் குன்றக் குரவையிற் கூறியுள்ளார்.[27]

பரிபாடற் காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலே வாழ்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைக் காதலனாகக் கண்டு அவன் மேல் ஆராக் காதல் கொண்டு இறைமைக் காதலை இனிமையாக, முறையே தேவாரத் திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் ஆங்காங்கே பாடியருளுவதற்குப் பரிபாடற் பாட்டுக்களும் அவைகளில் இடம்பெறும் காதற் காட்சிகளும் பெருமளவிற் கால்கோளாக அமைந்தன என்று கூறின் அது மிகையாகாது. இன்னொரு வகையாகக் கூறின், இறைமைக் காதலைப் புலப்படுத்தும் அகப்பொருள் அமைதியுடைய பாட்டுகளும் அவற்றில்

## கோயில்

'கோவில்' என்னுஞ் சொல் 'கோயில்'எனவும் வழங்குகின்றது. 'கோ' என்றால் அரசன். இல் என்பது வீடு. ஆகவே, கோவில் என்பது அரசனது வீடு ஆயிற்று. இதனால், அரசனது வீடும், தெய்வத்தின் வீடும் ஒரே நிலையில் வைத்து மதிக்கப்படுவதைக் காண்கின்றோம். அரசனைக் கண்கண்ட தெய்வமாகப் பழைய நூல்கள் வருணிக்கின்றன. இந்திரன், அக்கினி, யமன், சூரியன், வாயு, சந்திரன், குபேரன் ஆகிய தெய்வங்களின் அம்சங்களை எடுத்துச் சேர்த்து இறைவன் அரசனை உருவாக்கினான் என மனுநீதி நூல் கூறுகின்றது. எனவே, தெய்வமும் தெய்வாம்சம் பெறும் மன்னனும் வசிக்கும் இடம் ஒரே பெயரால் குறிப்பிடப்படுவது பிழையாகாது. அரசன் தெய்வங்களின் உயர்நிலையினை வகிப்பதை இதிகாச புராணங்கள் தெளிவாகச் சுட்டுகின்றன.

— கா. கைலாசநாதக் குருக்கள்
சைவத் திருக்கோயிற் கிரியை
நெறி-பக்கம் 66-69.

இடம் பெறும் வருணனைகளும் பரிபாடலிலேயே முதன் முதல் இடம் பெற்றன என்பதும், அப் பாடல்களும் வருணனைகளும் பிற்பட்ட காலத்திலே அவதரித்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைக் காதலனாகவும் தம்மை இறைவனின் காதலியாகவும் கண்டு ஆராக் காதலினால் அகப்பொருள் அமைதியுள்ள பாடல்களை அருளிச் செய்யத் தூண்டுதலாக அமைந்தன என்பதும் மறுக்க முடியாதன. பரிபாடலிலே மனிதக் காதல் போன்று, முருகனுக்கும் வள்ளி, தெய்வயானை ஆகியோருக்குமிடையே வருணிக்கப்படும் தெய்வீகக் காதல், தேவாரங்களிலும் திவ்விய பிரபந்தங்களிலும் இறைமைக் காதலாகப் பாடப்பட்டுள்ளன.

பரிபாடலிலுள்ள செவ்வேளைப் பற்றிய பாட்டுக்களும் நாயன்மார் அருளிய தேவாரங்களும் பல வகையில் ஒப்புமை உடையன; சில வகையில் வேறுபட்டும் காணப்படுகின்றன. செவ்வேளைப் பற்றிய பாடல்கள் முருகன் புகழைப் பாடுகின்றன; தேவாரங்கள் சிவன் பெருமையைப் பேசுகின்றன. சிவபெருமானின் திருக்குமாரன் முருகன் என்று புராணங்கள் புகழ்ந்து கூறுகின்றன. பரிபாடற் பாட்டுக்கள் பண் அமைக்கப்பட்டவை; தேவாரங்களும் பண்ணோடு கூடியவை. எனவே, இவற்றைப் பண்ணோடு பாட வேண்டும்; பண்ணோடு பாடிப் பரவச நிலையைப் பெறும்போது, பாடுவதைக் கேட்டு நிற்போரும் பக்திப் பரவசமான நிலையினை அடைவர் என்பது திண்ணம். தேவாரம் பன்னிரு திருமுறையில் முதலிடம் வகிக்கின்றது. ஆனால், பரிபாடல், திருமால் மேலும் வையை மேலும் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டமையாற் போலும் பன்னிரு திருமுறையில் இடம்பெறாதொழிந்தது. சைவ மக்கள் தேவாரங்களை ஓதிப் பாராயணம் செய்து அவற்றை அருட் பாக்களாகப் போற்றுகின்றனர். ஆனால், பரிபாடலிலுள்ள செவ்வேளைப் பற்றிய பாடல்களைச் சைவ மக்கள் அருட்பாடல்களாகப் போற்றுவதுமில்லை; பாடிப் பாராயணஞ் செய்வதுமில்லை. பண் அமைத்த பரிபாடலிலுள்ள செவ்வேளைப் பற்றிய பாடல்கள் பாராயணஞ் செய்வதற்கு ஏற்றவை. "யான் நின்னை இரந்து வேண்டுவன பொருளும் பொன்னும் போகமும் அல்ல, அருளும் அன்பும் அறமும் ஆகிய மூன்றுமே" என்று வேண்டிச் செவ்வேளைப் பற்றிய பாடல்களைப் பாடுவோர் முருகப் பெருமானின் இன்னருளைப் பெற்று இன்புறுவர்.

"———— யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமு
[மல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனு மூன்றும்
உருளினர்க் கடம்பின் ஒலிதா
[ரோயே"[28]

குறிப்புகள் :

1. இறையனார் அகப்பொருள், நக்கீரனார் விளக்கவுரை சி. வை. தாமோதரம்பிள்ளை சென்னை, 1883, சூத்திரம், 1. விளக்கவுரை பக் 5.
2. தொல்காப்பியம், செய்யுளியல், சூத்திரம், 149. இளம்பூரணர் உரையைப் பார்க்க.
3. Marr. J. R., *The Eight Tamil Anthologies with special reference to* புறநானூறு *and* பதிற்றுப்பத்து *- thesis approved for degree of Doctor of Philosophy in the University of London.* 1958, *p.* 13.
4. பரிபாடல், திருமால்: 1, 2, 3, 4, 13, 15.
5. பரிபாடல், செவ்வேள்: 5, 8, 9, 14, 17, 18, 19, 21.
6. பரிபாடல் மூலமும் உரையும், உரையாசிரியர், பெருமழைப் புலவர் திரு.பொ.வே. சோமசுந்தரனார், கழகப் பதிப்பு, 1964 அணிந்துரை, பக். 14.
7. பரிபாடல், வையை: 6, 11, 20.
8. பரிபாடல், திருமால்: 3, 4.
9. பரிபாடல், நல்லழிசியார் பாட்டு: 16, 17; குன்றம்பூதனார் பாட்டு: 18, ஆசிரியர்: நல்லந்துவனார் பாட்டு 20.
10. திருமுருகாற்றுப்படை, அடி,58, நச்சினார்க்கினியர் உரையைப் பார்க்க.
11. திருமுருகாற்றுப்படை, அடி, 255, நச்சினார்க்கினியர் உரையைப் பார்க்க.
12. பரிபாடல், 9 : 80.
13. பரிபாடல், 17 : 49.
14. பரிபாடல், 18 : 54.
15. பரிபாடல், 5 : 13,
16. பரிபாடல், 21 : 66.
17. பரிபாடல், 19: 97-98,
18. பரிபாடல், 17: 1-4.
19. பரிபாடல், 8 : 126, 19: 2, 19 : 104, 21:5.
20. பரிபாடல், 5:81, 21:11,
21. பரிபாடல், 17:1-4.
22. Venkata Ramanayya, N., *An essay on tha Origin of the South Indian Temple.* p. 5.
23. பரிபாடல், 5 : 57-63.
24. பரிபாடல், 19: 97-100.
25. பரிபாடல், 9 : 8-11,
26. பரிபாடல், 19 : 1-7.
27. சிலப்பதிகாரம், குன்றக் குரவை, பாட்டு மடை - 15-6-7.
28. பரிபாடல், 5 : 78 – 81.


# ஆனந்த நடனம்

(வை. அநவரத விநாயக மூர்த்தி, கல்வி அமைச்சு, கொழும்பு-2.)

**வி**ஞ்ஞானத்தின் முன்னணியில் நின்று, அதன் ஆராய்ச்சியில் மூழ்கி மிதந்துகொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்த அற்புதமான விஞ்ஞான ஆராய்ச்சி குறைந்த நன்மைகளையும் கூடிய அழிவையும் தரக்கூடிய நிலைமையை அடைந்துள்ளது. இது கலையும் சமயப் பற்றும் ஒன்றுபட்டு மனிதனுக்கு உதவி புரிய வழியில்லாத நாடுகளிலே நிகழ்வது. விஞ்ஞானிகளையே பிரமிக்கச் செய்யுமாறு வளர்ந்துள்ளது எமது கலையும் சமயப்பற்றும். விஞ்ஞானிகளே எளிதிற் கண்டறிய முடியாத உண்மைகளைச் சிற்பத்திலே பொதிந்து காட்டினார்கள் எமது முன்னோர்கள். உலக உண்மைகளை அதன் இயக்க முறைகளைச் சமய அடிப்படையிலே, சிலைகளிற் செய்து காட்டி அரும் பெரும் தத்துவங்களை விளக்கினார்கள். கல்லிலும், மண்ணிலும், மரத்திலும் அருவமும் உருவமுமான கடவுளை வெவ்வேறு வடிவங்களிலே அழகு பொருந்த அமைத்து அக மகிழ்ந்தார்கள்.

அணுக்களைப் பற்றி நுணுக்கமாக ஆராய்ச்சி செய்கின்ற மேல் நாட்டு விஞ்ஞானிகள் 'அணுக்கள் எல்லாம் ஏக தாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன' என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் காண இயலாது கலங்குகின்றனர். நம் முன்னோர் இதனை நடனக் கலை மூலம் காட்டினர். சாதாரண நடனமல்ல, இயற்கை, இறை ஆகிய இரண்டும் பின்னிய தத்துவ நடனக் கலை.

அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்களை இயக்க நமது ஆண்டவனும்



வை. அநவரத விநாயக மூர்த்தி

தாண்டவமூர்த்தியாயிருக்க வேண்டும். ஆடல்களிலே சிறப்பு வாய்ந்தது ஆனந்தத் தாண்டவம். ஐந்தொழில்களையும் ஒரு சேர இயக்குகின்ற ஆடல் இது. இந்த நடனம் இலகுவிலே ஆடிவிட முடியாது. ஆனந்தம் வேண்டும். அளவுக்கு மீறிய ஆனந்தத்தினால் ஆடும் நடனமே ஆனந்த நடனம் எனப்படும். தில்லையிலே திருநடம் புரிகின்ற அற்புதக் கூத்தனது ஆனந்த நடனத்தை அவனது அருளினாலேதான் நாம் கண்டு களிக்க முடியும்.

நம் நாட்டிலே தமிழ்ப் பண்பிலே நடராசர் நடனமாடுகின்றார். ஆதியும் அந்தமுமில்லாத இறைவன் உலகில் வாழும் ஒவ்வொரு சீவராசியின் உள்ளத்திலும் ஆனந்தத் தாண்டவம் புரிந்துகொண்டிருக்கின்றான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அன்புடன் பக்தி செலுத்தினால் அவனது நடனத்தைக் கண்டு களிக்க முடியும். இவ் வுலகில் மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் துன்பமின்றி இன்பமாக வாழவே பெரிதும் விரும்புகின்றனர். நாம் ஆனந்தமாக வாழ ஆனந்தத் தாண்டவம் புரியும் அற்புதக் கடவுளை அன்புடன் தினமும் வழிபட்டு வருதல் வேண்டும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள இறைவன் உயிர்களிடம் கொண்ட கருணையால், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறான். அக் காரணம் பற்றியே நமது முன்

னேரும் இறைவனைக் கூத்தப் பெருமானாகப் போற்றி வந்துள்ளார்கள். இப் பெருமானது திருக்கரங்களிலே விளங்கும் படைகளும் பிறவும் ஐந்தொழிலையே உணர்த்துகின்றன என்றும் கூறுவர்.

'அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற்ற ணைப்பில் அமரும் திரோ தாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்றே'

. என்னும் திருமந்திரப் பாடல் இதனை நன்கு விளக்குகின்றது.

திருநடனம் செய்கின்ற பெருமானது திருவடிவம் இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தின் வடிவமென்று திருமூலர் தமது திருமந்திரத்தின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றார்.

'மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவினை மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நம வென வோதே'

இக் கருத்தையே கீழ்வரும் உண்மை விளக்கச் செய்யுளும் உணர்த்துகின்றது.

'சேர்க்கும் துடி சிகரம் சிக்கன வா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகாரமது தான்'

நடராசப் பெருமான், பிரணவமே திருவாசியாகவும்' ஸ்ரீபஞ்சாட்சரமே திருமேனியாகவும் ஞானாகாச மயமாகிய பராசக்தியே சிற்சபையாகவும் கொண்டு ஆனந்த நடனம் புரிகின்றார். இப் பெருமானது திருக்கண்பார்வை சிறிது இடப்புறம் சாய்ந்து சிவகாமி அம்மையாரை நோக்கிய முறையாக இருக்கும். தில்லைக் கூத்தனது திருநடனத்தை உமை அம்மையும் கண்டு களித்து அதனை உலகுக்கு வழங்குகின்றாள். இந்த அற்புதக் கூத்தை உலகில் வாழும் எல்லா உயிர்களும் காணுதல் எளிதல்ல. எனவே, தாயாக நம்மைக் காத்தருளும் பராசக்தி, பாலை மாத்திரம் உணவாகக் கொள்ளும் பச்சிளங் குழந்தை நோய்வாய்ப்பட்டால் தான் மருந்துண்டு, பிள்ளையைக் காப்பாற்றும் தாயின் தன்மைபோல உயிர்களின் பக்குவமற்ற நிலைமையை உணர்ந்து பெருமானுடைய அற்புதக் கூத்தைத் தானே தரிசித்து உயிர்களுக்குக் காட்டுகின்றாள். இவ்வாறு அம்பிகையை நோக்கியே இறைவன் திருநடனம் புரியும் இயல்பு குறித்துக் குமரகுருபரர்.

'பாலுண் குழவி பசுங்குடர் பொறுதெனா
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வைய மீன்றளித்த தெய்வக் கற்பின்
அருள் குல் கொண்ட மையரித் தடங்கண்
திருமான் சாயல் திருந் திழை காண
சித்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த...'

என அழகாக விளக்குகிறார்.

சிவபெருமான் செய்தருளுகின்ற தாண்டவங்கள் நூற்றெட்டு எனப் புராணங்கள் கூறும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களுள் இவை அடங்கும். உயிர்கள் மலம் நீங்கித் தூய்மை அடைந்து, பேரின்பம் அடைவதற்காகவே இந்தப் பஞ்ச கிருத்தியங்களையும் இறைவன் இடைவிடாமற் செய்து கொண்டிருக்கிறார். இந்த ஐம் பெரும் தொழில்களுள் முதலாவதாகக் கூறப்பட்ட படைத்தல், காத்தல், அழித்தல் என்பன உலகு, உடல்களில் நிகழ்வன; இறுதியாக உள்ள மறைத்தல், அருளல் என்பன உயிர்களில் நிகழ்வன.

நாத தத்துவத்தினின்றும் உலகம் உண்டாகின்றது என்னும் உண்மையை நடராசப் பெருமானின் வலக் கையிற் காணும் ஓசைதரும் உடுக்கை உணர்த்திப் படைத்தற் றெழில் செய்கின்றது. மற்றெரு திருக்கரம் அஞ்சேல் என்று அபயமளித்துக் காத்தற் றெழில் செய்கின்றது. அக்கினியேந்திய திருக்கரம், அகில உலகங்களையும் இறுதியில் அநித்தியமாக்கும் சங்கார சக்தியை அல்லது அழித்தலை உணர்த்துகின்றது. முயலகன் மீது ஊன்றிய வலது திருப்பாதம் படைத்தல் முதலிய விஷயங்கள் எவருக்கும் எளிதில் விளங்கா வண்ணம் மறைக்கும் மாயா சக்தியை உணர்த்துகின்றது. உயிர்கள் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு அவை இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்தலாகிய 'திரோபவம்' அல்லது 'மறைத்தலை' இது விளக்குகின்றது. தூக்கிய திருவடியாகிய குஞ்சித பாதம் கடவுளின் கருணையைக் குறிக்கின்றது. இப் பாதத்தை இடக்கை சுட்டிக் காட்டி நமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்துகின்றது. 'ஆண்டவன் திருவடியின்றி உயிர்களுக்குக் கதியில்லை'.

## கலை

தமிழில் வழங்குகின்ற "கலை" என்ற சொல் வடமொழியின் திரிபென எத்தனையோ பேர் சொல்லி வருகிறார்கள். ஆயினும், "கல்" என்ற அடிப்படையிலிருந்து இச் சொல் பிறந்திருக்கிறது என்பது இன்னும் பலருக்கு நன்றாகத் தெரிந்திலது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிட மொழிகளிலெல்லாம் "அறிவது" என்ற பொருளைத் தருவதற்குக் "கல்" என்ற அடிவேரே பயன்படுகிறது. இதனடியாகத்தான் "கலை" என்ற சொல் தமிழிலே தோன்றியிருத்தல் வேண்டும். இதனை வடமொழியாளர் "கலா" எனத் திரித்து வழங்கலுற்றார்கள். வரலாறு இச் சொல்லின்கண்ணே மறைந்து கிடக்கிறது.

— டாக்டர். அ. சிதம்பரநாதன்

## திருக்கோயில்கள்

உலக முதல்வன் சிவபெருமான். அவர் உயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு அருள்புரியும் அருள்நிலைத் தானங்களே திருக்கோயில்கள். எல்லா மக்களும் இறைவனை வழிபட்டே இம்மை மறுமை நலன்களைப் பெறுவதற்கு உரியவர். இதனலே தான் ஔவையார் குழந்தை இலக்கியத்தில் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" எனப் போதித்தார்.

'ஆகவே அதனை அடைய முயலுங்கள்' என அறிவுறுத்துகின்றது. எனவே, தூக்கிய திருவடி அனுக்கிரகம் அல்லது அருளைக் குறிக்கின்றது. ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கின் இந்தத் தூக்கிய திருவடிக்கே எல்லாச் சிறப்பும் பெருமையும். 'இனித்த முடைய எடுத்த பொற்பாதம்' என்று அதனை அப்பர் பெருமான் போற்றித் துதிக்கின்றார்.

ஆன்மாக்களின் நன்மை கருதி இறைவன் செய்யும் இந்தப் பஞ்ச கிருத்திய நடனத்தை 'உண்மை விளக்கம்' எவ்வளவு அழகாகக் கூறியிருக்கின்றது என்பதைக் கவனிப்போம்.

'தோற்றத் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு'

நடராசப் பெருமானது அருள் வடிவம் முயலகன் (மாயை) என்னும் அரக்கனை வலது காலால் மிதித்துக் கொண்டு இடதுகாலை உயரத் தூக்கி நின்று ஆடுவது போல அமைந்துள்ளது. முயலகன் உருவம் ஆன்மாவிற் படிந்து கிடக்கின்ற மலத்தைக் குறிக்கின்றது. சடைமுடி, பிறைச்சந்திரன், கங்கை என்னுமிவைகள் சிரசை அலங்கரிக்கின்றன. ஒரு கையில் உடுக்கையும் ஒரு கையில் மழுவும் ஏந்தியிருப்பதாகவும் ஒரு கை அபயஸ்தமாகவும் மற்றக் கை நாட்டியத்திற்கு உபயோகிக்கப்படுவதாகவும் விளங்குகின்றது.

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்னும் மூன்று சக்திகளை முக்கண்களாகப் பெற்ற இத் தாண்டவமூர்த்தி அண்ட சராசரங்களை இயக்க அனவரதமும் ஆனந்த நடனம் புரிந்த வண்ணம் இருக்கிறான். ஆகவே, இவ் வுலகம் இயங்குவதற்காகவே இறைவன் தானும் இயங்கிக் கொண்டிருக்கிறார் என்னும் உண்மை தெளிவாகின்றது.

கலைகளுக்கெல்லாம் முதல்வனாக விளங்குபவன் இறைவன். அவனிடமிருந்தே பல்வேறு கலைகளும் தோன்றுகின்றன. ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராசனின் வடிவம் இதனை நன்கு உணர்த்துகின்றது. தில்லை வெளியில் தாண்டவம் ஆடும் ஆண்டவனின் திருவுருவம் ஈழை நாட்டு மக்களின், சிறப்பாகத் தமிழர்களின் மனப் பண்பாட்டுக்கு - கலைக்கு - ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவனால் தடுத்து ஆட்கொள்ளப் பட்ட பின்னர் தலயாத்திரைக்குப் புறப்படுகின்றார். செல்லும் வழியில் தொன்மையும் தெய்வீகத் தன்மையும் பொருந்திய சிதம்பரத்தை அடைந்து கனகசபையின் கண்ணே ஆனந்த நடனஞ் செய்தருளுகின்ற நடராசப் பெருமானைத் தரிசிக்கின்றார். அவரது நடனத்திலே, நம்பியாரூரர் தன்னை மறந்து பேரின்ப சாகரத்தில் திளைத்து இருக்கும் நிலையை சேக்கிழார் எவ்வளவு அழகாகத் தமது திருத்தொண்டர் புராணத்திலே சித்திரித்திருக்கிறார் என்பதைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகின்றது:

ஐந்தபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

எனவே, தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் அற்புதக் கூத்தனை உள்ளன்புடன் தினமும் வழிபடுவோர் சிவானந்த அனுபூதியாகிய முத்தி பெறுவர் என்பது திண்ணம்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் [மேலாகு
சிற்பர வியோம மாகுந் திருச சிற்றம்
பலத்துநின்று
பொற்புற நடஞ் செய்கின்ற பூங்கழல்
போற்றி போற்றி.
(பெரிய புராணம்)

* * *

## பெரும் பாவிகள்

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர். ஆதலால், பாவம் செய்பவர்களிலும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

— ஆறுமுக நாவலர்.

## திருக்குறள்

உலகம் பொது மறையாகப் போற்றப்பெறுவது திருக்குறள். இதற்குக் காரணம், உலகத்துள்ள பல்வேறு மறைகளிலும் கூறப் பெறும் பொது அறக் கொள்கைகளையும் திருக்குறள் தன்னகத்தே கொண்டுள்ளமையாகும். குணங்குறியற்ற பரம்பொருளுக்குப் பல்வேறு பெயர்களையும் வடிவங்களையும் அவ்வச் சமயங்களின் தலைவர்கள், தாம் தோன்றிய நாட்டின் இயல், மக்கட் பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்பக் கூறியமையால் சமயங்கள் பலவாயின. அவ்வச் சமயங்களின் உட்கிடைகளாகிய நுண்ணிய கருத்துக்களை எண்ணிப் பார்த்தால் சமயக் காழ்ப்பின்றி அனைவரும் ஒத்து வாழ இயலும் என்பது புலனாகும்.

## தாய்லாந்தில்...

தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி'' எனத் தொடங்கும் முதல் இரு பாக்களும் பாடப்படுகின்றன. சயாம் அரசச் சடங்குகளில் திருவெம்பாவையின் முதலிரு பாடல்களும் திருப்பாவைப் பாடல் ஒன்றும் பாடப்பெறுகிறது. திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாட்களைத் தைத் திங்களில் தாய்லாந்து மக்கள் பெரு விழாவாகக் கொண்டாடி வருவதால் மன்னர் முடிசூட்டு விழாவிலும் பாவைப் பாடல் சிறப்பிடம் பெறுகின்றது.

# சுவாமி யோகேஸ்வராநந்தர்

யோகர் சுவாமிகள், ஆறுமுக நாவலர், சுவாமி விபுலாநந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் என்ற மேதாவிகளை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்டது எங்கள் நாடு. காலத்துக்குக் காலம் இத்தகைய வியத்தகு பெரியார்கள் இட்டுச் சென்ற நன்னெறி காட்டும் அடிச் சுவடுகளைப் பின்பற்றியமையாற் போலும் இறைவன் அருளால் நாம் செய்த தவப்பயனால் நமது நாட்டில் தேடியும் தேடொண்ணாப் பொக்கிஷம் ஒன்று இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. பொக்கிஷம் தவத்திரு யோகேஸ்வரானந்தர். சுவாமிகள் நமது நாட்டில் தேடியும் காணொண்ணாதவாறு உயர் இமாசலத்தில் உள்ள உத்தரகாசியில் மௌன குருவாக நித்தம் தவம் செய்து கொண்டிருப்பவர். எனினும், திடீரெனத் தமது நாடு வந்து இரண்டு மாத காலம் நம்மிடையே கலந்திருந்து பண்டிதரும், பாமரரும் எளிதில் விளங்கிச் செயற்படுத்தக் கூடிய முறையில் ஆத்மீக உண்மைகளை வாரி வழங்கி நாம் வாழ்வாங்கு வாழ்தல் எப்படி எனக் கீதை, உபநிடதம் தழுவிய நாற்பது சொற்பொழிவுகள் மூலம் (31 கொழும்பிலும், 9 யாழ்ப்பாணத்திலும்) லௌகீக துன்பங்களிற் தத்தளித்துத் தாங்க முடியா வாழ்க்கைப் பழுவினை இலேசாக்கும் வழி வகைகளைக் கூறி, தெம்பினை ஊட்டி ஊனக்கண்களுக் கெட்டாமல் இமாசத்துக்குப் பறந்து போயினர்.

சுவாமிகள் ஞானத்தின் திருவுரு: ஆடம்பரமற்ற துறவி: அமரருள் உய்க்கும் அடக்கமுள்ளவர், அகலாது அணுகாது மெதுவழி செல்பவர். தங்கு தடையின்றி ஆங்கிலத்திற் சொற்பொழிவாற்றும் ஆற்றலுள்ளவர்; பல சொல்வதில் காமமுறுதவர்: வெல்லும் சொல்வன்மை அறிந்து சொற்களைக் கையாள்பவர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய சொல்லினர். கேளாரும் வேட்ப மொழிபவர்; காய்தல் உவத்தல் இன்றிச் சொல்பவர்; சுடச்சுடச் சொல்லி மக்களுள் நிறைந்துள்ள மாசினைப் போக்குபவர்; சோர்விலர்; அஞ்சா நெஞ்சினர்; வீரத்துறவி விவேகாநந்தரின் சாயலை ஒத்தவர். உள்ளத்தால் மிக உயர்ந்த சுவாமிகளின் அருளுரைகளில் ஈர்ப்புண்டு பக்குவ நிலை எய்தத் துடிப்பவர் பலர் ஆயினர்.

தமது இருபத்தி மூன்றாவது வயதிலே பொறியியற் படிப்புக்கு லண்டன் மாநகர் செல்வதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த நிமலேஸ்வரன் பெற்றாரை உறவினரை, உற்றாரைத் திடீரெனத் துறந்து போய்விட்டார் இமாசத்துக்கு உண்மை தேடி. பூர்வீக நல்வாசனை பின்னின்று உந்த, யோகர் சுவாமிகளின் அணுக்க இணக்கம் முத்தி நெறிப்படுத்த, 'அரவிந்தரின் தெய்விகவாழ்வு'' என்ற நன்னூல் வைராக்கியத்தைக் கொடுக்க யோகர் சுவாமிகளின் விருப்புக்கு இணங்கி, தென்னிந்திய திருச்சிராப்பள்ளி திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண சங்கத் தனிப்பட்ட துறவி சித்பவானந்தரிடம் சில காலம் தங்கி அங்கிருந்து ரிஷிகேசம் சென்று சிவானந்த ஆச்சிரமத்தில் சமஸ்கிருதம், வேத நூல்கள், தர்க்கவியல் என்பன கற்று, தாபன ரீதியாக உள்ள அவ் ஆத்மீக வாழ்வினை வெறுத்து அறிந்தும் அறியாத வருமான பல துறவிகளுடன் கூடி அலைந்து திரிந்து. ''ஓடே காண் உண்பது ஊரிடுபிச்சை காடே இடமாவது கல்லால் நிழற்கீழ்'' எனவுள்ள வாழ்வினை வாழ்ந்து பல வேத கூடங்களில், முக்கியமாக சுவாமி விவேகாநந்தர் பயிற்சி பெற்ற ஆனந்த ஆச்சிரமத்திலும், தனிப்பட்ட துறவிகளிடத்தும், வேத உபநிடதங்கள் கற்றுத் தெளிந்து இறுதியில் தாம் தேடிச்சென்ற குரு தயானந்தகிரி என உணர்ந்து, அவரைப் பற்றிப்பிடித்து அவரிடம் ''யோகேஸ்வரானந்தர்'' என்ற திருநாமம் பெற்று பதினெட்டு ஆண்டுகள் ஆத்மீகப் பயிற்சியும் அனுபவமும் பெற்ற ஞான முனியானார்.



வே. சதாசிவம்
B.A., M.Litt., Dip. Ed., CE.S
முன்னாள் உதவிப் பரீட்சை ஆணையாளர்

'என்னோற்றான் கொல்' எனக் கண்டார் வியக்கும் பெருமைக்குரிய தந்தை, ஈன்றபொழுதில் அநுபவித்த இன்பத்தினைவிட இன்று தன் மகன் ''ஞானமுனி'' எனப் பலர் சொல்லக் கேட்டுப் பேரின்பமடையும் அன்புத் தாய்; தமது அண்ணனில் புளகாங்கிதம் அடையும் மூன்று தம்பிமார் நாலு தங்கையர் என்ற இக்குடும்பம் தவம் செய்த குடும்பமாகும். யோகேஸ்வரானந்தர் இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் முத்து பால சூரியரின் பாலசூரியன். அன்னை கற்பகம் பெற்ற மணிமகுட முத்து. தம்பி தங்கையரின் தன்னிகரில்லாத் தமையன். இக்கதிர் மதியம் இலங்கை பெற்ற வரப்பிரசாதம்

பெறற்கரிய இவ் வரப்பிரசாதத்தை, மாபெரும் துறவியை, கண்டும் கேட்டும் இன்புறும் பாக்கியம் பெற்ற நாம் மேலும் காண, கேட்கத் துடிப்பது இயல்பு. இத் துடிப்பு திருவருளால் அறங்காவல் அமைச்சரின் விடாப்பிடியான அணுக்கத்தால், இந்து சமய அமைச்சின் ஆதரவில் சனவரியில் நடைபெறவிருக்கும் உலக இந்து மக்கள் மாநாட்டுப் பெருவிழாவில், நமது நாட்டின் இணையற்ற ஐந்தவித்த ஒப்பில்லாப் பெருந் துறவியும் எமது நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தமது தனித்துவத்தைக் காட்டி மேலும் பலப்பல உலக மக்களை ஈர்த்து அருட் தாகத்தைத் தீர்த்து வைப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

'யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்'

# பாராட்டுரைகள்

"கோபுரம்" இதழ்த் தொடக்க விழாவில்,

சென்னை "திருக்கோயில்" ஆசிரியர்.

**"புலவர் ஏறு" திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் M. A., M. O. L.**

நிகழ்த்திய

## வாழ்த்தியற் சிறப்புரை.

இலங்கையிலுள்ள தமிழ்ச் சைவ மக்கள் அனைவரின் வாழ்க்கையிலும், அவர்தம் சமய வரலாற்றிலும் இன்று ஒரு சிறந்த நன்னாள். மிகச் சிறந்த பொன்னாள். இலங்கை அரசின் இந்து கலாசார அமைச்சின் சார்பில், இன்றைய தினம் ''கோபுரம்'' என்னும் சிறந்த இதழ் தொடங்கப்பெற்று, இந்தக் சுப்பித்தாவத்தை ஸ்ரீ கயிலாசநாத சுவாமி கோயிலின், ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி சந்நிதியில் வெளியிடப்படுகின்றது. இஃது ஒரு சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்.

இலங்கையில், அரசின் பல வேறு திணைக்களங்களில் எதிலேனும், அண்மைக் காலம்வரை ''இந்து கலாசார அமைச்சு, திணைக்களம்'' என ஒன்று எப்பொழுதேனும் அமைந்திருந்ததில்லை. அண்மைக் காலத்திலேதான், இலங்கையின் அதியுத்தம சனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் பேராதரவிலும், மதிதகு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அவர்களின் அன்பு நிறைந்த ஒத்துழைப்பிலும், இந்து கலாசார அமைச்சும் திணைக்களமும் தனியாகச் சிறப்புற முதன்முதலாக அமைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளன.

மதிதகு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்கள், நல்ல பல பணிகளை முனைந்து முயன்று செயற்படுத்த முன்வந்துள்ளார்கள். அப்படிக் கோத்த பணிகளுள் ஒன்றாகவே ''கோபுரம்'' என்னும் சிறந்த சமயத் திங்கள் இதழ், தொடங்கி வெளியிடப்படுகின்றது. இவ் வெளியீட்டுத் தொடக்க விழா, திருவாதிரை விழாவினை யொட்டி நடைபெறுவது பெரிதும் சிறப்புக்குரியது. திருவாதிரை, திருவோணம் என்னும் இரண்டு நட்சத்திரங்களே, 27 நட்சத்திரங்களுள் ''திரு'' என்னும் சிறப்பு அடைமொழியினைப் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் இவையிரண்டும் முறையே சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் உரிய நாள்களாக விளங்குதலேயாகும். திருவாதிரையானது, சிவபெருமானுக்கேயுரிய தனிச் சிறப்பான நாளாக விளங்குதலால், ''சிவபெருமான்'' - ''ஆதிரையான்'' என்று பெயர் பெறுவான். இதனை,

'' மன்னும் கனலி மதி நாண்மீன் என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் - பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு.''

என்னும் மிகப் பழைய பாடல் ஒன்று, விதந்தெடுத்துக் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றுகின்றது. சைவ சமயப் பெருந்தலைவரும் ஆசிரியருமாகிய திருஞான சம்பந்தர், திருவாதிரையிலேயே திருவவதாரம் செய்தருளினார்.

'' அருக்கன்முதற் கோள்அனைத்தும் அழகியஉச்
[சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும்
தழைத்தோங்க.''

திருஞான சம்பந்தர் தோன்றியருளினார் என்று, பெரிய புராணம் கூறுகின்றது, தோன்றியது மட்டுமன்றி, அவர் சிவஞானப் பால் உண்டதும்; திருவாதிரை நாளிலே யாகும். இத் திருவாதிரை நாளிலேயே நம் சேக்கிழார் பெருமான், தமது பெரிய புராணத்தை அரங்கேற்றத் தொடங்கினார்; திருவாதிரை நாளிலேயே அதனை நிறைவும் செய்தார். ''முத்து விதானம் மணிப் பொற் கவரி'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் திருநாவுக்கரசர் பெருமான், ''அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்'' என்று, திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை விழாவின் சிறப்பினை விளக்கியருளியுள்ளார்.

இத்தகைய பல சிறப்புக்கள் மிக்க திருவாதிரை நாளில், இலங்கை அரசின் இந்து கலாசார அமைச்சர் மதிதகு திரு, செல்லையா இராசதுரை அவர்களின் பெரு முயற்சியில், ''கோபுரம்'' என்னும் இத் திங்கள் இதழ் தொடங்கி வெளியிடப்பெறுவது, பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

திருவாதிரை நாள் ஒரு புறம் இருக்க, இந்தக் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி சந்நிதியில் ''கோபுரம்'' என்னும் செந்தமிழ்த் திங்கள் இதழ் வெளியிடப் பெறுவதும் மிகப் பொருத்தமான சிறந்த செயலேயாகும். நமது சைவசமயத்துக்குரிய பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், நம்பியாண்டார் நம்பிகள் போற்றிய திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருளினாலும், மெய்கண்டார் வழிபட்ட திருவெண்ணெய்நல்லூர்ப் பிள்ளையாரின் அருளினாலுமே, நமக்குக் கிடைத்தன. நமது தோத்திரம் சாத்திரம் என்னும் இரு வகைப் பெருநூல்களும், நமக்குக் கிடைப்பதற்குத் துணைபுரிந்தருளிய விநாயகப் பெருமானின் சந்நிதியில், ''கோபுரம்'' இதழ் முதன்முதலாக வெளியிடப்பெறுவது,

'' சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்,
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்,
இன்றெழுந் தருளப் பெற்ற பேறு இதனால்
எற்றைக்கும் திருவருள் உடையோம்''

என்று பெரிய புராணத்தின் கண் வருவதுபோல, நம் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு சிறந்த நல்ல அறிகுறி என்று கூறலாம்.

'' என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று திருமூலர் பாடுவதுபோல, நமது அமைச்சர் மதிகரு இராசதுரை அவர்களும், தமிழ் மொழி, இலக்கியம், கலை, சமயம், பண்பாடு முதலியவற்றை வளர்க்கும் உயர்ந்த குறிக்கோள் கொண்டவர். அதற்காக முனைந்து முயன்று தீவிரமாகத் தொண்டாற்றிப் பாடுபடும் இயல்பினர். தமிழ் நலம் சான்ற அவர்தம் பேச்சாற்றலும், நாவன்மையும், பெரிதும் போற்றத் தக்க மாட்சிமையுடையன. பொதுநலத் தொண்டுகள் புரிவதிலும், தமிழ் வளர்ப்பதிலும், அவற்றுக்கெனச் சலியாது அல்லும் பகலும் உழைப்பதிலும். இன்பங் கண்டு மகிழ்பவர் நமது அமைச்சர் அவர்கள். இறைவனின் திருவருளே, அவர்தம் உள்ளுணர்வைத் தூண்டி, ஆட்கொண்டு, இந்து கலாசார அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொள்ளச் செய்து, அதுவே இந்தக் ''கோபுரம்'' என்னும் சிறந்த திங்கள் இதழையும் தோற்றுவித்துத் தொடங்கியருளியதாதல் வேண்டும்.

''கோபுரம்'' என்னும் பெயரில், இத் திங்கள் இதழ் வெளிவருவது, இதன் உயரிய கொள்கைகளையும், குறிக்கோள்களையும் விளக்குகின்ற முறையில், அமைந்துள்ளது. ''கோபுரம்'' நமது சமயச் சின்னம். தமிழ்ப் பண்பாட்டின் சின்னம், அம் முறையில் ''கோபுரம்'' இதழும் சமயமும் தமிழும் வளர்க்கும் குறிக்கோள் கொண்டது. கோபுரம் உயர்ந்து விளங்குதல் போல, இவ் விதழும் உயர்ந்து ஓங்கும் என்பதில் ஐயமில்லை. அழகும் சுவையும் ஆன்மிகமும் கோபுரத்திற் குடிகொண்டுள்ளன. அதுபோலவே இவ் விதழும் இலக்கியச் சிறப்பும், சுவையழகும், ஆன்மிகப் பண்பாடும் பரப்பி வளர்க்கின்ற பண்புடையதாகும். கோயிலின் கருவறையை அணுகி இறைவனைக் கண்டு வணங்க இயலாமல், நெடுந்தொலையில் உள்ளவர்களுக்கும் இறையுணர்வை எழுப்பி அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்து, பலவகை நலங்களை விளைவிப்பது தூல லிங்கம் எனப்படும், கோபுர தரிசனம். அதுபோலவே, நமது இலக்கிய சமய சாத்திர நூல்களை நுணுக்கமாக ஆழ்ந்து ஆராய்ந்து, கற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு, இக் ''கோபுரம்'' என்னும் இதழ், பெரிதும் துணை புரிவதாகும்.

ஒரு கோபுரத்தின் கண் எண்ணற்ற பல சுதை வேலைப்பாடுகளும், அற்புதச் சிற்ப நுணுக்கங்களும், அழகிய பற்பல காட்சிகளும் அமைந்திருப்பது போலவே, இக் ''கோபுரம்'' இதழும், அரிய பெரிய கருத்துக்களும், ஆராய்ச்சி நுட்பங்களும், அழகிய பற்பல தெளிவான விளக்கங்களும், கண்ணைக் கவரும் எழில் மிக்க தெய்வீகத் திருவுருவப் படங்களும், அறிவுக்கு விருந்தளிக்கும் பற்பல கட்டுரைகளும், கொண்டு விளங்கும் என்பது திண்ணம். இன்று தோன்றி நாளை மறையும் சில சில இதழ்கள் (Books for the hour) போல இல்லாமல், என்றும் நின்று நிலைபெற்று விளங்கும் (Books for ever) சிறப்பு வகையினதாகக் ''கோபுரம்'' இதழ் விளங்கும் என்று நாம் அனைவரும் நம்பலாம். ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர், அருட்டிரு விபுலானந்த அடிகள், தவத்திரு யோகர் சுவாமிகள் போன்ற பெருமக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, நம் தமிழுக்கும் சமயத்துக்கும் இக் ''கோபுரம்'' என்னும் திங்கள் இதழ், சிறந்த பணியாற்றி மேலும் மேலும் வளர்பிறை போல வளர்ந்தோங்கி, நின்று நிலைபெற்றுத் திகழவேண்டும் என்று, எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை இறைஞ்சுகின்றேன். இலங்கை வாழும் சைவத் தமிழ் மக்கள் அனைவரும், ஒருமுகமாக, இச் சிறந்த திங்கள் இதழினைப் போற்றி ஆதரித்து வளர்ந்தோங்கச் செய்தல் வேண்டும் என்று, பெரிதும் பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

சிறந்துயர்ந்த பெருமக்களின் ஆதரவினாலும் முயற்சியினாலும் ஊக்கப்பாட்டினாலுமே, ஒப்புயர்வற்ற சிறந்த இலக்கியங்கள் தோன்றும் என்று அறிஞர் கூறுவர். இராசராச சோழனால் சைவத் திருமுறைகள் தொகுக்கப் பெற்றன. இரண்டாம் இராசராசன் ஒட்டக்கூத்தர், தக்கயாகப்பரணி முதலிய நூல்களை இயற்றினார். முதற் குலோத்துங்க சோழனின் காலத்தில், கலிங்கத்துப்பரணி தோன்றியது. இரண்டாம் குலோத்துங்களின் வேண்டுகோளால், சேக்கிழார் அருளிய பெரியபுராணம் எழுந்தது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில், இராமாயணம் என்னும் இனிய கவிதை நூலினைக் கம்பர் இயற்றி உதவினார். அம் முறையில் இக் காலத்தில் இந்த ஈழ வளநாட்டில், நமது மாண்புமிகு அமைச்சர் இராசதுரை அவர்களின் பெரு முயற்சியால், ஆக்கப் பணிகளால், இந்தப் பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு, திணைக்களம் முதன்முதலாக அமைக்கப் பெற்று, யாவரும் போற்றும் வகையில் இனிதாக இயங்கத் தொடங்கியுள்ளது. அதன் பயனாக எழுந்துள்ள இக் ''கோபுரம்'' இதழும் ஓங்கி உயர்ந்து வளர்ந்து சிறந்தோங்க, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வழிபடுகின்றேன்.

(''புலவர் ஏறு'' திரு. முருகவேள் அவர்கள், அவ் வேளையிலே இயற்றிப் பாடி, விளக்கம் அளித்த வாழ்த்தியற் கவிதைகளை 36ம் பக்கத்திலே காணலாம்.)

— ஆசிரியர்

## மதிப்புரை

# 'கோபுரம்'

'ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகு ஒட்டும் அன்பொடும் வணங்கி
ஓவாதே இரவு பகல்
உணர்வோர் சிந்தைத் திருகுஒட்டும்'

என்று விநாயகர் வணக்கத்துடன் ஓங்கார அமைப்புடன் அலங்காரமாக அமைந்த 'கோபுரம்' முதலாவது வெளியீடு உண்மையிலே ஒரு கோபுரமாக, வண்ணம் செய்கின்றது. திருகு ஒட்டிச் சிவ சிந்தை செய்ய ஒரு ஏடாக விளங்கும் அறிகுறி இங்கு காணப்படுகிறது.

அடிப்படையில் ஒற்றுமைக்குப் படி சமய சமரசம் என்ற சஞதிபதி அவர்களின் கருத்தும் பொருத்தமாகின்றது.

''தூய இலக்கியச் செந்தமிழில் கலவையும் கொச்சையும் மண்வாசனையும் சாராத வகையிலே'' கட்டுரைகள் வரையப்பட வேண்டும் என்று வரைவிலக்கணம் வகுத்த ஆசிரியனின் இத் துணிந்த விண்ணப்பத்தை இவ்வழி நிற்கும் இந்து சாதனம் இதய பூர்வமாக ஏற்கின்றது. தென்புலோலியூர் திரு.மு. கணபதிப்பிள்ளை அவர்கள் போன்ருேருக்கே இத் துணிவுண்டாகும். புலோலி புலமைப் பீடம் மட்டும் அன்று. புனித புலமைப் பீடம் — சைவப் பெரியாரின் தவத்துக்குரிய ஊரல்லவா?

ஒழுக்கத்தையும் உயர்ந்த குறிக்கோளையும் போற்றிப் பரப்பும் பத்திரிகைகள் அரியன: ஆகையாற் 'கோபுரம்' வரவேற்கப்பட வேண்டியதென்று ஆசி சொல்கிருர், பிரதமர் பிரேமதாசா அவர்கள்.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் சமயம் என்ருல் என்ன என்று பொழிப்பாகத் தொகுத்துரைக்கும் வகையில் ஆன்ருேர் நூல்களாம் தொல்காப்பியம், திருக்குறள் என்பன சமயத்தைப் பற்றி சுட்டிக் காட்டியுள்ளன என்பதை எடுத்துக் காட்டுவது இக் கால முற்போக்காளரை எண்ண வைக்கும் தகையது.

திங்கள் இதழ் ஆம் கோபுரம் தெய்வத்தின் திருவிடம் என்றும் இது திருப்பணியாகும் என்றும் அமைச்சர் திரு. தொண்டமான் அருமையாக வருணித்திருக்கின்ருர்.

எல்லாம் சிவமயம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இச் சரீரம் ஆலயம் அல்ல அந்தகாரத்தில் இருக்க ஒண்ணுது அங்கு ஞான விளக்கு ஏற்றப்பட வேண்டும் என்ற வகையிற் கருத்தெடுத்துக் 'கோபுரம்' இவ் விளக்காகட்டும் என்று சுவாமி பிரேமாத்மானந்தா வாழ்த்துகின்றனர்.

கருத்து மணம் கமழ்ந்து சிந்தனைத் தேன் ததும்பும் இதழாக இத் திங்கள் ஏடு தரத்தில் மிக்கதாய்ப் பரவ அருளுரை வழங்கியுள்ளனர் நல்லை ஆதீனப் பரமாசாரிய சுவாமிகள்.

என்றும் எல்லோராலும் நன்ருக எடுத்துக் காட்டப்படும் புறநானூற்று வரிகளின் பொருத்தமான பொருள் இதுவென்று பல்லவியாகத் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதை விட்டு முன்னடியையே சொன்னமையாற் பலர் உட்பொருளை அறியா திருந்தனர் என்றதை வழமையான பாங்கில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி அவர்கள் விளக்கியதவ்வளவும் போதும் 'கோபுரம்' வெளியீடு வாசிப்போர் மனத்தைச் சுத்தி செய்யவும் 'தன்னைத் தான் காதலனுயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப் பால்'' என்றறியவும் உண்மைத் தரிசனத்துக் குதவியாகும் என்றன நன்று.

மத மாற்றம் அநர்த்தம் என்னை எம் மதமும் சம்மதம் என்று ஶ்ரீகாஞ்சி காம கோடி பீடா ஜகத் குரு அழகாகக் கூறியிருக்கின்றனர். இந்துக்கள் கோபுரத்தைப் படித்து அறிந்தால் மதம் மாற எண்ணுர் என்பது இதனுற் பெறப்படுகின்றது.

இத் திங்கள் வெளியீட்டுக்குக் கர்த்தாவாகும் அமைச்சர் இராசதுரையவர்கள் இலங்கை மணித்திருநாடு— ஓர் இன்பமயமான நாடு என்று சான்றுகள் பல காட்டி இங்கல்லவா 'கோபுரம்' அமைய வேண்டும் என்றுரைப்பார்போல ஆசி வழங்கியிருக்கின்றனர்.

ஆசிரியர் அர்த்த விருத்தியாகத் திருமூலரின் ஒரு மந்திரத்தை ஓதிக் கோபுரப் பெருமையைச் செம்மையாகத் தெருட்டி எல்லோரின் நல்லாதரவையும் தமிழ்ப் பண்பினிற் சால வேண்டுகின்றனர்.

கோபுரம் கால்கோள் கொள்ளும் பொழுது பல்வகைத் திரவியங்கள் தானியங்கள் பரவித் திருநீறு சந்தனம் குங்குமம் சாத்திப் பூசை செய்வார்கள் சிவ ஆசாரியர்கள்.

அவ்வாறே இந்த இதழின் முனை எழும் பொழுது முன் சென்ற மூதறிஞர்களின் முது மொழிகளாம் திரவியங்களை ஆசாரியர்போல இதழ் ஆசிரியர் எழுத்துக்கலை இயற் சாத்திர விதிக்கிணங்க அமைத்திருப்பது பொருந்தும்.

சற்குருமணியின் மணி வார்த்தை, சைவப்பெரியாரின் பொன்மொழி, விபுலானந்த சுவாமிகளின் உள்ளக் கமலமும் கூப்பிய கைக் காந்தளும் ஆம் மெய்ம்மலர்கள், மதுரை ஆதீன சுவாமிகளின் புண்ணியப் பொருள்-இவற்றை யெல்லாம் தேர்ந்தெடுத்து அத்திவார அடிப்படியில்

பிற தொன்மை வாய்ந்த சொன் முத்துக்களுடன் முறையாகப் பரவி யுள்ளார் பண்பு நிறைந்த ஆசிரியர்.

சைவநெறி காப்பதிலே 'கோபுரம்' கண்ணுங் கருத்துமாயிருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவது போன்று நவாலியூர்த் தங்கத் தாத்தா—பலிப் பாவம் பார்க்க முடியாது பலிக் கடாவின் தாயாட்டின் வாயிலாக அன்புணர்ச்சி அழுத்தும் இரங்கற் பாக்கள் இவ் விதழிலே எம் மனத்தையும் 'அம்ம' என்று சொல் லிக் கசிய வைக்கின்றன.

பத்திரிகை வித்தகர்கள் இருவர்; தினபதி ஆசிரியர் ஒருவர், வீரகேசரி முன்னாள் ஆசிரியர் மற்றையவர். திரு. சிவநாயகம் அவர்கள், கோபுரங்கள் எத்தகைய எழிலுடன் சைவாலயங் களிலே தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் மக்கள் உய்வான் வானோங் குந் தத்துவத்தைக் குறிக்கின்றனவோ அத்தகைய அறிவுக் கோபுரத்தை அமைக்கும் பான்மையில் இந்து சமய அமைச்சின் சிந்தனைக் கோபுரமும் எழுந்திருக்கின்றதென்று விரித்து ஓவியக் காட்சியுடன் விளங்க வைக்கின்றார்.

பரமனைப் பாடிப் பரகதியடையலாம் என்ற பெருநெறியைக் கதை விதமாக நயம்பெற நவில்கின்றார் திரு. ஸ்ரீநிவாஸ் அவர்கள்.

கவிஞர் கண்ணதாசன் காட்டும் கருத்து கோபுரம் வான் அளாவுவது, அந்த வானமோ ஞானத்துக்கிடாகாது. இப் பொருளைக் 'கோபுரம்' மறைமுகமாக எடுத்துரைக்கும் என்பது 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்றெடுத்தமை இதற்காகப் போலும். மன்னனும் மாசறக் கற்றோனும் என்று மகாகவி வேற்றுமைப் படுத்திய கருத்தை விரித்து வேந்தனையும் விண்டவரையும் பற்றி ஒப்பு நோக்கியிருக்கின்றார்.

'காண்கின்ற கண்களைப் பொறுத்தே காண்கின்ற பொருளும் தோன்றும்' என்ற கருத்தை 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்ற மந்திர சுலோகத்தை விளக்கிக் கோபுரத்தைக் காண்கின்ற கண்களைப் பொறுத்ததே கோபுரத்தின் பொலிவு எனச் சுட்டிச் சொல்கின்றார் கலாநிதி கந்தையா அவர்கள்.

'உயிர்கள் முத்தி பெறும் முறைமையை விளக்குதலே முதல் நோக்காகக் கொண்டது கந்த புராணம் என்ற சைவப் பெரியாரின் கருத்தை விரித்து விளக்குகின்றார் திருமுருக கிருபானந்தவாரியார்.

கோயில் நாகரிகத்தைப் பற்றியுரைத்தால் அது வாயிலாகக் கோபுரத்தை விளக்குவதாகும் என்றபடி திரு. இ. இரத்தினம் எழுதுகின்றார். கோபுரங்களோ நம்முடைய சிறு பான்மையை நமக்குக் கௌரவமாக எடுத்துக் காட்டுகின்றனவென்று திரு.டி.கே. சிதம்பரநாத முதலியார் எப்பொழுதோ சொல்லியது இப்பொழுது 'கோபுரம்' ஆசிரியர் கைக் கெட்டி இவ் வெளியீட்டின் நோக்கத்தை நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது.

நல்லவை பல் வகையாக நறுமணங் கமழும் சிந்தனை மலர்களால் அருச்சிக்கப்பட்டவாறு 'கோபுரம்' திங்கள் வெளியீடு மக்கள் மத்தியிற் காட்சியளிக்க வைத்த அறிஞர்களின் அரும்பணி பெரும் பணியே. திங்கள் தோறும் தேசுடன் கோபுரம் காட்சி கொடுத்த வண்ணம் திகழும் என்பதெங்கள் எண்ணம்.

(இந்து சாதனம், தை 1981.)

## திருவூர்ப் பெயர்கள், எப்படி மாறிவிட்டன!

சங்க காலத்தில் புலவர், புரவலர் முதலியோர் பெயர்கள் எல்லாம் தமிழாகவே இருந்தன. 10-ம் நூற்றாண்டுக்குப் பின் சங்கநூற் பயிற்சி தமிழ் நாட்டில் அருகி வந்திருப்பதால், அக் காலமுதல் தமிழ் மக்கள் சங்க காலப் புலவர் முதலியோர் பெயர்களை இடாது போயினர் என்று தெரிய வருகின்றது.

7-ம் நூற்றாண்டு முதல் 9-ம் நூற்றாண்டு வரையுள்ள தேவார காலத்தில் சிவபெருமான் கோயில் கொண்ட திருவூர்ப் பெயர்கள் எல்லாம் தூய தமிழாகவே இருந்தன. திருக்கோயில்களில் அமர்ந்துள்ள இறைவன் இறைவியர் திருப்பெயர்கள் எல்லாம் தமிழாகவே இருந்தன. அங்ஙனமே திருமால் கோயில் கொண்டுள்ள திருவூர்ப் பெயர்களும், திருமால் கோயில்களில் உள்ள இறைவன் இறைவியர் பெயர்களும் தமிழாகவே வழங்கின.

சேக்கிழார் பெரியபுராணத்தில் அடியவர் பெயர்கள் எல்லாம் தமிழாகவேயுள்ளன. பன்னிரு ஆழ்வார் திருப்பெயர்களும், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், வில்லிபுத்தூரார் முதலிய பிற்காலப் புலவர் பெயர்களும் தமிழாகவே உள்ளன.

திருப்புகழ் பாடிய அருணகிரியார் காலத்தில் வடமொழிப் பெயர்கள் பெருவாரியாக வழங்கக் காண்கின்றோம்.

எனவே, தேவார காலத்திற்கும் அருணகிரியார் காலத்துக்கும் இடையில் வடமொழியாளர்கள் திருவூர்ப் பெயர்களையும், இறைவன் இறைவியர் பெயர்களையும் சமக்கிருதத்தில் மொழி பெயர்த்து வழங்கச் செய்து விட்டனர் என்று தெளிவாகின்றது.

எடுத்துக்காட்டாக, முதுகுன்றம், மறைக்காடு, குடமூக்கு, மயிலாடுதுறை, திருப்பருப்பதம் என்னும் திருவூர்ப் பெயர்கள், தேவாரத்திற் காணப்படுகின்றன. அவை பின்னர் முறையே விருத்தாசலம், வேதாரண்யம், கும்பகோணம், மாயூரம் (மாயவரம்), ஸ்ரீசைலம் என மொழி பெயர்க்கப்பட்டு இப்போது வழங்கி வருகின்றன.

அங்ஙனமே திருமால் திருவூர்களாகிய திருவரங்கம், திருவில்லிபுத்தூர் என்பன ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் என வழங்கி வருகின்றன.

திருக்கோயில்களில் தூய தமிழில் வழங்கிய இறைவன் இறைவியர் பெயர்களாகிய மங்கைபாகன், தாயுமானச்செல்வர், நெல்லிக்காப் பெருமான், பாகம்பிரியாள், நீலக்கண்ணி, இளங்கிளியம்மை, பெரியநாயகி என்பன முறையே அர்த்தநாரீஸ்வரன், மாத்ருபூதேஸ்வரர், ஆமலகேஸ்வரர், அர்த்தநாரி, நீலாயதாக்ஷி, பாலசுகாம்பிகை, பிருகதாம்பாள் என மொழி பெயர்த்து வழங்கப்பெறுகின்றன.

— தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

### கொம்பனித்தெரு

## அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

# இராசகோபுர நிதி திரட்டல்

கொம்பனித் தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலே அமைக்கப்படவிருக்கும் இராச கோபுரத்துக்கான நிதி திரட்டல், 8.2.81 தேதியன்று, பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சர், மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த ஆரம்ப விழாவிலே சிறப்புச் சொற்பொழிவாற்றிய 'தினபதி' ஆசிரியர், திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள், இராசகோபுரம் அமைப்பதன் தத்துவக் கருத்துக்களை எடுத்துக் காட்டியதுடன், அறிவியற் றுறையினும் புகுந்து இன்று வரை எவரும் காட்டாத பௌதிக உண்மைகளையும் தெளிவுபெற விளக்கிக் காட்டினார்கள். தீர்த்தம், தல விருட்சம் ஆகியவை பற்றியும் சான்றுகள் பல காட்டி 'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என வழங்கும் பாடலினை எடுத்தோதி, எமது முன்னோர் கோயில்களைக் கலைக்கூடங்களாகவும், சுவடிச் சாலைகளாகவும், அறங்களைப் பதியும் ஆவணக் களரிகளாகவும், முறை வழங்கும் மன்றங்களாகவும், நோய் பிணி தீர்க்கும் மருத்துவச் சாலைகளாகவும், ஏதிலார்க்கு ஊண் உடை நல்கி வாழ்வளிக்கும் ஆதுலர் சாலைகளாகவும், இயல் இசை நடனம் ஆகியவை வளர்ச்சி பெறுவதற்கான தனி நிலையங்களாகவும் திகழ வைத்த தனிச் சிறப்பினைப் போற்றினார்கள். அதன் பின், திருமதி. பாலம் இலக்குமணன் அவர்களும், திரு. கு. குருசாமி அவர்களும் குறிப்புரை கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சரவர்கள், பயன்தரும் இந்தத் தெய்வத் திருப்பணிக்குப் பொது மக்கள் ஆதரவளிக்க வேண்டும் எனக் கோரி, திருக்கோயில் மாண்பினை எடுத்து விளக்கினார்கள். விழா முடிவு பெறுவதன் முன்னதாகவே மூன்றரை இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினைத் திரட்டி விட்டதாக, கோபுர அமைப்பு வேலையினைப் பொறுப்பேற்றிருக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவரும் கண் வைத்திய நிபுணருமான டாக்டர் (திருமதி) சிவயோகம் ஸ்ரீ ஸ்காந்தராசா அவர்கள் தெரிவித்து நன்றி கூறினார்.

# பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவி

பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சர், மாண்புமிகு திரு. செல்லையா இராசதுரை அவர்கள், வட மாகாணத்திலும், மலையகத்திலுமுள்ள இந்து ஆலயங்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிப்பதற்கானதொரு விதப்புரையினை 18. 2. 1981 தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே முன்வைத்து, அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நிதியுதவிக்காக மொத்தம் 1 இலட்சத்து 97 ஆயிரம் ஒதுக்கிடப்பட்டிருக்கிறது. நிதியுதவி பெறும் ஆலயங்களினதும் சமய நிறுவனங்களினதும் விவரங்களை இங்கே காணலாம்.

(1) நுவரெலியா - இலங்காதீஸ்வரர் ஆலயம்: ரூபா 15,000

(2) திருகோணமலை - சிவயோக சமாசம்: ரூபா 15,000

(3) கம்பஹா - தொழுநோய் ஆஸ்பத்திரி முருகன் ஆலயம்: ரூபா 10,000

(4) மன்னார் - ஸ்ரீ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்: ரூபா 10,000

(5) புத்தளம் - திரௌபதி அம்மன் ஆலயம்: ரூபா 12,000

(6) மட்டக்களப்பு - பாண்டிருப்பு ஆலயம்: ரூபா 10,000

(7) யாழ்ப்பாணம் - கரவெட்டி கலிகைச் சந்தியிலுள்ள சிறுபான்மைத் தமிழர் வழிபடும் ஆலயம் ரூபா 10,000

(8) பதுளை - நாரங்கலை கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்: ரூபா 10,000

(9) பதுளை - ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்: ரூபா 15,000

(10) நுவரெலியா - முத்துமாரியம்மன் ஆலயம்: ரூபா 20,000

(11) யாழ்ப்பாணம் - நல்லை ஆதீனம்: ரூபா 20,000

(12) மட்டக்களப்பு - இராமகிருஷ்ண மிஷன்: ரூபா 25,000

(13) நாவலப்பிட்டி - ஆத்மஜோதி நிலையம்: ரூபா 25,000.

# கொழும்பு மாநகரில்
# "கோபுரம்" இதழ் வெளியீட்டு விழா

திருக்கோயில், 1980 புரட்டாசி — ஐப்பசி இதழிலிருந்து.

இலங்கை அரசின், பிரதேச அபிவிருத்தி—இந்து சமய—தமிழ் அலுவல்களின் அமைச்சர் மாண்புமிகு திரு. செல்லையா இராசதுரை அவர்களின் அரும்பெரும் முயற்சியினாலும், ஆற்றல் மிக்க தீர்க்கதரிசன நோக்கினாலும், அவர் தம் இந்து சமயத் திணைக்களத்தின் சார்பில், 'கோபுரம்' என்னும் செந்தமிழ்த் திங்கள் இதழ் ஒன்று, நமது தமிழ் நாடு அரசின் அறநிலைய ஆட்சித்துறையின் திங்கள் இதழாகிய 'திருக்கோயில்' போல, அண்மையில் தொடங்கப்பெற்றது. அவ் விதழின் வெளியீட்டு விழா, கொழும்பு மாநகர்க்கு அணித்தேயுள்ள மருதானைக் கப்பித்தாவத்தை அருள்மிகு கயிலாசநாத சுவாமி கோயிலின், அருள்மிகு பாலசெல்வ விநாயகமூர்த்தியின் சந்நிதியில், *21. 12. 80* ஞாயிறன்று, மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை அரசின் பிரதேச அபிவிருத்தி—இந்து சமய—தமிழ் அலுவலர்களின் அமைச்சர் மாண்புமிகு திரு. செல்லையா இராசதுரை, ஒய்வுபெற்ற நீதியரசர் திரு. சிவசுப்பிரமணியம், பேராசிரியர் திரு. கே.இலட்சுமண ஐயர், திரு. எஸ். டி. சிவநாயகம், இந்து சமயத் திணைக்கள உயர் அலுவலர்கள் திரு. சிவ. சி. மாணிக்க வாசகர், திரு. வே. ந.சிவராசா, கலாநிதி. திரு. ஆ. கந்தையா, 'கோபுரம்' இதழாசிரியர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை முதலிய பெருமக்கள் பலர், விழாவிற் கலந்து கொண்டனர்.

அது போது, ஏற்கனவே *(4.12.80 முதல் 23.12.80 முடிய)* ஈழத்தில் சைவசித்தாந்தத் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்த அழைக்கப்பெற்றுச் சென்றிருந்த 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. இராசதுரை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவ் விழாவில் ஒரு சிறப்புரை நிகழ்த்தியதுடன், 'கோபுரம்' இதழ் நன்கினிது உயர்ந்து வளர்ந்தோங்கிச் சிறந்த முறையில் சமயநெறியினையும், செந்தமிழ் மொழியினையும் செழிப்பித்து ஒளிர்தல் வேண்டும் என்று விரும்பி, பின்வரும் வாழ்த்தியற் கவிதையினையும் இயற்றிப் பொருள் விளக்கம் செய்தார். அப் பாடல்கள் வருமாறு:—

அறுசீர் விருத்தம்

அன்பார் அமைச்சர் இராசதுரை அவர்கள்,
[சமயம் தமிழ் வளர்க்க

இன்பார்ந் தொளிர்கோ புரம் என்னும் இதழைத்
[தொடங்கி நடத்தலுற்றார்

பண்பாடு, அன்பு, நல்லொழுக்கம், பக்தி,
[சமாதானம் பரப்பி,

நன்றாய் இக்கோ புரம் இதழ்தான், நலமே வளர்க!
[வாழ்க நன்றே!

இந்து சமயக் கலாசார இனிய
[அமைச்சொன் றேற்படுத்தி,

முந்தெப் போதும் இலாதொர்திணைக் களமும்
[முயன்று நன்கமைத்து,

செந்த மிழ்க்கோ புரம் இதழும் சிறப்பாய்த்
[தொடங்கும் இராசதுரை

நந்தம் அமைச்சும், ஸ்ரீலங்கா நல்ல அரசும், நனிவாழ்க.

அதியுத் தமநற் சனாதிபதி ஆன்ற ஜெயவர்த் தன
[அவர்கள்,

மதிநுட் பஞ்சால் பிரதமராம் மாண்பார்
[பிரேம தாசர், மற்றும்

துதிந லஞ்சால் 'கோபுரம்' நல் இதழைத்
[தொடங்கும் இராசதுரை

முதல்நல் அமைச்சர் யாவருமே, முழுதும் சிறப்பின்
[வாழ்க நன்றே

''கோபுரம்'' இதழ் உயர்ந்தோங்கி வளர்க.

அமைச்சர் இராசதுரை அவர்களின் ஆக்கப் பணிகள்

மேன்மேல் வெல்க!! செழிக்க! வாழ்க!

—ஆசிரியர்.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம்




உபயம் : தொல்பொருட் டிணைக்களம், கொழும்பு.

''தம்பிரான் தோழர்'' எனப் போற்றப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு அழகான தாக வார்க்கப்பட்டதில்லை எனக் கலைப் புலவர்கள் கூறுகின்றார்கள். பொலநறுவையிலே சோழர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயங்களிலே வைத்துப் பூசிக்கப்பட்டு வந்த இத் திருவுருவம் அந்நியர் ஆட்சிக்காலத்திலே நிலத்துட் 'புதைத்து வைக்கப்பட்ட தொன்றாகும். 1906-ம் ஆண்டிலும், 1960-ம் ஆண்டிலும் இத்தகைய இந்து விக்கிரகங்கள் பல கண்டெடுக்கப்பட்டன. அவற்றையெல்லாம் கொழும்பு அரும்பொருட் காட்சிச்சாலையிலே காணலாம்.

# கோபுரம் ● කෝපුරම් ● KOPURA

## பொலநறுவைச் சிவன் கோயில்



உபயம்: தொல்பொருட டிணைக்களம், கொழும்பு.

எமது நாட்டிலுள்ள ''பொலநறுவை'' நகரம் சோழமன்னர் சாசனங்களிலே ''புலைநரி'' என வழங்கப்பட்டிருக்கிறது. ''புலஸ்தி நகரம்'' எனவும் கூறப்படுவதுண்டு. இலங்கையிலே, சோழர் ஆட்சி நிலவிக்கொண்டிருந்த காலத்திலே, அம் மன்னர்கள் பொலநறுவையைத் தமது தலைநகராக்கி, அங்கே பல சிவாலயங்களையும் விட்டுணு வாலயங்களையும் அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் அமைத்த சிவாலயங்களுள் ஒன்று தான் மேலே காண்பது. அழிந்து கிடக்கின்றது.